
இது
# நம்தேசம்

பார்வை 01 | வியூகம் 11 | மார்கழி – 2013 | பக்கங்கள் : 20 | விலை ரூபா : 30.00

# சர்வதேச விசாரணை வேண்டும்



## உள்ளே

சுமந்திரனின் உண்மைத் தோற்றத்தை வெளிக்காட்டிய அமெரிக்க மாநாடு 04

கமரூனின் யாழ் வருகையும் கூட்டமைப்பின் வரலாற்றுத் துரோகமும் 05

எம் கோரிக்கைகள் தான் எமது உயிர் 10

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் தமிழர்களின் வரலாற்றுச் சின்னம் 14

தேசத்தின் உண்மைக் குரல்

## மாவீரர் தினத்தை நினைவு கூரத்தடை – அரசு அறிவித்தது

மாவீரர் தினத்தை அனுஸ்டிக்க கூடாது என்று அராசாங்கம் அறிவித்திருந்தது. அவ்வாறு அனுஸ்டிப்பது சட்டப்படி தண்டணைக்குரிய குற்றமாகும் என்று அரசு கூறியுள்ளது. விடுதலைப்புலிகளை கொண்டாடுவதோ அல்லது அவர்களை ஊக்குவிப்பதோ தண்டணைக்குரிய குற்றமாகும் என தேசிய பாதுகாப்பு தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 27 திகதி தமிழீழ விடுதலைப்புலிகள் போராளிகளாக இருந்து உயிர்நீர்த்த விடுதலைப்புலிகளை அவர்களது ஆதர வாளர்கள் வெகு விமர்சையாக அனுஸ்டித்து வந்துள்ளனர். பொதுமக்களும் இத் தினத்தில் தமது உயிர்நீத்த (விடுதலைப் புலி உறுப்பினர்கள்) பிள்ளைகள் மற்றும் உறவினர்களை நினைவு கூர்ந்து வந்துள்ளனர்.

## தமிழின அழிப்பு குறித்த கேள்விகளுக்கு தலைகுனிந்த பூகோள அரசியல் ஆய்வாளர்கள்

கடந்த 15.11.2013 அன்று யேர்மனின் பேர்லின் நகரில் உலகளாவிய மக்களுக்கு இழைக்கப்படும் கொடூரங்கள். பேரனர்த் தங்களை தடுப்பது குறித்து ஒரு சர்வதேச ஆய்வுக் கருத்தரங்கு நடை பெற்றது.

'பாதுகாத்தலும் பொறுப்பேற்றலும் மற்றும் கொடுமைகளைத் தடுப்பதற்கான அமெரிக்காவின் வெளிநாட்டு கொள்கை' எனும் தலைப்பில் யேர்மனி பேர்லின் நகரத்தில் Global Public Policy Institute மற்றும் Heinrich-Böll-Stiftung ஆகிய அமைப்புக்கள் இணைந்து நடாத்திய இந்த ஆய்வுக் கருத்தரங்கில் ஈழத்தமிழர்களின் இனவழிப்பு விடையத்தில் சர்வதேசம் நடந்துகொண்ட விதம் தொடர்பாகவும் 'பாதுகாத்தலும் பொறுப்பேற்றலும்' குறித்த கொள்கை பயனின்றிப்போனமை தொடர்பாகவும் இந்த ஆய்வுக் கருத்தரங்கில் பல கேள்விகள் தொடுக்கப்பட்டன. இவ்வாறான் கேள்விகளுக்கு சர்வதேச பூகோள அரசியல் ஆய்வாளர்கள் தலைகுனிந்த நிலையை அவதானிக்க முடிந்தது.

'கொடுமைகளைத் தடுப்பதற்கான அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை' எனும் தலைப்பில் இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் அத்துடன், 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் அமெரிக்காவின் தலையீடு மற்றும் அதன் கொள்கை வகுப்பு எவ்வாறு அமைந்திருந்தது என்பது குறித்தும் உரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட யேர்மன் ஈழத்தமிழர் மக்கள் அவையைச் சேர்ந்த பிரதிநிதி திரு. சங்கர் அவர்கள். ஆய்வாளர்களிடம் ஈழத்தமிழர்களை இன அழிப்பில் இருந்து அமெரிக்கா காப்பாற்றுவதற்கு கடும் முயற்சி எடுத்திருந்தால், தமிழ்மக்கள் மீது சிங்கள அரசாங்கம் மிகவும் கொடூரமான தாக்குதல்களை மேற்கொண்டபோது ஐ.நா. தடுத்து நிறுத்தத் தவறியது ஏன்? அத்துடன், ஏன் ஐ.நா அறிக்கையின் படி 70000 மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என விளக்க முடியுமா ? என எழுப்பிய கேள்விக்கு பதில்கூற முடியாமல் தலை குனிந்த நிலையில் சமாளிக்க முயற்சித்தார்கள்.

இருப்பினும் அவர்கள் தொடர்ந்து உரையாற்றுகையில் அமெரிக்கா இலங்கை விடையத்தில் தனது பூகோள அரசியல் நலனை எதிர்பார்த்து அணுகினாலும் 2009 ஆம் ஆண்டு இலங்கையில் யுத்தம் உச்சத்தை அடையும் காலத்தில் ஒபாமா நேரடியாகவே தலையிட்டு போரை நிறுத்த முயற்சித்தார் என கூறினார்கள்.

## ஜீ.ஜீ யின் பிறந்த தின நிகழ்வு

நவம்பர் 8 காலை 10.30 மணியளவில் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகர் அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களின் 112 ஆவது பிறந்த தின நினைவு நிகழ்வினை முன்னிட்டு குருநகரில் அமைந்துள்ள அவரது நினைவுச் சிலைக்கு கட்சியின் தலைவர் திரு. இ.எ.ஆனந்தராசா மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தலைமை அலுவ லகத்தில் திரு இ.எ.ஆனந்தராஜா தலை மையில் நினைவு ஒன்று கூடலும் நடைபெற்றது. இவ் ஒன்று கூடலில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மகளீர் அணிப் பொறுப் பாளர் திருமதி. பத்மினி சிதம்பர நாதன் சிறப்புரை ஆற்றினர். இந்நிகழ்வில் கட்சியின் முக்கிய ஸ்தர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ் தர்க ளும் கலந்து நிகழ்வினை சிறப்பித்தனர்.

## முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் திறப்பு

முள்ளிவாய்க்காலில் இலங்கையரசு மேற்கொண்ட இன அழிப்பை நினைவு கூறும் வகையில் நினைவுச் சின்னங்கள் தாங்கிய நினைவு முற்றம் தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் உள்ள விளார் சாலையில் கடந்த 6-11-2013 அன்று திறந்து வைக்கப் பட்டுள்ளது

இத்திறப்பு விழா நவம்பர் மாதம் 8,9,10 திகதிகளில் நடைபெற திட்டமிட்டிருந்த போதும் இந்திய மத்தியரசு அதனை குழப்ப நீதிமன்ற தடை பெறும் முயற்சியில் ஈடுபட்ட காரணத்தினால் முற்கூட்டியே திறக்க வேண்டியநிலை ஏற்பட்டது. உலகத் தமிழர் இயக்கத்தின் தலைவர் பழ நெடுமாறன் நினைவு முற்றத்தை திறந்து வைத்தார்

இன்நிகழ்வில் உலகின் பல நாடுகளிலிருந்து புலம்பெயர் தமிழர்களும், இந்தியாவிலும், மலேசியாவிலுமிருந்து பெருமளவான ஈழ ஆதரவாளர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

தாயகத்திலிருந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், கூட்டமைப்பு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தனர்.

## பிரபாகரன் பிறந்த தினத்தன்று யாழ் நகரில் இராணுவம் குவிக்கப்பட்டிருந்தது

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 59வது பிறந்ததினம் நவம்பர் 26 என்பதனால் யாழ் நகரப்பகுதியில் இராணுவத்தினர் ஆங்காங்கே நிறுத்தப்பட்டிருந்ததுடன், ரோந்து நடவடிக்கையிலும் ஈடுபட்டிருந்தனர்.

## பாலியல் வல்லுறவு கொலைக்கு எதிரான பெண்கள் போராட்டம்

யாழ் நாச்சிமார் கோவிலடியில் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட லோகராணி தொடர்பான வழக்கு விசாரணை இரண்டாவது தடவையாக கடந்த 25-11-2013 திகதி யாழ் நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அந்நேரத்தில் நீதி மன்றத்திற்கு வெளியே கூடிய யாழ் மாவட்ட பெண்கள் அமைப்புக்கள் கொலைக் குற்றவாளியை இனம் கண்டு தண்டிக்க வேண்டும் என்றும் இவ்வாறான சம்பவங்கள் இனியும் இடம் பெறக்கூடாதென்றும் வலியுறுத்தி கவனயீர்ப்பு நிகழ்வு ஒன்றில் ஈடுபட்டிருந்தன.

## தமிழ் மக்களைப் புறக்கணித்த வரவு செலவுத் திட்டம்

2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தினை இலங்கை ஜனாதிபதி நவம்பர் மாதம் 21ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இந்த வரவு செலவுத் திட்டத்தில் தமிழ்ப் பிரதேசங்கள் தொடர்பான பெரிய ஒதுக்கீடுகள் ஏதும் இருக்க வில்லை. போரின்ால் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற வகையில் சிறப்பு ஒதுக்கீடு தேவைப் பட்டது. ஆனால் அரசாங்கம் இது பற்றி அக்கறை எதையும் செலுத்தவில்லை. வழக்கம் போலவே பாதுகாப்பு அமைச்சிற்கு பாரிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கினை பொறுத்தவரை போரினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரங்களை உருவாக்கவேண்டிய தேவை இருந்தது.குறிப்பாக வீடுகளை கட்டுதல்,தொழில்களை உருவாக்குதல், பாடசாலைகள் போன்ற பொது நிறுவனங்களின் உள்கட்டுமான வசதிகளை அபிவிருத்தி செய்தல் போன்ற பணிகள் முன்னெடுக்க வேண்டியிருந்தது. இன்றும் பாடசாலை மாணவர்கள் உட்பட பலர் செல்த்துண்டுகளை உடம்பில் காவிச் செல்கின்றனர். இவர்களுக்கு அவசர மருத்துவ வசதி திட்டங்கள் உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. அங்கவீனர்களை பராமரிப்பதற்கு விசேட ஒதுக்கீடு தேவைப்படுகின்றது. இவை எவை பற்றியும் அரசாங்கம் அக்கறைப் படவில்லை.

உண்மையில் இலங்கையின் ஏனைய மக்களின் நிலைக்கு வடக்கு கிழக்கு மக்களை கொண்டு வருவதற்கு விசேடமான திட்டங்களும் நிதி ஒதுக்கீடுகளும் தேவை. மாகாணசபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கத்தான் போதுமானது.

இது மொத்தத்தில் தமிழ் மக்களை முழுமையாக புறக்கணித்த வரவு செலவுத் திட்டமாக அமைந்தது.பேரினவாத அரசிடம் இருந்து இதனை தவிர வேறொன்றையும் எதிர்பார்க்க முடியாது என்பது உண்மைதான்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் மக்கள் நலன் எதுவும் இல்லை என ஐக்கிய தேசிய கட்சியும் ஜே.வி.பியும் ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்ட உரையினை புறக்கணித்திருந்தன. ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கலந்து கொண்டது.

தமிழ் மக்களை காட்டிக் கொடுப்பதை புரிய வைப்பதற்கு இதுமட்டும் போதும்.

# தமிழர்களின் ராஜதந்திர நகர்வுக்கு சர்வதேச அரங்கில் கிடைத்த வெற்றி

அனைத்துலக புலம்பெயர் தமிழர் ஒருமைப்பாட்டு மாநாடு கடந்த நவம்பர் 8ம் திகதி தொடக்கம் 10ம் திகதி வரை மொரீசியஸ் நாட்டில் இடம்பெற்றது. இந்த மாநாட்டின் முதல் நாள் நிகழ்வில் முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட சுமார் 150.000 ஆயிரம் தமிழர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுக்கல் திறந்து வைக்கப்பட்டது.


அதே தினம் தமிழர் தாயகத்திலிருந்து சென்றிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம், மலேசியாவிலிருந்து சென்றிருந்த பேராசியரும் மலேசியாவின் பினாங்கு மாநில பிரதி முதலமைச்சருமான ராமசாமி, அனைத்துலக ஈழத்தமிழர் மக்கள் அவையின் உறுப்பினர்கள் என்போருக்கும் மொரீசியஸ் வெளிவிவகார அமைச்சருக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று கடந்த 8ம் திகதி இடம் பெற்றிருந்தது. இந்த சந்திப்பினையும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்களான மொரீசியஸ் தமிழ் கோவில்களின் கூட்டமைப்பு ஒழுங்கு செய்திருந்தது.

இந்த சந்திப்பு இடம்பெற்று ஒரு வாரத்துக்குள்ளேயே சிறீலங்காவில் நடை பெறவுள்ள கொமன்வெல்த் மாநாட்டை புறக்கணிப்பதாக 12-11-2013 மொரீசியஸ் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய மொரீசியஸ் நாட்டின் பிரதமர் அறிவித்தார்.

இலங்கைத் தீவில் இடம்பெற்ற போரின் போது தமிழருக்கு எதிரான இனஅழிப்பு, மானிடகுலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றம் ஆகியவற்றுக்கு கடந்த பலவருடங்களாகியும் நீதி வழங்க எத்தனிக்காததை அவதானித்து வந்ததால் மனித உரிமை பெறுமானங்களை பாதுகாப்பது என்ற அடிப்படையிலேயே சிறீலங்காவில் இடம்பெறவுள்ள கொமன் வெல்த் மாநாட்டை புறக்கணிக்க முடிவு செய்ததாக கூறப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழ் தரப்புக்கும், மொரீசியஸ் நாட்டின் வெளிவிவகார அமைச்சுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பும், மொரீசியஸில் அனைத்துலக புலம்பெயர் தமிழர் ஒருமைப்பாட்டு மாநாடு இடம்பெற்றமையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மொரீசியஸ் நாட்டின் இராஜதந்திரிகளுடன் நடாத்திய சந்திப்புக்களும், மொரீசியஸ் நாட்டின் பிரதமர் தமிழருக்கு நீதியை வழங்க வேண்டும் என்ற நோக்கில் சிறீலங்காவில் இடம்பெறவுள்ள கொமன் வெல்த் மாநாட்டை புறக்கணிக்க நேர்ந்தது என்று அனைத்துலக புலம் பெயர் தமிழர் ஒருமைப்பாட்டு மாநாட்டு போராளர்கள் தெரிவித்துள்ளார்.

## ஒருத்தருக்கும் சொல்லாதைங்கோ...



கூத்தமைப்பு தலைவருக்கு பொது நூலக வாசலில் நடந்த அர்ச்சினையால பலரும் கலங்கிப்போயி இருக்கினமாம். அப்படி பின் கதவால தப்பியிட்ட மெண்டு விக்கியரும் , பின்கதவு எம்பியும் பெருமூச்சோட சொன்னவையாம். ஓமய்யா சனம் கிளர்ந்தெழுந்தால் உங்கட போலிமுகங்கள் கிழிச்சு தொங்குற நாள் ரொம்ப காலத்திற்கு இல்லை.

கூத்தமைப்பு கிளி எம்பிக்கு இப்ப இரவு பகலா ஒரே பேதியாம் பாருங்கோ. தமிழரசு தலைமை அடுத்து தன்ர கையில தான் வந்து விழுமெண்டு மனுசன் நீண்டகால குறுங்கால திட்டங்கள் வகுத்து இருந்தது. அதக்குள் பின் கதவு எம்பி ,விக்கியரென பலரும் வந்து குதிக்க எல்லாம் கேள்விக்குறியாகிப் போயிட்டுது. அந்த கடுப்பில இருக்க இப்ப உள்ளூரிலேயே கதிரையாட்டம் காணத்தொடங்கியிட்டு. அதுக்காக அந்த வீரத்திருமகளுக்கு சேறு அடிக்கிறதில ஆள் முழுமூச்சோட நிக்கிதாம். சனம் அவரைத்தான் இப்ப அருவருப்போட பாக்குதெண்டது புரிஞ்சா சரி.

சொல்லச்சொல்ல கேளாமல் சனத்தையும் உசுப்பேத்தி கைப்பற்றின வடக்கு மாகாணசபையின்ர அதிகாரம் வெறும் பேப்பரிலதான் கிடக்கெண்று முதலமைச்சர் விக்கியர் போறவாற இடமெல்லாம் புறுபுறுத்துக்கொண்டு திரியிறார். வேலியால போற ஓணானை மடியுக்குள்ள பிடிச்சு விட்டுட்டு குத்துது, குடையுதெண்டு கத்தி என்ன பயன் பாருங்கோ.

வலிவடக்கு காணியெல்லாம் சுவீகரிச்சாச்சு. அதைப்பற்றி கதைத்து இனி பிரயோசனம் இல்லையெண்டு மேன்மைதங்கிய ஜனாதிபதி சொல்லிப்போட்டாராம்.சனம் குழம்புது ஐயா என்று சம்பந்தர் சொல்ல ஆ.....சரியெண்டு மனுசன் போனைவைச்சிட்டுதாம். ஆனால் அடுத்த நாள் பேப்பரில சம்பந்தன் சொல்லி சனாதிபதி எங்கட செய்தி வாசித்திருப்பார் தானே

கூத்தமைப்புக்குள் மூவர் அணிக்கு எதிராக ஜனநாயக அணி ஒன்று செயற்படத் தொடங்கியிருக்காம்.அந்தக் குழுக்காரர் பல்வேறு தரப்புக்களிடமும் ஆதரவு கேட்டு கைநீட்ட தொடங்கியிருக்கினமாம். உன்னதமான சரியான பாதையில ஆர் போனாலும் சனம் பின்னால வரும் பாருங்கோ.


## 'இது நம்தேசம்' சந்தா விண்ணப்பம்

**இது நம்தேசம் பத்திரிகையை அஞ்சலில் பெறவிரும்புவர்கள் சந்தாவிற்கு விண்ணப்பிக்கலாம்.**

**12 இதழ்களுக்கு - 600 ரூபா.**

தொடர்புகளுக்கு
ஆசிரியர்
'இது நம்தேசம்'
இல 43-3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம் 021 222 3739
மின்னஞ்சல் ithunamthesam@gmail.com

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

*பெயர் -* ........................................
*முகவரி -* ........................................
*தொலைபேசி இலக்கம் -* ........................................
*மின்னஞ்சல் முகவரி -* ........................................

*12 இதழ்களுக்கான சந்தாப்பணம் அனுப்பியுள்ளேன்*

*திகதி-* ........................ *கையொப்பம்*


# மாணவர்கள் கௌரவிப்பு

கனடா உறங்கா விழிகள் அமைப்பின் நிதி உதவியுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கல்வி மேம்பாட்டுப் பிரிவினரால் இவ் ஆண்டு இடம்பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து கிழக்கு மாகாணத்தில் மாவட்ட ரீதியில் முன்னிலை பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு கல்லடியிலுள்ள துளசி மண்டபத்தில் கடந்த 2013.10.19 சனிக்கிழமை நடாத்தப்பட்டது.

இந்நிகழ்விற்கு த.தே.ம.மு யின் கல்விமேம்பாட்டுப் பிரிவு இணைப்பாளரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளருமான தர்மலிங்கம் சுரேஸ் தலைமை தாங்கினார். இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளை அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக அருட்பணி த.ஜீவராஜ், தென்கிழக்கு பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி குணபாலன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம்(சட்டத்தரணி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்), செல்வராசா கஜேந்திரன் (முன்னாள்பாராளுமன்ற உறுப்பினர்), விஸ்வலிங்கம் மணிவண்ணன் (சட்டத்தரணி), சி.அ.யோதிலிங்கம் (அரசியல் ஆய்வாளர்) ஆகியோரும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்திருந்தனர்.

இந்நிகழ்வில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் மாவட்ட ரீதியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ மாணவிகள் 9 பேரும், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த 35 மாணவ மாணவிகளும் கௌரவிக்கப்பட்டனர். இவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

## வலி வடக்கு மக்கள் கூட்டமைப்புத் தலைமையால் திட்டமிட்டு ஏமாற்றப்பட்டுள்ளனர்

## வலி வடக்கு பிரதேச சபை உப தவிசாளர் - சஜீவன்

நவம்பர் 15ம் திகதி பிரித்தானிய பிரதமர் டேவிட்கமரூன் யாழ்ப்பாணம் வந்தபோது அவர் மாவிட்டபுரத்திற்கும் வருவார் என கூட்டமைப்பின் தலைமை கூறியதன் மூலம் வலி வடக்கு மக்கள் திட்டமிட்டு ஏமாற்றப்பட்டுள்ளனர் என வலி வடக்கு பிரதேச சபையின் உபதலைவரும், வலி வடக்கு மீள் குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுக் குழுவின் தலைவருமான சஜீவன் குற்றம்சாட்டியுள்ளார்.

அண்மையில் யாழ் ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்

மாவிட்டபுரம் போராட்டம் வலி வடக்கு மீள் குடியேற்ற, புனர்வாழ்வுக் குழுவினராலேயே ஒழுங்கு செய்யப்பட்டது. கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் போராட்டத்தில் கலந்துகொண்டு தாங்கள் ஒழுங்கு செய்ததுபோல புகைப்படமெடுத்து ஒரு தோற்றப்பாட்டைக்காட்டினார்களே தவிர ஏற்பாட்டு நடவடிக்கைகளில் எந்தப் பங்கையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை. கஸ்ரப்பட்டு போராட்டங்களை ஒழுங்கு செய்வதற்கு அவர்கள் தயாராகவும் இருக்கவில்லை.

நவம்பர் 15ம் திகதி காலையில் டேவிடகமரூன் நிகழ்ச்சி நிரலில் மாவிட்டபுர பயணம் இருக்கவில்லையென நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தெரிவித்திருந்தார். பிரித்தானிய பிரதமர் மாவிட்டபுரம் வருவதற்கு வாய்ப்புக்கள் இல்லை போராட்டத்தை யாழ் பொது நூல்நிலையம் முன் நடாத்துவோம் என முதல் நாளே நான் கூறியிருந்தேன். அதற்கு எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் எப்படியாவது கமரூனை மாவிட்டபுரத்திற்கு அழைத்துவருவர் எனக்கூறி எனது கோரிக்கையை நிராகரித்தனர்.

15ம் திகதி காலை யாழ் பொது நூலகம் அருகில் காணாமல்போனவர்களது போராட்டம் இடம்பெற்றது. மாவிட்டபுரத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 1500 ற்கும் அதிகமான மக்களையும் பொது நூலகத்திற்கு முன்னால் கூட்டிச்சென்றால் டேவிட்கமரூனின் கவனத்தை அதிகம் ஈர்க்க முடியும் என நான் கோரினேன். அப்போதும் எனது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

அதேதினம் பிற்பகல் கமரூன் மாவிட்டபுரம் வரப்போவதில்லை யாழ் பொது நூல்நிலையத்திற்கு அல்லது சுண்ணாகம் சபாபதிப்பிள்ளை முகாமிற்கு இங்குள்ள மக்களை அழைத்துச் செல்வோம் என மீணடும் வேண்டினேன். அப்போதும் அவரகள் எனது கோரிக்கையை நிராகரித்துவிட்டனர்.

இறுதியில் கமரூன் மாவிட்டபுரம் வரவில்லை 4 நாட்களாக உண்ணாவிரதமிருந்து மக்கள் நடாத்தியபோராட்டம் எவ்வித பயனுமற்று கூட்டமைப்புத் தலைமையால் வேண்டுமென்றே முடக்கப்பட்டது.

தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அனந்தி தலைமையில் நடைபெற்ற போராட்டமே கமரூன் மாவிட்டபுரம் வராமைக்குக் காரணம் எனக் கூறியிருக்கின்றார். இது தனது பொறுப்பினைத் தட்டிக் கழிப்பதற்கான கூற்று. கமரூனின் நிகழ்ச்சி நிரலில் மாவிட்டபுரம் இருக்கவில்லை என்பதும் அவ்வாறான ஓர் கோரிக்கையினை அவர்களிடம் முன்வைக்கவில்லை என்பதுமே உண்மையாகும். அதன் பின்னர்தான் உதயன் அலுவலகத்திற்கும், சபாபதிப்பிள்ளை முகாமிற்கும் கமரூன் சென்றிருந்தார்.

வலி வடக்கு மீள் குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுக்குழு அமரர் நடராசாவினால் உருவாக்கப்பட்டது. அதற்கென ஒரு செயற்குழுவும் உள்ளது. மீள் குடியமர்வை வலியுறுத்தி தொடர்போராட்டங்களையும் அது நடாத்திவருகின்றது. தற்போது திடீரென வலி வடக்கு மீள் குடியேற்றச் சங்கமென புதி ய அமைப்பு ஒன்றினை உருவாக்கியுள்ளனர். இந்த அமைப்பிற்கும் எமது மீள் குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு குழுவிற்கும் எந்தவித தொடர்பும் கிடையாது என்றும் தெரிவித்தார்.

இது நம்தேசம்

தொடர்புகளுக்கான முகவரி : இல.43, 3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

தொ.பே இல : 021 222 3739 மின்னஞ்சல் : ithunamthesam@gmail.com

## தவறவிடப்பட்ட வரலாற்றுச் சந்தர்ப்பம்

இலங்கைத்தீவில் இருந்து பிரித்தானிய காலனித்துவ ஆட்சி அகன்ற பின் தமிழர் தாயகப்பகுதிக்குள் விஜயம் செய்த அதி உயர் மட்ட தலைவராக பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் அவர்கள் விளங்குகின்றார். இன்று இலங்கைத்தீவை பீடித்திருக்கும் இன முரண்பாட்டிற்கு தனித்தனியாக இருந்த தமிழ் தேசத்தையும், சிங்கள தேசத்தையும் 1833ல் கோல்புறுக் சீர்திருத்தத்தின் மூலம் பிரித்தானியா ஒன்று சேர்த்தமையே காரணமாகும் என்றும் வரலாற்று ஆசிரியர்கள் பலர் கோடிட்டுக் காட்டுகின்றனர்.

இலங்கைத்தீவில் கொழுந்துவிட்டெரியும் இன முரண்பாட்டை தீர்த்துவைக்க வேண்டிய தார்மீக பொறுப்புடைய பிரித்தானிய அரசின் அதிஉயர் தலைவரான பிரதமர் டேவிட் கமரூன் அவர்களை யாழில் சந்திக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம் வரலாற்றில் முதல் தடவையாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு கிடைத்தது. டேவிற்கமரூன் அவர்களை கூட்டமைப்பின் தலைவரான சட்டத்தரணி சம்பந்தன், ஓய்வு பெற்ற நீதியரசரான வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் தேசியபட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி சுமந்திரன் ஆகியோர் சந்தித்தனர்.

இச்சந்திப்பின்போது கூட்டமைப்பினர் 06 அம்சக்கோரிக்கைகளை முன்வைத்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன.

01. வடமாகாணத்தில் இராணுவக்குறைப்பு மற்றும் ,இராணுவ ஆளுநரை மாற்றி சிவில் ஆளுநரை நியமித்தல்.
02. 13வது திருத்தச் சட்டத்தினை முழுமையாக அமுல்படுத்துதல்.
03. வடமாகாணசபை நிர்வாகத்தினை பலப்படுத்தல்.
04. மீள்குடியேற்றம்.
05. வடமாகாணத்தில் போருக்குப் பிந்திய புனரமைப்பு.
06. வடமாகாணத்திற்கான தகவல் தொழில் நுட்பநிறுவனம் ஒன்றினை அமைத்தல் (NOTHERN INSTITUTE OF INFORMATION TECHNOLOGY)

மேற் கூறப்பட்ட 06 கோரிக்கைகளும் வடமாகாணத்திற்கு மட்டுமே பொருத்தமானதாகவும் வடமாகாணசபையை பலப்படுத்துவதற்காகவும் 13ம் திருத்தச் சட்டத்தினை முற்றுமுழுதாக ஏற்றுக்கொண்டமையை வெளிப்படுத்துவதாகவும் அமைந்திருக்கின்றன.

சட்டத்துறையில் பேர் பெற்ற மூவரும் 13வது திருத்தசட்டத்தில் உள்ள ஆளுநர் என்கின்ற பதவி பிரச்சனை அல்ல. மாறாக இராணுவ ஆளுநர் தான் பிரச்சனை என்று டேவிற் கமரூனுக்கு நிறுவியிருக்கின்றார்கள். அவர்கள் அரசியல் அமைப்பின் உறுப்புரை 154 (b) (2) இனை வசதியாக மறந்துவிட்டார்கள். அவ் உறுப்புரை பின்வருமாறு கூறுகின்றது.

"THE GOVERNOR SHALL BE APPOINTED BY THE PRESIDENT BY WARRANT UNDER HIS HAND, AND SHALL HOLD OFFICE IN ACCORDANCE WITH ARTICLE 4 (b ) DURING THE PLEASURE OF THE PRESIDENT"

அதாவது ஆளுநர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவதுடன் ஜனாதிபதியின் விருப்பத்தை திருத்திப்படுத்தும் வரையில் பதவியில் இருப்பார். திரு.சம்பந்தன் அவர்கள் ஆளுநராக நியமிக்கப்பட்டாலும் ஜனாதிபதியின் விருப்பத்திற்கு மாறாக செயற்படமுடியாது என்பது அதன் பொருள்.

ஜனதிபதியின் விருப்பம் என்பது பிரித்தானியர் இலங்கையைவிட்டு அகன்ற நாள் முதல் விஸ்வரூபம் எடுத்து வரும் சிங்கள பௌத்த பேரினவாத மனோநிலையைப் பிரதிபலிப்பதாகவே அமையும் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை. நல்லவேளையாக நமது கற்றறிந்த சட்டவாதிகள் ஜனாதிபதியாக சம்பந்தரை நியமிக்கவேண்டும் என்று கமரூனிடம் கோரிக்கை விடாதவரையில் தமிழ் மக்களின் மானம் காக்கப்பட்டிருக்கின்றது. இங்கு உருவாக்கப்பட வேண்டியது சிங்கள பௌத்த பேரினவாத மனோ நிலையால் தமிழர்கள் தேசம் பாதிக்கப்படாதவாறான ஓர் அரசியற் கட்டமைப்பு ஆகும். இங்கு வேதனைக்குரிய விடயம் என்னவென்றால் வடகிழக்கை தாயகமாகக்கொண்ட தமிழ் மக்களின் அரசியலை வடமாகாணத்திற்குள் எம் தலைவர்கள் மட்டுப்படுத்தியிருக்கிறார்கள் என்பதே. இது வடக்கு கிழக்கு மாகாணங்களின் பிரிப்பை கூட்டமைப்பினர் ஏற்றுக்கொண்டு விட்டதை காட்டுகின்றது.

இந்த அரிய சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி .

01. இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை கோரப்படாமலும்.
02. காணாமல் போன எம் உறவுகளை மீட்டுத் தருமாறு கோராமலும்
03. ஆக்கிரமிக்கப்பட்டு அபகரிக்கப்பட்டு அழிக்கப்பட்டிருக்கும் எமது நிலங்களை பாதுகாத்து தருமாறு கோராமலும்.
04. சிங்கள பௌத்த மயமாக்களையும் தடுத்து நிறுத்தக்கோராமலும்.
05. எல்லாவற்றிற்கும் மேலாக 65 ஆண்டுகளாக கொழுந்து விட்டெரியும் இன முரண்பாட்டை நிரந்தரமாக தீர்க்கக்கூடியவாறு தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்திசெய்யக்கூடிய வகையில் அவர்களை நிம்மதியாகவும், பாதுகாப்பாகவும், கௌரவமாகவும் வாழக்கூடிய ஓர் அரசியல் தீர்வை அடைய தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை அவற்றின் அடிப்படையில் தமிழர் தேசம் என்பவற்றை அங்கிகரிக்கவேண்டும் என்று கோராமலும் கோட்டைவிட்டிருக்கிறார்கள் கூட்டமைப்பினர்.

ஆகக் குறைந்தது நூலக வாயிலில் நின்று காணாமல் போன தமது உறவுகளுக்காக அழுகுரல் எழுப்பிய, தம்மை தேர்ந்தெடுத்த மக்களையாவது சந்தியுங்கள் என்று கமரூனுக்கு அன்புக்கட்டளையிடக்கூட கல்நெஞ்சத் தலைவர்கள் மறுத்துவிட்டனர். அவர்கள் பொலீஸ் பாதுகாப்புடன் தப்பிச் செல்லுகின்ற சோகம் தான் மிஞ்சியது. வரலாற்றுச் சந்தர்ப்பங்கள் மீண்டும் மீண்டும் எம்மை தேடிவராது. எமது இனத்தின் விடிவிற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் கூட்டமைப்பு அகற்றப்பட்டு புதிய அரசியல் சக்தி ஒன்று உடன் கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

## சுமந்திரனின் உண்மைத்தோற்றத்தை வெளிக்காட்டிய அமெரிக்க மாநாடு

- ஊர்சுற்றி

நவம்பர் மாதம் 01ம்,02ம்,03ம் திகதிகளில் அமெரிக்க மாநாடு இடம் பெற்றது.அமெரிக்க தமிழ்ச்சங்கமும் அமெரிக்க தமிழர் நடவடிக்கை குழுவும் இணைந்து இம் மாநாட்டினை ஏற்பாடு செய்திருந்தனர். அமெரிக்க தமிழர் சங்கம் ஒரு பழமையான தமிழர் அமைப்பாகும் இது தமிழ் மக்களின் கலாசார பண்பாட்டு விடயங்களில் அக்கறை கொண்டிருக்கின்றது.அமெரிக்க தமிழர் நடவடிக்கை குழு அரசியல் விடயங்களுக்காக உருவாக்கப்பட்ட அமைப்பு இது அமெரிக்க சட்டமன்றம் வெளிநாட்டு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு என்பவற்றுடன் தமிழர் விவகாரங்களுக்காக தொடர்ச்சியாக பேசிவருகின்றது.

இம் மாநாட்டில் தாயகத்திலிருந்து கஜேந்திரகுமார் ,அனந்தி,சுமந்திரன்,மாவைசேனாதிராசா, என்போரும் சிவில் சமூகத்திலிருந்து யாழ் பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளர் குருபரனும் சட்டத்தரணி இரட்ணவேலும் கலந்து கொண்டனர். பல்வேறு நாடுகளில் செயற்படும் புலம்பெயர் அமைப்புகளும் வந்திருந்தன.

01ஆம் திகதி அமெரிக்க தமிழர் நடவடிக்கை குழுவின் உட்சந்திப்பு இடம் பெற்றது. தாயகத்திலிருந்து சென்றவர்களும் அழைக்கப்பட்டனர்.நடவடிக்கை குழுவின் கடந்த கால பணிகள் பற்றி விவாதிக்கப்பட்டதோடு எதிர் காலத்தில் முன்னெடுக்கப்படக்கூடிய பணிகள் பற்றியும் ஆராயப்பட்டன.

02ஆம் திகதி காலை குழுக்கலந்துரையாடல் இடம் பெற்றது. ஐக்கிய நாடுகள் சபை மட்டத்தில் தமிழர் விவகாரங்கள் எவ்வாறு முன் கொண்டு செல்வது பற்றி ஆராயப்பட்டது. பிற்பகல் அமெரிக்க தமிழர் நடிவடிக்கை குழுவின் வருடாந்த மாநாடு இடம் பெற்றது. சுமார் 300 பேர் வரை கலந்து கொண்டனர். பிரதமபேச்சாளராக கஜேந்திரகுமாரும், சிறப்பு பேச்சாளராக குருபரனும் உரையாற்றினர் கஜேந்திரகுமார் பிரதம பேச்சாளராக உரையாற்றும் போது இனப் பிரச்சனை என்பது தேசம் அழிக்கப்படுவதனால் ஏற்படும் பிரச்சனை. தேசத்தை பாதுகாத்து அதற்கு அங்கிகாரம் பெறுவதே தீர்வாக அமையவேண்டும். ஒரு சிலர் தமிழ் மக்களுக்கு அதிகாரம் இல்லாததுதான் பிரச்சனை என கூற பார்க்கின்றனர்.இதனால் அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளவேண்டும் என கூறுகின்றனர். இது தவறானது நாம் தெளிவாக பிரச்சனைகளை அடையாளம் காணவேண்டும். பிழையாக அடையாளம் கண்டால்.பிழையான தீர்வையே நாம் சிபார்சு செய்வோம். எமது கட்சி இரு தேசங்கள் ஒரு நாடு என்பதையே தீர்வாக முன்வைத்துள்ளது. இத் தீர்வை விமர்சிப்பவர்கள் எங்களுடைய தீர்வை எப்படி அடைவீர்கள் என கேட்கின்றனர். அதற்கு என்னுடைய பதில் பூகோள அரசியலை பயன்படுத்துவோம் என்பதே. எங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றாமல் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகமும் பிராந்திய சக்தியான இந்தியாவும் தமது இலக்கினை அடையமுடியாது என்ற நிலையினை நாம் உருவாக்கவேண்டும். இந்த பூகோள அரசியலை சரியாக பயன்படுத்துவதில் தான் எமது வெற்றி தங்கியுள்ளது.இந்தியாவை பொறுத்தவரையில் எமக்குள்ள மிகப்பெரிய சொத்து தமிழ் நாடு. அதே போல மேற்குலகத்தை பொறுத்தவரை மிகப்பெரிய புலம்பெயர் தமிழர்கள் உள்ளனர். புலம்பெயர் மக்கள் தமிழ்த்தேசத்தின் நீட்சி. அதன் ஒரு அங்கம் அவர்கள் தமிழர் தேசத்தின் ஆதரவாளர்கள் அல்ல மாறாக பங்காளிகள். தமிழர் விவகாரம் தொடர்பான சர்வதேச அரசியலாக வளர்வதில் மிகப்பெரும் பொறுப்பு அவர்களுக்கு உண்டு. இப் பணியின் முக்கியத்துவத்தை உணர்து அதனை ஆற்றுவதற்கு அவர்கள் முன் வரவேண்டும்.

இன்று ஒரு ஆபத்து உள்ளது. தமிழர் அரசியலை கையாள்வதில் முக்கியத்துவத்தை உணராமல் சர்வதேச சமூகத்தின் தேவைக்கே ஏற்ப செயற்படும் போக்கே அவ் ஆபத்தாகும் சர்வதேச் சமூகம் விரும்புவதை தான் செய்ய வேண்டுமென்றால் நாம் நமது தேசநலன்களை அடைய முடியாது. எங்களுடைய அரசியலின் முக்கியத்துவத்தை விளங்கிக்கொண்டு சர்வதேச அரசியலில் தமிழர் அரசியலின் முக்கியத்துவத்தை விளங்கிக்கொண்டு அதனுடன் - லொபி பண்ணதயாராகவேண்டும் என்றார்.

சிறப்புப்பேச்சாளரான யாழ் பல்கலைக்கழக சட்டவிரிவுரையாளர் குருபரன் உரையாற்றும் போது தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயகம் வளர்வதற்கு இன்று மாற்று தலைமை தேவை இது தோன்றும் போது தான் தேசம் ஜனநாயக விழுமியங்களுக்கு ஏற்ப வளரும். அரசியலில் ஈடுபடும் தரப்புக்களும் பொறுப்புடன் செயற்படும். தலைமைகள் மக்களுக்கு பொறுப்பு சொல்லும் கலாச்சாரம் உருவாகும்.

ஆனால் துரதிஸ்டவசமாக தாயகத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் ,தமிழ்ஊடகங்களும் திட்டமிட்டு இவ் வெற்றிடத்தை நீட்டி செல்வதற்கு முயற்சிக்கின்றன.புலம் பெயர் மக்கள் இவ் மாற்றத்தினை கொண்டு வரக்கூடிய வகையில் முன் உதாரணமாக செய்பட முன்வரவேண்டும்.

கேள்வி பதில் நேரம் மாவைக்கும் சுமந்திரனுக்கும் ஒதுக்கப்பட்டது.அதற்கு அவர்கள் இணங்காததினால் பின்னர் அந்த அமர்வு இரத்து செய்யப்பட்டது.

கஜேந்திரகுமாரினதும்,குருபரினதும் பேச்சைகேட்பதற்காக எம்மை இங்கு வைத்திருக்கிறீர்கள் என மாவையும்,சுமந்திரனும் நிகழ்வு ஏற்பாட்டாளர்களுடன் முரண்பட்டனர்.

02ம் திகதி இரவு அமெரிக்க தமிழ்ச் சங்கத்தின் ஒன்று கூடல் இடம் பெற்றது.சுமந்திரன் மாவை கஜேந்திரகுமார்,அனந்தி,இரட்ணவேல் ஆகியோர் உரையாற்றினர்.காலையில் உரையாற்றிய கஜேந்திரகுமாரை இரவும் உரையாற்ற சந்தர்ப்பம் கொடுத்தமைக்காக சுமந்திரன் மீண்டும் நிகழ்வு ஏற்பாட்டாளருடன் முரண்பட்டார்.தான் உரையாற்றாமல் வெளியேறப்போவதாகவும் தெரிவித்தார். நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் நீங்கள் விரும்பினால் போகலாம் ஆனால் யோசித்து முடிவெடுங்கள் உங்களைப் பற்றி தப்பான அபிப்பிராயம் மக்கள் மத்தியில் வளர பார்க்கும் என குறிப்பிட்டானர்.சுமந்திரன் ஒரு வாறு சமாதானம் அடைந்து நிகழ்வில் பங்குபற்றினார்.

(17ஆம் பக்கம் பார்க்க)

# கமரூனின் யாழ் வருகையும் கூட்டமைப்பின் வரலாற்றுத் துரோகமும்

■ சூரியவேந்தன்

பொதுநலவாய அமைப்பு என்பது காலனித்துவ முடிவிற்குப் பின்னரும் தனது செல்வாக்கினை அந்நாடுகளில் நிலைநிறுத்துவதற்காக பிரித்தானியாவினால் உருவாக்கப்பட்ட அமைப்பாகும். பிரித்தானிய மகாராணியாரே அதன் தலைவராக விளங்குகின்றார். பிரித்தானியாவால் உருவாக்கப்பட்ட அமைப்பு என்ற வகையில் அம்மாநாட்டிற்குச் செல்லாமலிருக்க அதனால் முடியாது. இதைவிட அமெரிக்கா தலைமையிலான மேற்குலகத்திடம் நேர்மறைஅணுகுமுறை மூலம் இலங்கையை பணியவைத்தல் என்ற கொள்கைநிலைப்பாடும் இருந்தது. இந்த இரண்டும் தான் உள்நாட்டிலும் சர்வதேசமட்டத்திலும் எழுந்த எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமறூன் மாநாட்டில் கலந்துகொள்வதற்குகாரணம்.

மறுபக்கத்தில் எதிர்ப்புக்களையும் ஒருவகையில் தணிக்கவேண்டியதேவை அதற்கிருந்தது. குறிப்பாக புலம்பெயர் தமிழ்மக்களின் அபிலாஷைகளை குறைந்த மட்டத்திலாவது பேணவேண்டிய தேவை இருந்தது. பிரித்தானியவாழ் புலம்பெயர்தமிழ்மக்கள் பிரதமர் மாநாட்டில் கலநது கொள்ளக்கூடாதுதென பிரித்தானிய மக்கள் மட்டத்தில் பொதுக்கருத்தினை உருவாக்குவதில் வெற்றிகண்டிருந்தனர். இதற்கான அவர்களின் உழைப்பு மகத்தானது. ஒவ்வொரு தேர்தல் தொகுதியாகச் சென்றுமக்களையும். பாராளுமன்ற உறுப் பினர்களையும் சந்தித்து தமது பக்க நியாயங்களை முன்வைத்தனர். ஆயிரக் கணக்கில் கையெழுத்துக்களையும் வாங்கி அரசாங்கத்திடம் சமர்ப்பித்திருந்தனர். மேலும் உண்ணாவிரதம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களிலும் ஈடுபட்டிருந்தனர்.

இவ்வாறானஅவர்களின் கடும் உழைப்பே டேவிற்கமரூன் யாழ்ப்பாணம் பயணம் செய்தமைக்கு காரணம். இச் செயற்பாட்டில் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு எந்தப்பங்கும் இருக்கவில்லை. இது முக்கமுழுக்க பிரித்தானியவாழ் தமிழ்மக்களினது உழைப்பின் விளைவு. அந்த உழைப்பினைத் தகுந்தவகையில் அறுவடைசெய்யவேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே இருந்தது. இதில் ஒருநம்பிக்கை பொறுப்பாளர் என்ற பாத்திரத்தை வகிக்கவேண்டியகடமை கூட்டமைப்புக்கு இருந்தது. ஆனால் இந்தக் கடமையை கூட்டமைப்பு செய்யவில்லை என்பதுதான் மிகப்பெரும் சோகம்.

இனப்பிரச்சினை என்பது சாரம்சத்தில் தேசம் அழிக்கப்படுவதனால் ஏற்படும் பிரச்சினையேயாகும். தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பதனை திட்டமிட்டு அழிக்கும் செயற்பாடே வரலாற்று ரீதியாக இடம்பெறுகின்றது. இதனைத் தடுப்பதற்காகவே தமிழ்த் தேசியப் போராட்டமும் எழுச்சி பெற்றது. தேசம் அழிக்கப்படுவதற்கான அத்திவாரத்தினை இட்டவர்களே பிரித்தானியர்கள்தான். பல்வேறு பண்பாட்டு அடையாளங்களுடன் தனித்துவமாக வாழ்ந்த தமிழ் மக்களை ஒற்றையாட்சிக் கட்டமைப்பிற்குள் கொண்டு போய் விட்டதன் மூலம் பேரினவாத வாய்க்குள் திணத்தவர்கள் இவர்கள்தான்.

எனவே இனப்பிரச்சினையை தீர்ப்பது தொடர்பில் ஓர் தார்மீகப் பொறுப்பு பூகோள அரசியல் தேவைகளுக்கு அப்பால் பிரித்தானியர்களுக்கு உண்டு. பூகோள அரசியல் தேவையின்படி இலங்கையில் இருந்து சீனாவின் செல்வாக்கை அகற்ற வேண்டிய கட்டாயம் அதற்கு உள்ளது. இதனைவிட உலகளாவிய பொருளாதாரத் தேவைகளுக்காக ஜனநாயக விழுமியங்களை நிலை நிறுத்த வேண்டிய கட்டாயமும் இருக்கின்றது. இவற்றிற்கு அப்பால் புலம் பெயர் தமிழ் மக்கள் ஓர் அரசியல் சக்தியாக பிரித்தானியாவில் எழுச்சி பெற்ற வருவதனால் அவர்களை திருப்திப்படுத்த வேண்டிய தேவையும் அதற்குண்டு. இந்த அரசியல் நிர்ப்பந்தங்கள் எல்லாம் இணைந்துதான் டேவிற்கமரூனை யாழ்ப்பாணம் வரவைத்தது.

**இது ஒரு வரலாற்றுச் சந்தர்ப்பம். இந்தச் சந்தர்ப்பத்தை தமிழ்த்தரப்பு ஒழுங்காக பயன்படுத்தியிருக்க வேண்டும். குறிப்பாக மூன்று விடயங்களில் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். எமது அரசியல் நியாயப்பாடுகளை தெளிவாக முன்வைத்து தேசத்தை அங்கீகரிக்க நிர்ப்பந்தம் கொடுத்தல். போருக்குப் பின்னரும் இடம் பெறும் கட்டமைப்புசார் இன அழிப்பை அனுபவரீதியாக புரியவைத்தல். மனித உரிமை விவகாரங்களையும் போரக்குற்ற விவகாரங்களை நேரடியாக தரிசிக்கும் படியான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல். என்பனவே அம்மூன்றுமாகும்.**

இது ஒரு வரலாற்றுச் சந்தரிப்பம். இந்தச் சந்தர்ப்பத்தை தமிழ்த்தரப்பு ஒழுங்காக பயன்படுத்தியிருக்க வேண்டும். குறிப்பாக மூன்று விடயங்களில் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். எமது அரசியல் நியாயப்பாடுகளை தெளிவாக முன்வைத்து தேசத்தை அங்கீகரிக்க நிர்ப்பந்தம் கொடுத்தல். போருக்குப் பின்னரும் இடம் பெறும் கட்டமைப்பு சார் இன அழிப்பை அனுபவரீதியாக புரியவைத்தல். மனித உரிமை விவகாரங்களையும் போரக்குற்ற விவகாரங்களை நேரடியாக தரிசிக்கும் படியான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல். என்பனவே அம்மூன்றுமாகும்.

இம் மூன்று விடயங்களில் எவற்றையுமே தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஆற்றவில்லை. எமது அரசியல் நியாயப் பாடுகள் முழுக்க முழுக்க எமக்கான அரசியல் தீர்வு பற்றியவை. தாயகம். தேசியம். சுயநிர்ணயம் என்கின்ற கோட்பாடுகளின் அடிப்படையிலேயே தீர்வு அமையவேண்டும் என்பதனை அவருக்கு தெளிவுபடுத்தியிருக்க வேண்டும். குறிப்பாக தொடர்ச்சியாக எமது தேசம் அழிக் கப்படுவதனை நிறுத்த வேண்டுமானால். அது அங்கீகரிக்கப்படுவதற்கான நியாயப்பாடுகளை முன்வைத்திருக்க வேண்டும். இவை எவை பற்றியும் கூட்டமைப்புத் தலைமை பேசவில்லை. தமிழ் மக்களின் கூட்டிருப்பையும் கூட்டுரிமையையும் உறுதிப்படுத்த தாயகம் பற்றிப் பேசவேண்டியது அவசியம். ஆனால் கிழக்கு மாகாணம் பற்றி வாயே திறக்கவில்லை. ஒற்றையாட்சிக்குட்பட்ட வெறும் நிர்வாகப் பரவலாக்கலையே கொண்ட வடமாகாண சபை பற்றி மட்டுமே பேசப்பட்டது. இதற்காக 6 அம்சக் கோரிக்கைகள் முன்வைக்கப் பட்டிருக்கின்றன. இதனையே மகிந்தரும் விரும்பியிருந்தார்.

கட்டமைப்புசார் இன அழிப்பினை பொறுத்தவரை சிங்களக் குடியேற்றமும் பலவந்தமான காணிப்பறிப்பும் உட்பட விவசாய. கடல்சார். வர்த்தக பொருளாதார மற்றும் மூலவள ஆக்கிரமிப்புக்கள் மிகவும் முக்கிய பிரச்சினைகள். இவ் விடயங்களில் நேரடியாக பாதிக்கப்பட்டவர்களை அழைத்து வந்து நிலைமைகளை கமரூனுக்கு தெளிவு படுத்தியிருக்கலாம். அல்லது அவர்கள் சார்பில் பிரதிநிதிகள் சந்திப்பதற்காகவாவது ஏற்பாடு செய்திருக்கலாம். அல்லது தாங்களாகவே இவை தொடர்பான ஆவணங்களை சமர்ப்பித்து பேசியிருக்கலாம். ஆனரல் இவை தொடர்பாக எந்த முயற்சிகளும் மேற் கொள்ளப்படவில்லை.

மூன்றாவதான மனித உரிமை விவகாரங்களையும் போர்க்குற்ற விவகாரங்களையும் பொறுத்தவரை காணாமல் போனவர்களது விவகாரம். சிறைக்கைதிகள் விவகாரம். புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டோர் கண்காணிப்பு என்ற பெயரில் மீண்டும் உளச்சித்திரவதைக்கு உள்ளாக்கப்படும் விவகாரம். படையினராலும் அரசினாலும் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்பு விவகாரம். என்பவற்றை அவரது கவனத்திற்கு கொண்டுவந்திருக்கவேண்டும். இவ்விவகாரங்களே இன்று சர்வதேச மட்டத்தில் முதன்மை விவகாரங்களாக இருப்பதனாலும் இலங்கை அரசினை பணிய வைப்பதற்கு மேற்குலகம் இதனையே ஓர் கருவியாகப் பயன்படுத்துவதனாலும் இவை பற்றிய நேரடித் தரிசனங்களுக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்திருக்க வேண்டும்.

குறிப்பாக காணாமல் போனோர் விவகாரம் தொடர்பாகவும். காணி அபகரிப்பு விவகாரம் தொடர்பாகவும் இரண்டு போராட்டங்கள் இடம்பெற்றன. மாவிட்டபுரத்தில் காணிஅபகரிப்புக்கு எதிரான போராட்டமும். யாழ் பொதுநூலகம் அருகில் காணமல்போனவர்களின் உறவுகள் நடாத்திய போராட்டமும் இடம்பெற்றது. மாவிட்டபுரப்போராட்டம் கமரூனினதோ. அவருடன் வருகை தந்த வெளிநாட்டு ஊடகவியலாளர்களதோ கவனத்தைப் பெறமுடியாத மறைவிடத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

காணாமல் போனவர்களின் உறவினர்களது போராட்டம் இறுதிக்கட்டத்திலாவது பொலீசாரின் தடையை உடைத்தமையினால் இறுதிக் கணத்திலாவது கமரூனின் கவனத்தை ஈர்த்தது. அவருடன் வருகைதந்த வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் மிக மிக முக்கியத்துவத்தை அதற்கு கொடுத்திருந்தனர். குறிப்பாக பிரித்தானிய ஊடகங்கள் தொடர்ந்து சில நாட்கள் மிகுந்த முக்கியத்துவத்தை கொடுத்திருந்தன.

காணமல் போனவர்களை கண்டறியும் சங்கத்தில் வடமாகாணசபை உறுப்பினர் அனந்தி முக்கிய பொறுப்பில் இருக்கின்றார். அவர் குறைந்தபட்சம் தான் சந்திப்பதற்காகவாவது ஏற்பாடுசெய்துதாருங்கள் என்று பல தடவை கேட்டிருந்தார். ஆனால் அவரது கோரிக்கை கூட்டமைப்பின் மும்மூர்த்திகளினால் வேண்டுமென்றே நிராகரிக்கப்பட்டது.

கமரூனின் பயணம் முழுக்கமுழுக்க பிரித்தானிய தூதுவராலயத்தாலும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினராலுமே திட்டமிடப்பட்டது. அவரது நிகழ்ச்சிநிரல் முழுமையாக கூட்டமைப்பின் மும்மூர்த்திகள் எனப்படுகின்ற சம்பந்தன். சுமந்திரன். விக்கினேஷ்வரன் ஆகியோருக்கு முன்கூட்டியே தெரியும். கமரூனின் பாதுகாப்புப்பிரிவினர் நான்கு நாட்களுக்கு முன்னரே சம்பந்தப்பட்ட இடங்களை பார்வையிட்டுச் சென்றிருக்கின்றனர். அவரது நிகழ்ச்சிநிரலில் மாவிட்டபுரப்பயணம் இருக்கவில்லை. ஆனால் அவர் வருவார் என்ற நம்பிக்கையூட்டப்பட்டு மாலை ஐந்து மணிவரை ஆயிரக்கணக்கான மக்கள் மாவிட்டபுரத்தில் திட்டமிட்டு முடக்கப்பட்டிருந்தனர்.

இறுதி நாள் போராட்டத்தினை காணமல் போனஉறவுகளுடன் இணைந்து யாழ் நகரில் நடாத்துவோம் எனக்கேட்கப்பட்டது. கூட்டமைப்பு அதனை நிராகரித்து அவர் மாவிட்டபுரத்திற்கும் வருவார் எனநம்பிக்கையூட்டப்பட்டது.

காணமல்போன உறவுகளது போராட்டத்தை அனந்தி தலைமையிலான காணாமல் போனவர்களை கண்டறியும் சங்கம். காணாமல்போன உறவுகளைத்தேடும் அமைப்பு. மன்னார் பிரஜைகள் குழு என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. காலையில் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு கமரூன் வருகைதருவார் எனச் செய்திகள் வந்தததினால் அவர்கள் அங்கு போராட்டத்தினை நடத்தினர். சம்பந்தனும். மாவையும் வீதியில் நின்று அனந்தி யுடன் பேசிவிட்டு சென்றுவிட்டனர். விக்கினேஸ்வரன் கலந்துகொள்வதற்கு தனக்கு நேரமில்லை எனக்கூறியிருந்தார். பாராளுமன்ற உறுப்பினர் என்றவகையில் சரவணபவன் மட்டுமே அங்குவந்து சிறிது நேரத்தில் சென்றிருந்தார். வேறு எவரும் அந்தப்பக்கம் வரவில்லை. மாகாணசபை உறுப்பினர்கள் ஒருசிலரும் வந்திருந்தனர். தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமாரும். பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட முக்கிய உறுப்பினர்கள் காலையிலிருந்து அங்கு கலந்துகொண்டிருந்தனர். அங்கு கூடியிருந்த காணாமல் போனவர்களது உறவுகள் புகைப் படங்களுடன் கதறி அழுதனர்.

காலை 10 மணியளவில் நல்லூருக்கு வரமாட்டார் 2 மணியளவில் யாழ் துரையப் பாவிளையாட்டரங்கில் இறங்குவார் என செய்திவந்தது. இதன் பின்னர் போராட்டம் துரையப்பாவிளையாட்டரங்கிற்கு அருகில் உள்ள யாழ் முனியப்பர் கோவிலுக்கு மாற்றப்பட்டது. பிற்பகல் 2.15 மணியளவில் ஹெலிகொப்ரர் ஒன்று தரையிறங்கியது. மக்கள் கமரூன் தான் எனநினைத்து அதனை நோக்கி ஓடினர். ஆனால் வந்தவர்கள் நியூசிலாந்து வெளிநாட்டமைச்சைச் சேர்ந்தவர்கள் எனபின்னர் தெரியவந்தது. மக்கள் அவர்கள் முன்னரும் தமது உறவினர்களை கண்டு பிடித்துத்தருமாறு கோரி கதறிய முதனர்.

அதேநேரம் கமரூன் பலாலி விமான நிலையத்திலிருந்து வாகனங்களினூடாக யாழ் பொது நூல்நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டார். மக்களின் கவனத்தை துரையப் பாவிளையாட்டரங்குபக்கம் திசைதிருப்பி விட்டு திட்டமிட்டு வாகனம் மூலம் அவர் கொண்டுவரப்பட்டிருக்கிறார். நூலகவாசலில் சுப்பிரமணியம் பூங்காப் பக்கம் அரசுக்கு

(19ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்துவரும் காலப்பகுதியில் தமிழ்த் தரப்பு கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறைகள்?



**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களால் வழங்கப்பட்ட ஆணையை உதாசீனம் செய்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானங்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையில் எவ்விதமான தொடர்பும் இல்லை என்பதை வெளிபடுத்த வேண்டியது ஒவ்வொரு தமிழனதும் பொறுப்பாகும்.**

**– கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**

*2009 மே மாதத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் தமிழ் மக்களை தோல்வி மனப்பான்மைக்குள் தள்ளி பிறசக்திகளது நலன்களுக்காக தவறான அரசியல் பாதையில் அழைத்துச் சென்று அவர்களது அரசியல் எதிர்காலத்தினை இருண்ட யுகத்தினுள் தள்ளிவிட தமிழ் அரசியல் தரப்புக்கள் சில முயற்சிக்கின்றன. இம்முயற்சிகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி தமிழ் மக்கள் தெரிவு செய்ய வேண்டிய சரியான அரசியற் பாதை எது என்பது பற்றி தெளிவுபடுத்தும் நோக்கில் தினக்குரல் பத்திரிகைக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் எழுதிய தொடர் கட்டுரைகளின் தொகுப்பு இங்கு மீள் பிரசுரம் செய்யப்படுகின்றது.*

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் கனடாவில் ஆற்றிய உரையின் போது முன்வைத்த அணுகுமுறைகள் ஆபத்தானவை என்ற விமர்சனங்களை கடந்த இரு வாரப் பத்திகளில் முன்வைத்திருந்தேன்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில், தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு வாக்களித்து அவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தவர்கள் தமிழ் மக்கள். அந்த வகையில் தமிழ் மக்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு எந்த காரணத்திற்காக அளித்தார்களோ அது எந்தக் கட்டத்திலும், எக்காரணம் கொண்டும் புறக்கணிக்கப்பட்டுவிடக் கூடாது. எனவே தமிழ் தேசிய கூட்டமைப்பு எடுக்கும் தவறான முடிவுகளால் ஒட்டு மொத்த தமிழ் மக்களும் பாதிக்கப்படப் போவதுடன் அவர்களுடைய எதிர்காலமும் கேள்விக்குறியாகும். ஆதலால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரலாற்று தவறை இழைப்பதற்கு நாம் எக்காரணம் கொண்டும் இடமளிக்க முடியாது. அத்துடன், தமிழ் மக்களின் நிலைப்பாட்டுக்கு எதிரான அணுகுமுறைகளை கூட்டமைப்பு கைக்கொள்ளும்போது, அதனை சுட்டிக்காட்டி, சரியான வழிக்கு கொண்டுவர வேண்டியது ஒவ்வொரு தமிழனினதும் கட்டாய கடமையாகிறது.

அவ்வாறு சுட்டிக்காட்டும் போது, அந்த விமர்சனங்களை ஏற்றுத் தாமாக திருந்த முற்படாத சந்தர்ப்பத்தில், அவர்களின் மீது அழுத்தங்களை பிரயோகித்து அவர்கள் மேற்கொள்ளும் தவறான அரசியல் செயற்பாடுகளை தடுத்து நிறுத்த வேண்டியது இரண்டாவது கட்டமாகும். தடுத்து நிறுத்த மேற்கொள்ளும் முயற்சிகளையும் புறந்தள்ளி, தமிழர் தேசத்து நலன்களை முற்றாக புறக்கணித்து, பிறசக்திகளின் நலன்களை மட்டும் முழுமையாக கருத்தில் கொண்டு கூட்டமைப்பினர் மேற்கொள்ளும் செயற்பாடுகள் தமிழ்த் தேசத்தை மோசமாக பாதிக்கச் செய்யும். இவ்வாறு அவர்கள் செயற்பட முற்பட்டால், அவர்களது செயற்பாடுகளுக்கும் தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளுக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை வெளிப்படுத்த வேண்டியது ஒவ்வொரு தமிழனதும் பொறுப்பாகும். அதனை வெளிப்படுத்துவதற்கு அடுத்த தேர்தல் வரை காத்திருக்க முடியாது. ஏனெனில் எமக்கு அதற்கு போதுமான நேரமும் இல்லை.

இவ்வாறான சூழ்நிலையில், அடுத்து வரும் குறுகிய காலப் பகுதிக்குள் நாம் முகம் கொடுத்து கவனமாகக் கையாள வேண்டிய இரண்டு முக்கிய விடயங்கள் எம்முன் உள்ளன. ஒன்று, சிறீலங்கா அரசாங்கம் அறிவித்துள்ள நாடாளுமன்ற தெரிவுக் குழு விவகாரமும், அதனை தமிழ் மக்கள் எவ்வாறு அணுக வேண்டும் என்பதுமாகும். எதிர்வரும் 2012 பெப்ரவரி 27ம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் பத்தொன்பதாவது கூட்டத் தொடரை தமிழ் மக்கள் எவ்வாறு அணுகுவது என்பதுமாகும்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு சிறீலங்கா அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவானது, பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கும் ஓர் அமைப்பாகும். இந்த தெரிவுக் குழுவுக்குள் தமிழ் தரப்பு செல்வதா? இல்லையா? என்ற தீர்மானத்திற்கு வருவதற்கு முன்னர், இலங்கைத் தீவில் தமிழர்களுடைய பிரச்சினை என்ன என்பதனை மனதில் கொள்ள வேண்டும்.

தமிழ் தேசத்திற்கும், சிங்கள தேசத்திற்கும் முரண்பாடு உருவாகி, கூர்மையடைந்தமைக்கான அடிப்படை காரணம், எண்ணிக்கையில் கூடுதலான மக்களைக் கொண்ட சிங்கள தேசம், எண்ணிக்கையில் குறைவான மக்கள் தொகையைக் கொண்ட தமிழர் தேசத்தை சமத்துவமாக மதிக்கத் தவறியதுடன், அவர்களது சுயநிர்ணய உரிமையை மறுத்து, சிறுபான்மையினர் என்ற நிலைக்குள் தள்ளி (சிறுபான்மையினருக்குரிய உரிமைகளை கூட வழங்கவில்லை என்பது வேறு விடயம்) சிங்கள அரச இயந்திரத்தைப் பயன்படுத்தி தமிழர் தேசத்தின் இருப்பை அழிப்பதற்கு மேற்கொண்டு வந்த நடவடிக்கைகளேயாகும்.

இது இரு தேசங்களுக்கிடையிலான பிரச்சினையாகும். அந்த வகையில் எண்ணிக்கையில் அதிகளவு மக்களை கொண்ட சிங்கள தேசத்திற்கும், எண்ணிக்கையில் குறைந்தளவு மக்கள் தொகையை கொண்ட தமிழ் தேசத்திற்கும் இடையில் சமத்துவமும், சமஅந்தஸ்த்தையும் பேணப்படக் கூடிய வகையிலான தீர்வை பெற்றுக் கொள்வதே உகந்ததாக அமையும். ஏனெனில் அப்போது தான் தன்னிச்சையாக சிங்கள தேசம் எடுக்கும் எமக்கு பாதகமான தீர்மானங்களை எம்மீது திணிப்பதில் இருந்து எமது தேச்தினை தற்காத்துக் கொள்ள முடியும். இச் சமத்துவமானது இறுதித் தீர்வில் மட்டுமல்ல தீர்வைக் காண்பதற்காக கைகொள்ளப்படும் சகல செயற்பாடுகளிலும் வழிமுறைகளிலும் பேணப்படுவது அத்தியாவசியமானதாகும். அவ்வாறு இருக்க தமிழ் தேசிய கூட்டமைப்பானது தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்டு பாராளுமன்றத்துக்கு அனுப்பப்பட்ட பிரதிநிதிகள் என்ற அடிப்படையில், எந்தக் கட்டத்திலும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்குள் செல்வதன் ஊடாக, தமிழ் தேசத்திற்கும், சிங்கள தேசத்திற்கும் இடையில் பேணப்பட வேண்டிய சம அந்தஸ்த்து என்ற நிலை இழக்கப்பட்டு, பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் பல கட்சிகளில் ஒரு கட்சி என்ற பலவீனமான நிலைக்கு தமிழ் தேசம் தள்ளப்படும்.

இது இரண்டு தேசங்களுக்கு இடையிலான இனப்பிரச்சினை என்ற பரிமாணத்தை முற்று முழுதாக மாற்றி, தமிழ் தேசம் என்பதனை இல்லாமல் செய்து, வெறுமனே சிங்கள தேசத்திற்குள் காணப்படும் பல்வேறு தரப்புகளுக்கு இடையில் பேசித் தீர்க்க வேண்டிய விடயம் என்ற பரிமாணத்திற்குள் கொண்டு செல்கின்றது.

மேலும் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்குள் செல்வதானது, அதனூடான தீர்வு காணும் செயன்முறையை ஏற்றுக் கொள்வதாக அமையும். அந்த செயன்முறையை ஏற்றுக் கொண்ட பின்னர் அந்த செயன்முறையின் ஊடாக எட்டப்படும் முடிவானது, தமிழ் தேசத்திற்கு பொருத்தமானதோ இல்லையோ அந்த முடிவை ஏற்றுக் கொண்டே ஆகவேண்டிய கட்டாய சூழ்நிலைக்குள் தமிழ் தேசம் தள்ளப்படும்.

நிலைமை இவ்வாறு இருக்க, சிறீலங்கா அரசாங்கம் தமிழ் தேசிய கூட்டமைப்பினரை பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்குள் வருமாறு அழைக்கின்றது. அவ்வாறு அரசாங்கம் அழைக்கும்போது அதற்குப் பதிலாக இருதரப்புக்களுக்கும் இடையில் இனப் பிரச்சினை தீர்வு தொடர்பாக இணக்கப்பாடு எட்டப்படுகின்றபோது, அந்த இணக்கப்பாட்டை அரசாங்கம் தெரிவுக்குழுவுக்கு சமர்ப்பிக்குமாயின், அந்த தீர்வு திட்டம் தொடர்பான நியாயப்பாட்டை தெளிவுபடுத்துவதற்காக பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்குள் செல்ல தயார் என்று கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புவது யாதெனில் இணக்கப்பாடு எட்டப்படுவதற்கு முன்னதாகவோ அல்லது பின்னதாகவோ பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்குள் தமிழ் தேசிய கூட்டமைப்பு செல்வதானது ஒரே மாதிரியான செயற்பாடாகவே அமையும். அதாவது சம அந்தஸ்த்துடைய இரு தேசங்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தை என்ற பரிமாணத்தை முழுமையாக மாற்றியமைக்கும்.

சிங்கள தேசமானது, தமது தேசத்திலுள்ள பல்வேறுபட்ட கட்சிகளுக்கிடையில் அரசியல் தீர்வு தொடர்பாக முரண்பாடுகள் இருப்பதாக ஒரு வெளித்தோற்றத்தை மிக நீண்டகாலமாக காட்டிவருவது யாவரும் அறிந்ததே. உண்மையில் சிங்கள தேசத்திற்குட்பட்டிருக்கும் கட்சிகள் ஒற்றையாட்சி என்ற வரையறைக்கு அப்பால் எந்தவொரு தீர்வையும் வழங்க கூடாது என்பதில் அனைத்து சிங்கள கட்சிகளுக்கும் இடையே ஒருமித்த கருத்துண்டு. ஆட்சியில் இருக்கும் ஒரு கட்சி தமிழ் தரப்புடன் பேசி ஒரு தீர்வை கொடுக்க முற்படுவது போன்று காட்டுவதும், அதனை மற்றய எதிர்கட்சிகள் எதிர்ப்பதும் கடந்த பல தசாப்தங்களாக மாறி மாறி நடைபெற்று வருகின்றது.

இவ்வாறான ஓர் சூழ்நிலையில் அரசுக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் தீர்வு தொடர்பாக இணக்கப்பாடு எட்டப்பட்ட பின்னர், அந்த தீர்வை நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு முன்வைத்து விவாதிப்பதற்கு தயார் என்றால், தெரிவுக் குழுவுக்குள் சென்று அந்த தீர்வுத் திட்டத்தின் நியாயங்களை தெளிவுபடுத்ததயார் என்று கூட்டமைப்பு கூறுவது ஆபத்தானது. சிங்கள கட்சிகள் தமிழர்களுக்கு எதனையுமே கொடுக்க தயார் இல்லை என்பது நன்றாக தெரிந்திருந்தும், ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் தெரிவுக் குழுவுக்கு கூட்டமைப்பு செல்லதயார் என்று கூறுவதானது தீர்வு எதனையும் கொடுக்காமல் இழுத்தடிப்பதற்கும், சர்வதேச அழுத்தங்களில் இருந்து தப்பித்துக் கொள்ளுவதற்கும் அரசுக்கு வாய்ப்பை வழங்கி விடும். அந்த வகையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்குள் செல்லக்கூடாது.

தமிழ் தேசிய கூட்டமைப்பை சர்வதேச சமூகம் முழுமையாக அங்கீகரித்துள்ளதுடன், தமக்கு முக்கியத்துவம் அளித்து

(17ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின்

## இனப்பிரச்சினையும், அரசியல்யாப்புகளும் - இல 02

சி.அ.யோதிலிங்கம்

ஒரு பக்கத்தில் திட்டமிட்ட வளர்ச்சியினால், சிங்களச் செறிவு கிழக்கில் அதிகரிக்க, இயல்பான வளர்ச்சியினால் முஸ்லீம் செறிவும் கிழக்கில் அதிகரிக்க, தமிழ் மக்களின் சனச்செறிவு மாத்திரம் திட்டமிட்ட குடியேற்றங்களினாலும், போர் அழிவுகளினாலும், பலவந்த இடப் பெயர்வினாலும் குறைந்தது. சிங்கள குடியேற்றங்கள் அதிகரிக்க அதிகரிக்க அருகிலுள்ளள தமிழ்க் கிராம மக்களும் அச்சத்தினாலும் அழிவினாலும் வெளியேறி இருந்தனர். இதுவும் சனச்செறிவு குறைவிற்கு காரணமாக அமைந்தது. கிழக்கின் இவ் மோசமான ஒடுக்குமுறையினைப் புரிந்து கொள்ளாமல் தேசிய இனப்பிரச்சினையை முழுமையாகப் புரிந்து கொள்வது கடினமானது.

திட்டமிட்ட விவசாயக் குடியேற்றங்களுக்கு அப்பால் சட்ட விரோத விவசாயக் குடியேற்றங்கள், வியாபாரக் குடியேற்றங்கள், மீன்பிடிக் குடியேற்றங்கள், கைத்தொழில்க் குடியேற்றங்கள், புனித பிரதேசக் குடியேற்றங்கள், முப்படைப் பண்ணைகளுக்கான குடியேற்றங்கள், சிங்கள மாவட்டப் பிரதேசங்களை தமிழ் மாவட்டங்களுடன் இணைத்தல் என்பவற்றின் மூலமாகவும் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. இம்மாதிரியான குடியேற்றங்களும், திருகோணமலை மாவட்டத்திலேயே அதிகமாக மேற்கொள்ளப்பட்டன.

இக்குடியேற்றங்களை உருவாக்கும் போது கையாண்ட தந்துரோபாயங்களும் இங்கு முக்கியமானவையாகும். இக் குடியேற்றங்கள் நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் மேற்கொள்ளப்பட்டதோடு அருகிலுள்ள சிங்களப் பிரதேசங்களுடன் போக்குவரத்துச் செய்யக் கூடியதாகவும் மேற்கொள்ளப்பட்டன.

வவுனியா மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத்திட்டங்களை மையமாக வைத்து வவுனியா தெற்கு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாக்கப்பட்டது. அதே வேளை மன்னார் மாவட்டத்திலும் சிறியளவில் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டது. கொண்டச்சி மரமுந்திரிகை செய்கைக்கான குடியேற்றம் இதற்கு உதாரணமாகும்.

### தமிழர்களின் அரசியலுணர்வு வளர்ச்சி (1972 ம் ஆண்டு யாப்புவரை)

1833ம் ஆண்டு அறிமுகப்பட்ட கோல்புறாக் அரசியல் சீர்திருத்தத்துடனேயே இலங்கைத் தமிழர்களின் நவீன அரசியல் ஆரம்பமாகின்றது 1921 வரை தமிழர்கள் பண்பாட்டுத் தளத்தில் தமிழர் என்ற அடையாளத்தையும் அரசியல் தளத்தில் இலங்கையர் என்ற அடையாளத்தையும் முன்னெடுத்திருந்தனர். அதாவது தமிழர்களாகவும், இலங்கையர்களாகவும், வாழ முற்பட்டிருந்தனர்.

1921ம் ஆண்டு இலங்கை தேசிய காங்கிரஸ் உருவாக்கத்தின் போது எழுத்து மூலமாக செய்து கொண்ட ஒப்பந்தத்தை சிங்களத் தலைவர்கள் நிராகரித்ததினால் அரசியல் தளத்திலும், தமிழர்கள் என்ற அடையாளத்தை முன்னெடுக்கத் தொடங்கினர். இவ் முன்னெடுப்புடன் தமிழர்களின் இன வழி அரசியலும் ஆரம்பமாகி வளரத் தொடங்கியது. அரசியல் வளர்ச்சிக் கட்டமும் இரண்டாவது கட்டத்திற்கு சென்றது.

தமிழர்களின் இனவழி அரசியலை இலங்கைக்கான சுதந்திர இயக்கத்தை உருவாக்கி அதன் முதலாவது தலைவராகப் பதவிவகித்த சேர்.பொன்.அருணாசலம் ஆரம்பித்து வைத்தாலும், அதனை ஒரு கட்டம் வரை வளர்த்தெடுத்தவர் ஜீ.ஜீ. பொன்னம்பலமே ஆவார். இக்கட்டம் 1921 இதிலிருந்து 1949 வரை நிலைத்திருந்தது. இலங்கை ஒற்றையாட்சி அமைப்பினை ஏற்றுக் கொண்டு அவ்வாட்சி அமைப்பில் தமிழர்களுக்கு சமவாய்ப்பினைக் கோருவதே இக்காலகட்டத்தின் தமிழ் அரசியலாக இருந்தது. இக்கோரிக்கை 50 : 50 என்ற வடிவமாக டொனமூர் அரசாங்க காலத்தில் 1936ம் ஆண்டு தனிச் சிங்கள மந்திரிசபை அமைக்கப்பட்டதனைத் தொடர்ந்து எழுச்சி அடைந்தது.

1947ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சோல்பரி அரசியல் யாப்பின் மூலம்

தமிழர்களின் இனவழி அரசியலை இலங்கைக்கான சுதந்திர இயக்கத்தை உருவாக்கி அதன் முதலாவது தலைவராகப் பதவிவகித்த சேர். பொன்.அருணாசலம் ஆரம்பித்து வைத்தாலும், அதனை ஒரு கட்டம் வரை வளர்த்தெடுத்தவர் ஜீ.ஜீ. பொன்னம்பலமே ஆவார்.

பெரும்பான்மைச் சமூகத்திடம் முழுமையான ஆட்சி அதிகாரம் சென்றடைந்தது. அதற்கேற்ற வகையில் பிரித்தானிய மாதிரி பாராளுமன்ற அரசாங்க முறையும், முதல் முதலாக இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது பெயரளவு அதிகாரங்களை மட்டுமே பிரித்தானிய அரசு தன்னிடம் வைத்திருந்தது.

பெரும்பான்மைச் சமூகத்திடம் ஆட்சி அதிகாரம் சென்றதனைத் தொடர்ந்து ஒற்றையாட்சி அமைப்புக்குள் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையினைத் தமிழர்கள் இழந்தனர். இதனால் தமிழர் தாயகத்தை வடக்கு - கிழக்கு என வரையறுத்து அதற்கு அதிகாரங்களை கோருகின்ற சமஷ்டிக்கோரிக்கையினை முன்னெடுக்கத் தொடங்கினர். இக் கோரிக்கையுடன் தமிழர் அரசியல் மூன்றாவது கட்டத்துக்குள் நுழைந்தது. இதற்கேற்ப தமிழர் அரசியல் தலைமையும் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் கைகளிலிருந்து செல்வநாயகத்தின் கைகளுக்கு மாறியது. அரசியல் இயக்கம் என்ற வகையில் தமிழ்க் காங்கிரஸ் கட்சி பின்தள்ளப்பட்டு தமிழரசுக் கட்சி முன்னிலைக்கு வந்தது.

1949ம் ஆண்டு தமிழரசுக் கட்சி தோற்றம் பெற்றாலும் அரசியல் போக்கின் பிரிநிலைக் கோட்டை 1956ம் ஆண்டின் தனிச் சிங்களச் சட்டமே உருவாக்கியது. இச்சட்டத்திற்கு எதிராக தமிழரசுக் கட்சி நடாத்திய போராட்டங்கள் தமிழ் இன உணர்வு அரசியலை தமிழ்த் தேசிய அரசியல் என்ற கட்டத்திற்கு வளர்த்துச் சென்றது.

காலிமுகத்திடல் சத்தியாகிரகப் போராட்டம் (1956), திருமலை யாத்திரை (1956), சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் (1957, 1958) தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள மொழி அமுலாக்கலுக்கு எதிரான சத்தியாக்கிரகப் போராட்டம் (1961) என்பன தமிழரசுக் கட்சி நடாத்திய முக்கிய போராட்டங்களாகும்.

இப்போராட்டங்கள் காரணமாகவே ஓரளவு அதிகாரப் பங்கீட்டினை வழங்கக் கூடிய பண்டா - செல்வா ஒப்பந்தம் (1957), டட்லி - செல்வா ஒப்பந்தம் (1965) ஆகியவை கைச்சாத்திடப்பட்டன. எனினும், சிங்கள மக்களின் கடுமையான எதிர்ப்பினால் முதலாவது ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. இரண்டாவது ஒப்பந்தம் உறை நிலைப்படவிடப்பட்டது.

சோல்பரி யாப்பு ஆட்சியின் இறுதி காலத்தில் அரசினைச் சிங்கள மயமாக்கும் செயற்பாடு பூரண நிலைக்கு வந்தது. இது விடயத்தில் முதலாவது குடியரசு யாப்பு மேற்கொண்ட பணி சோல்பரி கால சிங்கள மயமாக்கத்திற்கு அரசியல் யாப்பு நிலை அங்கீகாரம் கொடுத்ததே ஆகும். இதற்காக பெயரளவில் இருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் உட்பட அனைத்தும் நீக்கப்பட்டன. இவ் அந்தஸ்துடன் தமிழர்கள் முழுமையாகவே அரசியல் யாப்பு வழங்கிய அரச அதிகாரக் கட்டமைப்பில் இருந்து ஒதுக்கப்பட்டனர். தமிழர்கள் இலங்கை என்ற அரச கட்டமைப்புக்குள் தமக்கு நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையினை இழந்தனர். இதனால் தமக்கென ஒரு தனியான நாட்டினை அமைத்துக் கொள்வதே ஒரே தீர்வு என்ற முடிவுக்கு வந்தனர். தமிழீழப் போராட்டமும் ஆரம்பமாகியது. இப்போராட்டம் அடிப்படையில் அதிகாரத்தைக் கைப்பற்றும் போராட்டமாக இருந்தமையினால் தமிழர் அரசியலில் பாராளுமன்ற ஜனநாயக அரசியலின் முக்கியத்துவம் முடிவுக்கு வந்தது. விடுதலை இயக்கங்கள் தமிழர் அரசியலைத் தமதாக்கிக்கொண்டன. இப்போக்குடன் தமிழர் அரசியலில் நான்காவது கட்டம் ஆரம்பமாகியது.

1972ம் ஆண்டு அரசியல் யாப்பு இவ் நான்காவது கட்டத்தினை தொடக்கி வைத்தாலும் 1983ம் ஆண்டு இனக்கலவரமே உருவாக்கியது இப்போக்கில் ஒரு பிரிநிலைப் போக்கை தெளிவாகக் காட்டியது. தமிழர் தாயகத்திற்கே யுத்தம் கொண்டு வரப்பட்ட பின்னர் ஆயுதப் போராட்டம் பிரதான வழிமுறையாக மாறியது.

### முதலாவது குடியரசு அரசியல்யாப்பு - 1972

முதலாவது குடியரசு அரசியல் யாப்பு - 1972ம் ஆண்டு மே மாதம் 22ம் திகதி நடைமுறைக்கு வந்தது. பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் இணைத்த அரசியல் நிர்ணயசபை யாப்பினை உருவாக்கியது. சிங்கள இடது சாரித் தலைவர்களில் ஒருவரான கொல்வின் ஆர்.டி. சில்வா யாப்பினை வரையும் குழுவிற்குத் தலைவராக விளங்கினார்.

அரசியல் நிர்ணய சபையின் முதலாவது கட்டத்தில் தமிழ் மக்களின் நலன்கள் அடங்கிய சமஷ்டி ஆட்சிமுறை யோசனைகளை தமிழரசுக்கட்சி முன்வைத்தது. சிங்களத் தலைவர்கள் அதலை நிராகரித்தனர். இதனால் தமிழரசுக்கட்சி யாப்பு உருவாக்கச் செயற்பாடுகளில் பங்குபற்றாமல் அரசியல் நிர்ணய சபையை பகிஷ்கரித்து வெளியேறியது. இறுதியில் தமிழ் மக்களின் அங்கீகாரம் இல்லாமலே புதிய அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்தது. இதன் மூலம் தமிழ் மக்களின் பங்குபற்றுதல் இல்லாமல் புதிய யாப்பினை உருவாக்க முடியாது. என்ற சோல்பாரிக் குழுவினரின் எதிர்பார்ப்பு பொய்யாகிப்போனது.

புதிய யாப்பு தமிழ்த் தரப்பிடையே ஒற்றுமையை வளர்த்தது. பல்வேறு தமிழ்க் கட்சிகளும் இணைக்கப்பட்டு 1972ல் தமிழர் கூட்டணி உருவாக்கப்பட்டது. இது யாப்புத் திருத்தத்திற்கான குறைந்த பட்ச கோரிக்கையாக ஆறு அம்சக் கோரிக்கையை முன்வைத்தது. அதுவும் சிங்கள தலைவர்களால் நிராகரிக்கப்பட்டது.

முன்னரே கூறியது போல சோல்பரி யாப்பு அரசினை சிங்களமயமாக்கும். செயற்பாட்டினை பூரணப்படுத்தி வைக்க முதலாவது குடியரசு யாப்பு அதற்கு அரசியல் யாப்பு அங்கிகாரத்தை வழங்கியது. செயற்பாடு மூன்று வகைகளில் இடம் பெற்றது. அரச அடையாளங்களுக்கு அந்தஸ்துக் கொடுத்தல், சிங்கள மயமாக்கப்பட்ட அதிகார நிறுவனங்களை வலுப்படுத்தல், ஏற்கனவே தமிழ் மக்களுக்கென பெயரளவில் இருந்த பாதுகாப்புகளை இல்லாதொழித்தல் என்பனவே அவ் மூன்றுமாகும்.

இலங்கையின் தேசியக் கொடியான சிங்களக் கொடி பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டதே தவிர அரசியல் யாப்புச் சட்டத்தின் ஏற்பாடாக இருக்கவில்லை. புதிய யாப்பில் அதற்கு அரசியல் யாப்பு நிலை அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதனை வழங்கும் போது புதிய பரிமாணமாக பௌத்தத்திற்கும் முன்னுரிமை வழங்கும் வகையில் கொடியின் நான்கு மூலைகளிலும் அரசமர இலைகள் சேர்க்கப்பட்டன. இதேபோல தேசிய கீதத்திற்கும் அரசியல் யாப்பு நிலை அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இதற்கு அப்பால் பௌத்த மதம் முதன்மை மதமாக்கப்பட்டது. ஏனைய மதங்களின் மத சுதந்திரங்கள் பேணப்படும் அதேவேளை பௌத்த மதத்தைப் பேணிப் பாதுகாப்பது அரசின் கடமை என்றும் கூறப்பட்டது. இதன்மூலம் நீண்ட காலமாக இலங்கை ஆட்சியில் நிலவிய மத சார்பின்மை இல்லாமல் செய்யப்பட்டது.

அடையாள அந்தஸ்தில் அடுத்த முக்கிய விடயம் சிங்கள மொழி அரச கரும மொழி என்பதற்கு அரசியல் யாப்பு அந்தஸ்து வழங்கப்பட்டமையாகும். இதுவும் முன்னர் பாராளுமன்ற சட்டமாக இருந்ததே தவிர அரசியல் யாப்பின் ஒரு ஏற்பாடாக இருக்கவில்லை.

(தொடரும்)

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக அறிக்கைகள்

## வலி வடக்கில் இராணுவம் மேற்கொள்ளும் வீடழிப்பு சம்பவத்திற்கு கண்டனம்



கடந்த சில நாட்களாக வலிகாமம் வடக்கிலுள்ள சட்டவிரோத உயர்பாதுகாப்பு வலயப்பகுதிகளில் அமைந்துள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான வீடுகளை மீண்டும் இராணுவத்தினர் இடித்து அழித்து வருவதாக 27.10.2013 ஞாயிற்றுக்கிழமை செய்திகள் வெளியாகியிருந்தது.

இன்றைய தினம் அங்கு நிலைமைகளை பார்வையிடச் சென்ற ஊடகவியலாளர்கள் இராணுவத்தினரால் கடுமையாக அச்சுறுத்தப்பட்டதுடன் அவர்களது புகைப் படக் கருவிகளும் பறித்து அதிலிருந்த புகைப்படங்களையும் அழித்துள்ளனர்.

இத்தகைய செயற்பாடுகள் இலங்கை அரசின் சொந்த சட்ட ஆட்சியையே கேலிக் கூத்தாக்குவதுடன். மனித உரிமை மீறல் செயற்பாடும். ஊடக சுதந்திரத்தினை அடக்க முற்படும் செயற்பாடுமாகும். இவ்விரு சம்பவங்களையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இவ்வாறு நில அபகரிப்பு மற்றும் அழிப்பு நடவடிக்கைகள் மூலம் அங்கு சிங்களக் குடியேற்றங்களையும். இராணு வக் குடியேற்றங்களையும். பௌத்த கோவில்களையும் அமைக்க இலங்கை அரசானது முயற்சிக்கின்றது. இந் நடவடிக் கைகள் ஏற்கனவே யுத்தத்தினால் பாதிக்கப்பட் டுள்ள தமிழ் மக்களை மீண்டும் மீண்டும் பாதிக்கச் செய்வதாக அமைந்துள்ளது.

வலிகாமம் வடக்குப் பகுதிகளிலுள்ள காணிகளை இராணுவத்தின் பிடியிலிருந்து விடுவித்து அப்பகுதி மக்களை மீண்டும் அங்கு குடியமரவைப்பதற்காக அரச இயந் திரத்தின் ஓர் அங்கமான இலங்கையின் உயர்நீதிமன்றத்திலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் பெருமளவான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அவ்வழக்குகள் நிலுவையிலுள்ளபோது அவ் அரச இயந்தி ரத்தின் மற்றொரு அங்கமான இராணுவத் தினரால் இவ்வாறான சம்பவங்கள் மேற் கொள்ளப்பட்டுவருகின்றது. நீதிமன்றங்களில் வழக்கு ஒன்று நிலுவையிலுள்ளபோது அவ்வழக்கின் விடயப்பொருளின் தன்மையானது பேணிப்பாதுகாக்கப்படல் வேண்டுமென்பது சட்டவிதி. அவ்வாறிருக்க இராணுவத்தினரின் இச் செயற்பாடானது சட்டவாட்சியை நகைப்பிற்கிடமான வகையில் மீறியுள்ளது. இந்நிலையானது தமிழ் மக்கள் நீதி. நியாங்களை பெற்றுக்கொள்வதென் பதனை தொடர்ந்தும் கேள்விக்குள்ளாகியுள்ள தையே வெளிப்படுத்துகின்றது.

மேற்படி பிரச்சினைகளை கையாள்வதற்கு சட்டரீதியாக தீர்வுகாண தமிழ் மக்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள நிலையில் அந்த சட்டநடவடிக்கைகளை கேலிக்கூத்தாக்கும் வகையில் சிறீலங்கா அரசு செயற்பட்டுவருகின்றமையானது இப்பிரச்சினையை அரசியல் ரீதியாகவும் அணுகப்பட வேண்டிய தேவை உள்ளமை அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளது.

இவ்விடயத்தில் தமிழ் மக்கள் தொடர்ந்து கட்டமைப்புச்சார் இன அழிப்புக்கு உள்ளாக் கப்படுவதனைத் தடுக்க காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கு உள்ளது. இவ்வாறான கட்டமைப்புசார் இன அழிப்பு பிரச்சினைகளை சர்வதேச சமூகம் வெறும் சட்டக்கோணத்தில் மாத்திரம் நோக்காது இவற்றினை ஓர் அரசியற் பிரச்சினையாக கருதி நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும். கொழுந்துவிட்டெரியும் இனப் பிரச்சினைக்கு ஓர் நிரந்தரத்தீர்வினை அடைவதனூடாகவே இத்தகைய கட்டமைப் புசார் இன அழிப்பைத் தடுத்து நிறுத்த முடியும். அதற்கான ஒரே வழி தமிழ்த் தேசத்தின் இருப்பினை அங்கீகரிப்பது மட்டுமேயாகும். எனவே தமிழ்த் தேசத்தின் இருப்பினை அங்கீகரிப்பதன் மூலம் மேற்படி அழிப்பு நடவடிக்கைகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த சர்வதேச சமூகம் காத்திரமான நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென்று கோருகின்றோம்.

- வெளியிட்ட திகதி -28-10-2013

## தமிழ்நாடு சட்டப்பேரவை தீர்மானத்தை வரவேற்கின்றோம்

கடந்த 24-10-2013 திகதியன்று தமிழ் நாடு சட்டசபையில் நவம்பர் மாதம் இலங் கையில் நடைபெறவுள்ள கொமென்வெல்த் நாடுகளின் தலைவர்களின் கூட்டத்தை இந்தியப் பிரதமர் முற்றுமுழுதாக புறக்க ணிக்க வேண்டும் என்றும். இந்தியாவின் பிரதிநிதித்துவம் பெயரளவுக்கேனும் அம் மாநாட்டில் அமையக் கூடாதென்றும், அத்துடன் தமிழர்கள் சுதந்திரமாகவும் சிங்களவர்களுக்கு இணையாகவும் இலங்கையில் வாழக் கூடிய சூழலை சிறீலங்கா அரசு உருவாக்கும் வரையில் கொமென்வெல்த் கூட்டமைப்பிலிருந்து இலங்கை தற்காலிகமாக நீக்கப்படல் வேண்டும் என்றும் வலியுறுத்தி தமிழ் நாடு சட்டசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

முதலமைச்சரும். அ.தி.மு.க தலைவியுமான மாண்புமிகு ஜெயலலிதா அம்மையார் இத்தீர்மானத்தை முன்மொழிந்திருந்த நிலையில் மேற்படி தீர்மானம் அனைத்துக் கட்சிகளாலும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஈழத் தமிழ் மக்கள் தொடர்ச்சியான கட்ட மைப்புசார் இன அழிப்புக்கு முகம் கொடுத்து வரும் நிலையில் அந்த மக்கள் துணிந்து தமது உயிர்களைப் பணயம் வைத்து கடந்த 21-09-2013 அன்று இடம்பெற்ற தேர்தலின் போது சிறீலங்கா அரசுக்கு எதிரான தமது உணர்வுகளையும். தமது விடுதலைத்தாகத் தையும் தமது வாக்குகளை பயன்படுத்தி வெளிப்படுத்தியுள்ளனர். இந்நிலையில் தமிழ் நாட்டு சட்டசபைத் தீர்மானம் ஒட்டு மொத்த ஈழத் தமிழ் மக்களுக்கும் பெரும் நம்பிக்கை யையும். உற்சாகத்தையும் ஏற்படுத்தியுள் ளது.

ஈழத் தமிழர்களுடைய இனப்பிரச்சினை சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ள இன்றைய சூழலில் அந்த சர்வதேச சமூகத்தை சரியாகக் கையாள்வதிலேயே எமது உரிமைப் போராட் டத்தின் வெற்றி தங்கியுள்ளது. சர்வதேச சமூகம் என்கின்றபோது இந்தியாவும் மேற்குல நாடுகளும் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றன. ஈழத் தமிழ் மக்களுடைய பிரச்சினை தொடர்பாக இந்திய மத்திய அரசை எமக்கு சாதகமான நிலைப்பாட்டை எடுக்கவைக்கக் கூடிய ஒரே சக்தி தமிழ்நாடு ஆகும். அந்த வகையில் தமிழ்நாட்டு மக்கள் ஒன்றுபட்டு அணிதிரண்டு ஈழத் தமிழர்களுடைய இன அழிப்புக்கு எதிராகவும். அவர்களது சுயநிர்ணய உரிமையின் அங்கீகாரத்திற்காகவும் தொடர்ந்து செயல்ப்பட்டால் இந்திய மத்திய அரசு அதற்கு செவிசாய்க்க நிர்ப்பந்திக்கப்படும். அந்த வகையில் தமிழ் மக்கள் மீது இன அழிப்பை தீவிரப்ப டுத்திவரும் சிறீலங்கா அரசுக்கு நெருக்க டியைக் கொடுக்கும்விதமாக நிறைவேற்றப் பட்டுள்ள மேற்படி தீர்மானத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வரவேற்கின்றது.

இதற்கு மேலதிகமாக ஈழத்தமிழ் மக்கள் தனித்துவமான இறைமை கொண்ட தேசம் என்பதுடன். சுயநிர்ணய உரிமைக்கு உரித்தானவர்கள் என்றும் அந்த அந்தஸ்த்தை இந்திய மத்திய அரசு முழுமையாக அங்கீகரிக்க வேண்டுமென்ற தீர்மானத்தையும். தொடரும் இன அழிப்பை உடனடியாக தடுத்து நிறுத்தும் வகையில் சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பின் கீழ் உடனடியாக இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படல் வேண்டும் என்ற தீர்மானத் தையும் தமிழ்நாடு சட்டசபை எதிர்காலத்தில் நிறைவேற்ற வேண்டுமென உரிமையுடன் கோருகின்றோம்.

- வெளியிட்ட திகதி - 26.10.2013

## இசைப்பிரியா பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டமைக்குக் கண்டனம்

தமிழீழ தேசிய தொலைக்காட்சியின் செய்தி வாசிப்பாளராக பணியாற்றிய இசைப்பிரியா அவர்கள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு பாலியல் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட மைக்கான வீடியோ ஆதாரங்களை பிரித் தானியாவைத் தளமாகக்கொண்டியங்கும் சனல் 4 தொலைக்காட்சி கடந்த 31-10-2013 அன்று வெளியிட்டுள்ளது.

இவ் வீடியோ காட்சி இசைப்பிரியா யுத்தம் நடைபெற்றபோது இடையில் சிக்கி இறக்கவோ. காணாமல்போகவோ இல்லை என்பதனையும் மாறாக சிறீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பாலியல் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்பதனை அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றது.

கைதியாக உள்ள ஒரு போராளியைக் கொல்வதே சர்வதேச சட்டத்தின் கீழ் ஒரு மோசமான குற்றமாக இருக்கும் நிலையில். தாம் கைது செய்து வைத்திருந்த ஒரு ஊடகத்துறை சார்ந்த ஒரு பெண்ணை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தி கொடூரமாகக் கொன்றுள்ளனர். இது மிக மோசமான யுத்தக்குற்றமாகும். யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக சனல் 4 உட்பட பல சர்வதேச மற்றும் உள்ளூர் ஊடகங்களும் இணையத் தளங்களும் பெருமளவு ஆதாரங்களை கடந்த காலத்தில் வெளியிட்டு இலங்கை அரசின் இனப்படுகொலையை சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்தியிருந்தன.

இந்நிலையில் சனல் 4 வெளியிட்டுள்ள இசைப்பிரியா உயிருடன் இராணுவத்தின் கையில் பிடிபட்டிருக்கும் காட்சிகளும். பாலியல்ரீதியாக வதைக்கப்பட்டு கொல்லப்பட் டுள்ளமைக்கான ஆதாரங்களும் தமிழ் மக்கள் மீது சிறீலங்கா அரசாங்கம் மேற் கொண்டுள்ள கொடூரங்களை மேலும் நிரூபிக்கும் வலுவான சான்றாக அமைந் துள்ளது. இசைப்பிரியா மீதான பாலியல் வல்லுறவு மற்றும் படுகொலையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது.



இந்த வீடியோ ஆதாரமும் கடந்தவாரம் பி பி சி வெளியிட்டியிருந்த பெண்ணொருவர் விசாரணைகளின் போது குழுவாக பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட் டிருந்தமை பற்றிய ஆதாரமும் யுத்தத்தின் இறுதிக் கட்டத்திலும் அதன் பின்னரும் அரசினால் மேற்கொள்ளப்பட்ட. மேற்கொள்ளப்பட்டுவரும் படுகொலைகள் மற்றும் பெண்கள் மீது பாலியல்வதைகளை வெளிப்படுத்துவதாக உள்ளது. அது மட்டுமன்றி யுத்தம் முடிந்து 3 வருடங்கள் கடந்த பின்னரும் தமிழினத்தை இல்லாது அழிக்கும் நோக்கில் கட்டமைப்புச்சார் (structural) இன அழிப்பு பல்வேறு கோணங்களில் திட்டமிட்டு அசுர வேகத்தில் முன்னெடுக்கப்படுகின்றது. எனவே இசைப்பிரியா மீதான பாலியல் வல்லுறவு மற்றும் படுகொலை உட்பட நடைபெற்ற இனப்படுகொலைகள் தொடர்பாக சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டும். மேற்படி குற்றச்செயல்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள இராணுவம் வடகிழக்கில் நிலைகொண்டிருக்கும்வரை அவ்வாறான விசாரணை மேற்கொள்வது சாத்தியமற்றது. எனவே வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் சிறீலங்கா அரசியல் அமைப்பிற்கு வெளியில் சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பில் இடைக்கால நிர்வாகம் ஒன்று உடனடியாக ஏற்படுத்தப்பட்டு சுதந்திரமான. சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டும். இதன் மூலமே இனப்படுகொலை தொடர்பான சாட்சியங்களை திரட்டுதல். சாட்சியங்களை பாதுகாத்தல். குற்றவாளிகள் தண்டிக்கப்படுதல். பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் நீதி பெற்றுக்கொள்ளுதல். என்பனவும். தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கட்டமைப்பு சார் இனஅழிப்பைத் தடுத்து நிறுத்துவதும் நடைமுறைச்சாத்தியமாகும்.

வெளியிட்ட திகதி - 03.11.13

வணக்கம் வணக்கம் நான் கல்வயல் கனகசிங்கம் எப்படி உங்கட பாடு ஏதோ எங்கட சனத்தை துரத்திற துன்பங்கள் போல காலம் ஓடிக்கொண்டிருக்கு விடிவைத்தான் காணவில்லை. கொள்கையில் நேர்மையாக உள்ளவர்கள் உந்த மாகாண சபையில ஒரு அதிகாரமும் இல்லை என்று திரும்பிச் திரும்பிச் சொல்லவும் கேட்காமல் கூட்டமைப்புக்காரர் விட்ட பீலா கதைகளை நம்பி ஒரு அங்கலாய்ப்பில மாகாணசபைக்கு வாக்களிச்சு மிகப் பெரிய வெற்றியை பெற்றுக்கொடுத்தார்கள் மக்கள். உலகத்திலேயே ஒரு அதிகாரமும் இல்லாத சபைக்கு எல்லா அதிகாரமும் இருக்குது என்று பொய்சொல்லி மக்களை ஏமாற்றி நம்பவைத்து அதிகாரம் இல்லாத சபைக்கு 80 வீதம் வாக்குகளை பெற்று எஜமான்களுக்கு வெற்றிபெற்றுக்கொடுத்த தலைவர்கள் எங்கட தலைவர்கள் மட்டும்தான்.

வாக்களிச்சும் வெற்றி பெற்றுக்கொடுத்தம் ஆனால் ஒன்றுமா நடக்கிறமாதிரியாய் தெரியவில்லை என்று மக்கள் அலுத்துக் கொள்ளுறதுதான் என்ர காதிலை மீண்டும்மீண்டும் கேட்குது.




கனடாவிற்கு ஊர்சுற்றப் போன சாம் ற்கும், சுமாக்கும் ஈமெயில் அனுப்பினவராம் விக்கியர் என்னைக் கொண்டுவந்து அனாதரவாக இருத்திப்போட்டு

# கனவுகள் மெய்ப்பட வேணும் பாருங்கோ

நீங்கள் போட்டிங்கள் இங்க நான் வலிவடக்கு மக்களின் நெருக்கடியிலயும், காணாமல் போன ஆக்களின்ர நெருக்கடியிலயும் இருந்து தப்பமுடியாமல் திணறுகிறேன் என்று. போற போக்கைப்பார்த்தால் மனுசன் கோயிலுக்குப்போய் கும்புடுறதிற்கும் கொழும்பிற்கு ஒருக்கா ரெலிபோன் அடிச்சுப்போட்டுதான் வெளிக்கிடும் போலகிடக்கு.

ஆனால் மற்றப் பக்கம் ஆள் ஆப்புவைக்கிற விசயங்கள் எல்லாம் பக்காவா செய்யுது.தமிழக தொப்பிள் கொடி உறவுகள் எங்களுக்காக குரல்கொடுக்கிறதை தடுக்க குரல்வளையை அறுக்க மனிசன் படாதபாடுபடுது. சிங்களருக்கும் தமிழருக்மான பிரச்சினை புருசன் - பெஞ்சாதி பிரச்சனை அதுக்குள்ள நீங்கள் வரவேண்டாம் எண்டு "த கின்டு" ஆங்கில நாளிதளுக்கு முதல்ல சொன்னார். அதுக்கு எதிர்ப்புக் கிளம்பினதும் தேர்தலை பாதிக்கப்போகுது எண்ட பயத்தில தமிழ் ஊடகங்களுக்கு சளாப்பி அதே பதிலை சொல்ல தேசிய ஊடகங்கள் எண்டு சொல்லுற சில ஊடகங்கள் அவர் அப்படிச் சொல்லவேயில்லை என்று பொய் எழுதி மூடி மறைச்சுப் போட்டுதுகள். போன 16ம்திகதி மனிசன் திருப்பி அதே பத்திரிகைக்கு பேட்டி கொடுத்திருக்கிறார் நீங்கள் எங்கட அக்கறையில தான் குரல்கொடுக்கிறியள் ஆனால் சிங்கள மக்களின்ர மனங்களை புண்படுத்துறதால அவர்கள் அதனை தவறாக விளங்கி கோபப்பட்டு எங்கட மக்களுக்கு எதிராக செயற்படுகினம் எண்டு. அப்படி என்றால் தமிழகம் எங்களுக்குகாக கதைக்கிறத விட்டுட்டு' பொத்திக்கொண்டிருங்கோ எண்டு திருப்பவும் நாசுக்காக சொல்லியிருக்கிறார். யாருடைய மனம் புண்படுறதுக்காக முதலைக்கண்ணீர் வடிக்கிறார் என்று தெரியவில்லை. புண்படுறது சிங்கள மக்களின்ர மனமோ அல்லது அவற்ற சம்பந்தியிரன்ரயும், மருமக்களின்ர மனங்களுமோ என்பதுதான் புரியவில்லை.

ஏற்கனவே யாழ்ப்பாணத்திற்கு வாங்கோ என்று கடிதம் எழுதிறமாதிரி எழுதி மன்மோகனை பொதுநலவாய மாநாட்டிற்கு வரப்பண்ணுறதுக்கு அவர் ஆடின நாடகம் எல்லாருக்கும் தெரியும். போன மாதம் 28 ஆம் திகதி கூத்தமைப்புத் தலைமையள் கூட்டுச் சேர்ந்து மன்மோக னுக்கு அழைப்பிதழ் அனுப்பினவ்யாம் சனாதிபதியின்ர வேண்டுகோளின் பெயரில் அனுப்பின அழைப்பிதழக்கு ஒன்றுக்கு 04 தடவையாக இந்திய வெளிவிவகார அமைச்சு செயலாளர் அம்மா எங்களை தமிழக நெருக்கடிகளுக்குள் இருந்து காப்பாற்றிப் போட்டியள் என்று நன்றி பாராட்டினாராம். ஆனால் வடக்கு மாகாணசபையை அமைச்சதுக்குத் தான் நன்றி சொல்ல மன்மோகனுக்கு கடிதம் போட்டனாங்கள் என்று தமிழ் ஊடகங்களுக்கு கதை சொல்லி ஏமாற்றிப்போட்டினம்.

பொதுநலவாய மாநாட்டிற்கு போகக்கூடாதென்று புலம்பெயர் தமிழர்கள் உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டமென்று இரவுபகல் பாராது, நித்திரை சோறு தண்ணி இல்லாம போராடி பிரதமருக்கு அழுத்தம் கொடுத்தவை. அந்த அழுத்தத்தை சமாளிக்க பிரமதர் தான் யாழ்ப்பாணம் போய் நிலைமைகளை நேரில பாக்கிறன் என்று உத்தரவாதமளித்து இங்கு வந்தார். இலங்கை அரசாங்கத்தின்ர பல்வேறு தடைகளையும் தாண்டி அவர் யாழ்ப்பாணம் வந்தார்.

யாழ்ப்பாணத்தில பிரித்தானிய பிரதமரைச் சந்தித்த கூட்டமைப்புக்காரர் அவரிட்ட 13ம் திருத்தச் சட்டத்தையும் மாகாண சபையையும் வலுப்படுத்திற வகையில 6 கோரிக்கைகளை உள்ளடக்கி ஒற்றையாட்சியை பலத்படுத்தும் கோரிக்கைகளையே முன்வைச்சவையாம். கிழக்கு மாகாணம் பற்றி எதுவும் எதுவும் இல்லையாம்.

நிலைமைகளை பார்க்க இங்க மக்கள் படுறதுன்பங்களை நேரடியாக ஆவணப் படுத்த அந்த மனிசன் தன்னோட ஊருப் பட்ட சர்வதேச ஊடகங்களை கூட்டிக் கொண்டுவந்தவர். அந்த நேரம்பார்த்து கூட்டமைப்பு எம்பிமார் முழுப்பேரும் ஒற்றுமையாக (என்னவாயிருந்தாலும் ஒற்றுமை முக்கியமல்லோ) மாவையின்ர தலைமையில மாவிட்டபுர கந்தன்ர கோடிக்குள்ள ஒளிச்சிருந்திட்டினம். தாங்கள் ஒளிச்சிருக்கிறத நியாயப்படுத்த டேவிற்கமரூன் மாவிட்டபுரம் வருவார் அவரை சுமந்திரன் கூட்டிவருவார் என்று கதைவிட்டு தங்களோட 1000 திற்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த சனத்தையும் கொட்டாவி விடவச்சிட்டு கொடுத்தாங்க ஒரு அல்வா உலகமகாகூத்துபாருங்கோ அந்தா வாரார் இந்தாவாறாரெண்டுட்டு, கவனமாக பலாலி போய் பிளேன் ஏத்திவிட்டுட்டு அதுக்கும் விளக்கம் சொல்ல உவங்களால தான் முடியும் .

ஆனால் இவங்கட ஏமாத்துகள நல்லா விளங்கிக் கொண்டு தங்கடபாட்டில போய் யாழ் நூலகத் திற்குப் பக்கத்தில நின்று கஜேந்திரகுமார், அனந்தி எழிலன், கஜேந்திரன், சிவாஜிலிங்கம், கஜதீபன், ரவிகரன், பாதர் செபமாலை, பாதர் யூட்நிக்சன், ஆக்கள் காவல்துறையின்ர தடையையும் உடைச்சுக் கொண்டு டேவிட்கமருன் வந்த வாகனத்திற்கு பக்கத்தில மக்களை கொண்டு போய் மக்கள் இலங்கை அரசின்ர அடக்கு முறையை அவருக்கு நேரடியாக வெளிப்படுத் தினார்கள். சனல் 4, பிபிசி, உட்பட உலக பிரசித்தி பெற்ற ஊடகங்கள் எல்லாம் அந்தக் காட்சியை படம்பிடித்து உலகத்திற்கு காட்டின. வெறும் சில நூறு பேருடன் அவர்கள் நடத்திய போராட்டம் மட்டும் தான் தமிழ் மக்கள் இன்றும் அனுபவிக்கும் அவலங்களை கமருனுக்கும், உலகத்திற்கும் வெளிப்படுத்தினது. அந்தப் போராட்டம் மட்டும்தான் சில தினங்களாக மேற்குலகின் முக்கிய ஊடகங்களின் தலைப்புச் செய்திகளும் முக்கிய செய்திகளுமாக அமைந்தது. அவர்கள் மட்டும் பொலிஸ் தடையை உடைத்து கமருனுடைய வாகனத்திற்கு அருகில் சென்றிருக்க வில்லையாயின் அங்கு ஏற்கனவே சிறீலங்கா அரசினால் தமக்கு ஆதரவாகவும், கமருனுக்கு எதிராகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போராட் டம் மட்டும்தான் அவரது கண்ணில் பட்டிருக்கும்.

ஆனால் துரதிஸ்டம் என்னவென்றால் மறுநாள் உள்ளூர் ஊடகங்கள் சில உலக ஊடகங்களின் கவனத்தை ஈர்த்த காணாமல் போனோரின் போராட்டங்கள் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளாம மாவிட்டபுரத்தில ஒழிச்சிருந்தவை காப்பாத்திறவிதமாக அவர்கள் பெரும்போராட்டம் நடத்தியதாக

(19 ஆம் பக்கம் பார்க்க)

# நையாண்டியார் பதில்கள்

**த.தூரிகா, கைதடி, சாவகச்சேரி**

**கேள்வி:- யாழ் பொதுசன நுலகத்திற்கு முன்னால் கூடியிருந்த மக்களை சந்திக்க மறுத்த சம்பந்தன் பற்றி?**

**பதில் :-** நூலக வாசலில் காத்துக்கிடந்த காணாமல்போன உறவுகளை சந்தித்து அந்தப்பிரச்சினையை ஒட்டுமொத்த தமிழ் மக்களின்ர பிரச்சினையாக சர்வ தேச ஊடகங்களுக்கு காட்டி இலங்கை அரசுக்கு நெருக்கடி ஏற்படுத்த அவர் விரும்பவில்லை. அதனால் அவர் மக்களை சந்திக்க மறுத்தார். அதனால் ஆத்திரமடைந்த மக்கள் திட்டித்தீர்த்து விட்டார்கள். எத்தனை காலம் தான் ஏமாற்றுவார்கள் இந்த நாட்டிலே என்ற பட்டுக் கோட்டையரின் பாடல் தான் நினைவுக்கு வருகின்றது. மக்கள் சக்திக்கு முன்னதாக போலிகளது முகத்திரை மீண்டு மொருமுறை கிழிந்து தொங்குகின்றது.

**க.கருணாகரன், வட்டக்கச்சி,கிளிநொச்சி**

**கேள்வி :- ஜனாதிபதியின் பிறந்த நாளை முன்னிட்டு, மரம் நட்டு அசத்தியிருக்கி றாரே வடக்கு விவசாய அமைச்சர்?**

**பதில் :-** சிறீலங்கா கொடியிலிருக்கிற சிங்கத்தை நீக்கி சிறுத்தையை போடப் போறன் எண்டு வேட்டியை வரிஞ்சு கட்டி முழங்கினவர் இப்ப நல்லெண்ண சமிக்கை காட்டியிருக்கிறார் போலும்.

**ம.பாலுகா, குருநகர், யாழ்**

**கேள்வி:- வடக்கு மாகாணசபையின் ஆளுநர் உரையை ஒரு சாரார் புறக்கணித்துள்ளனரே?**

**பதில்:-** முதுகெலும்புள்ள 3பேர் துணிஞ்சு அந்த வேலையை செய்திருக்குதுகள். ஆனாலும் அந்த ஒரு சாரார் என்பவர்கள் மிகச்சிறிய அணி 30 பேரில வெறுமனே 3பேர் ஆனாலும் முடிந்ததை செய்ததற்கு பாராட்டுங்கள், வீரம், துரோகம் என பக்கம் பக்கமாக பத்திரிகை அறிக்கை விட்ட வித்துவான்கள் ஆளுனரோட புகைப்படம் எடுக்க முந்தியடித்தார்கள். துப்பாக்கி முனையில் வாழும் அனந்தி என்ற பெண்ணால் முடிந்ததைக்கூட,செய்ய முதுகெலும்பற்றவர்கள்.

**சே.சபேசன், குருமன் காடு ,வவுனியா**

**கேள்வி:- தமிழக உறவுகள் பற்றி வடக்கு முதலமைச்சர் சீ.வி விக்னேஸ்வரன் அடிக் கடி கூறிவரும் கருத்துக்கள் பற்றி?**

**புதில்:-**இவர்வெறுமனேஅம்புமட்டுமேஏவி விடுபவர்கள் கொழுப்பிலோ டில்லியிலோ இருப்பார்கள். சிலவேளைகளில் அவர்களே எழுதி அனுப்பிவிட்டு இவருக்கு தகவல் சொல்வதாகவும் கேள்வி. இவற்ற கருத்தால தமிழகம் கொதிச்சுப்போயிருக்குது. தஞ்சாவுர் முள்ளிவாய்க்கால் முற்றம் திறப்பு விழாவுக்குப் போன மாவையும் மற்றவரும் அங்க உள்ள ஈழ ஆதரவாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில்சொல்ல முடியாமல் துண்டைக்காணோம் என்று இடத்தை காலிபண்ணிட்டினமாம். அது மட்டுமே அந்த முற்றத்திற்காக அனைத்து ஓவியங்களையும் வரைந்த ஓவியர் சந்தானம் பேசும்போது சொன்னா ராம் விக்னேஸ்வரனின் முகத்தில் ராஜபக்சேவையும், சம்பந்தனின் முகத்தில் மன்மோகன்சிங்கையும் பார்க்கின்றேன் என்று.

# எம் கோரிக்கைகள்தான் எமது உயிர்

## தோழர் தியாகுவுடன் ஓர் நேர்காணல்

நேர்கண்டவர்-எஸ்.கோபாலகிருஸ்ணன்



நவம்பர் மாதம் இலங்கையில் பொது நலவாய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தலைவர்கள் சந்திக்கும் மாநாடு இடம் பெற்றது. அப்பாவித் தமிழர்களை கொத்துக் கொத்தாக அழித்தொழித்த சிங்களப் பேரினவாத அரசுக்கு இந்த மாநாட்டை நடாத்தும் வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இதில் இந்தியப் பிரதமரோ இந்திய அரசின் வேறொரு பிரதி நிதியோ கலந்து கொள்ளக் கூடாது என்று தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் வலியுறுத்தி வந்தன. இவற்றில் மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசின் தமிழகக் கிளையும் அடக்கம்.

இந்நிலையில் இலங்கையில் நடக்க இருக்கும் பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிப்பதற்கான மக்கள் போராட்டம் தமிழகத்தில் உருவாகி வளர்ந்தது. தமிழ் தேசிய விடுதலை இயக்கம் என்ற அமைப்பைத் தொடங்கி வழிநடத்திவருபவரான தோழர் தியாகு (கே. தியாகராஜன்) சென்னையில் அக்டோபர் ஒன்றாம் திகதி முதல் உண்ணாநிலைப் போராட்டத்தில் ஈடுபட்டார். இவரது போராட்டம் சென்னை வள்ளுவர்கோட்டத்தில் தொடங்கி இராயப்பேட்டை அரசு மருத்துவமனை வரை 9 நாளாக தொடர்ந்தது. பொது நலவாய அமைப்பிலிருந்து இலங்கை நீக்கப்படவேண்டும். மாநாடு இலங்கையில் நடைபெறக்கூடாது அப்படி நடந்தாலும் அதில் இந்தியா கலந்துகொள்ளக்கூடாது என்பது உள்ளிட்ட 9 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து போராடினர். அவரை மருத்துவமனையில் சந்தித்து இந்த நேர்காணல் பெறப்பட்டது.

**உங்கள் போராட்டத்தின் சாராம்சம் என்ன?**

இலங்கையை பொதுநலவாய கூட்டமைப்பிலிருந்து நீக்குக என்பதுதான் எமது முதன்மைக் கோரிக்கை. இலங்கை அரசு நிகழ்த்திய போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் ஆகியவை மெய்ப்பிக்கப்பட்டுவிட்டன. ஐ.நா ஆவணங்கள். சனல் 4 சான்றுகள் டப்ளின் நிரந்தர மக்கள் தீர்ப்பாயம். பாங்கி மூனே தெரிவித்த ஒப்புதல், சார்லர் பெப்ரி அளித்துள்ள ஆய்வறிக்கை ஐ.நா மனித உரிமை ஆணையர் நவிபிள்ளை கொழும்பிலேயே அளித்த பேட்டி ஆகியவை இலங்கை அரசின் போர்க்குற்றங்களுக்கு அசலான சான்றுகள். மனித உரிமைகள் சட்டத்தின் ஆட்சி, இனப்பாகுபாடின்மை ஆகியவற்றை விழுமியங்களாகக் கொண்ட பொதுநலவாய அமைப்பில் இடம்பெற இலங்கைக்குத் தகுதி இல்லை என்பதற்கு இதற்கு மேல் சான்று வேண்டாம். ஆகவே தென்னாபிரிக்காவை 1961 முதல் 1994 வரை விலக்கிவைத்ததைப் போல் ராணுவ ஆட்சியைக் காரணம் காட்டி பாகிஸ்தானை நீக்கிவைத்ததைப் போல் இப்போது வரை ஃபிஜி நாட்டை விலக்கிவைத்திருப்பதைப் போல். இலங்கையை பொதுநலவாய அமைப்பிலிருந்து நீக்க வேண்டும். 1971ஆம் வருடத்திய சிங்கப்பூர் பிரகடனம். 1991ஆம் வருடத்திய ஹராரே பிரகடனம். 2013 மார்ச் மாதம் எலிசபெத் ராணி வெளியிட்டுள்ள பொதுநலவாய கொள்கை ஆவணம் ஆகிய ஆவணங்களின்படி இலங்கையை நீக்குவதைத் தவிர பொதுநலவாய அமைப்பிற்கு வேறு வழியில்லை.

இதற்குப் பெருந்தடையாக இருப்பது இந்திய அரசு. இப்படி நீக்காவிட்டாலும் இலங்கையில் பொதுநலவாய உச்சி மாநாட்டை நடத்தக் கூடாது. அப்படியே நடந்தால் அதில் பிற பொது நலவாய அரசுகள் குறிப்பாக இந்திய அரசு கலந்துகொள்ளக் கூடாது என்பது எமது கோரிக்கை.

**இவற்றின் பயன் என்ன?**

தென்னாபிரிக்காவை விலக்கிவைத்ததால் தென்னாப்பிரிக்க இனஒதுக்கல் அரசுக்கு ஏற்பட்ட பாதிப்புகள். இன ஒதுக்கலை எதிர்த்துப் போராடிய கறுப்பு இன மக்களுக்கு கிடைத்த ஊக்கத்தை உலகறியும். இலங்கையை விலக்குவதால் இலங்கை அரசு பாதிக்கப்படுவது மட்டுமல்ல. சிங்கள மக்களிடம் காலம்காலமாக இருந்துவரும் பேரினவாத உளவியலுக்கு அது பேரிடியாக அமையும். மறுபக்கம் நீதிக்காகவும் உரிமைகளுக்காகவும் கடும் நெருக்கடிகளுக்கிடையே போராடிக் கொண்டிருக் கும் ஈழத் தமிழ்மக்களுக்கு அது பேரூக்கமாக அமையும். இது மக்கள் போராடுவதற்கான சனநாயக வெளியை உருவாக்கத் துணை செய்யும்.

இரண்டாவதாக பன்னாட்டளவில் இலங்கையில் பொருளியல் வளங்கள் பாதிப்படையும். மூன்றாவதாக இதனால் இந்திய வல்லாதிக்கத்துக்கும் சிங்களப் பேரினவாதத்துக்கும் இடையிலான முரண்பாடு கூர்மையடையும். ஈழமக்களின் உரிமைப் போராட்ட அரசியலும் இந்தியாவின் புவிசார் அரசியலும் ஒரு கோட்டில் இணைவதை நோக்கி இந்த முரண்பாட்டை நகர்த்த முடியும்.

**பொதுநலவாய மாநாட்டில் இந்தியா உள்ளிட்ட நாடுகள் கலந்துகொள்வதன் மூலம் இலங்கை அரசை போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் வாழ்வை சீரமைக்கவைக்க நிர்பந்திக்க முடியும். அந்த வாய்ப்பை இந்தியா தவறவிட்டுவிடக்கூடாது என்ற வாதத்தை இந்திய இலங்கை எல்லைப் படைகளில் முக்கியப் பதவிவகித்தவரான கர்னல் ஹரிஹரன் தெரிவித்திருக்கிறாரே?**

இப்படிச் சொல்பவர்கள் எந்த உலகத்தில் வாழ்கிறார்கள்? இந்திய அரசு அதன் தலைமை அமைச்சர் அல்லது அயலுறவு அமைச்சர் நாங்கள் பொதுநலவாய மாநாட்டுக்குச் செல்வது இலங்கைக்கு நெருக்கடி கொடுத்து ஈழத் தமிழர்களின் நலனை பாதுகாப்பதற்காகத்தான் என்று வெளிப்படையாக அறிவிக்கட்டும். பிறகு பார்க்கலாம்.

**உங்கள் கோரிக்கைகளை ஒட்டி தமிழக அரசும் இந்திய அரசும் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?**

இலங்கையில் நடைபெற இருக்கும் பொது நலவாய மாநாட்டில் இந்திய அரசு கலந்து கொள்ளக்கூடாது என்பதை வலியுறுத்தி தமிழக முதல்வர் விரிவான மடல் ஒன்றை எழுதியுள்ளார். அதோடு நில்லாமல் தமிழக அரசு சட்டப்பேரவைத் தீர்மானம் போன்ற பிறவழிகளில் இந்த கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தவேண்டும். தமிழக அரசு இதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி இந்தக் கோரிக்கையை வலியுறுத்த வேண்டும். இவை எதுவும் பயனளிக்காதபோது ஆளும் கட்சி பிற அரசியல் கட்சிகளுடன் இணைந்து இதற்காகப் போராட வேண்டும். அவர்களாகப் போராடாவிட்டாலும் இதற்காகப் போராடும் எம்மைப் போன்றோருக்கு ஆதரவு தரலாம்.

இந்திய அரசைப் பொறுத்தவரை பொது நலவாய மாநாட்டில் கலந்துகொள்வது குறித்து இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை என்று சொல்வது உண்மையன்று. அது ஏற்கனவே இலங்கை அரசுக்கு ஆதரவாக எடுத்துள்ள முடிவை மாற்றிக்கொண்டால் வரவேற்போம்.

**உங்கள் உண்ணாநிலைப் போராட்டத்தை தமிழக அரசு கையாண்ட விதம் குறித்து?**

உண்ணாநிலைப் போராட்டம் சனநாயக முறையிலான போராட்டம். இதையே தமிழகக் காவல்துறையினர் எதிர்த்து உண்ணாநிலை ஒரு குற்றச் செயல் என்று கூறி என்.போராட்டத்துக்கு அனுமதி மறுத்தார்கள். உயர்நீதிமன்றத்தில் வழக்காடித்தான் அனுமதி பெற்றேன். என் போராட்டத்தைத் தமிழக அரசு கையாண்ட முறையில் ஒலிபெருக்கிக்கு அனுமதி மறுப்பு போன்ற சில தடைகள் இருந்திருப்பினும் நான் பெரிதாகக் குறை சொல்ல ஒன்றுமில்லை. என் கவனம் முழுவதும் கோரிக்கைகளில்தானே தவிர எனக்கு ஏற்படும் சிறு தொல்லைகளில் அல்ல.

**ஒன்பது நாட்களாக உண்ணாநிலைப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தீர்கள். உங்கள் கோரிக்கையை நோக்கிய நகர்வு ஏதேனும் ஏற்பட்டுள்ளதா?**

உண்ணாநிலை என்பது தன்னளவிலேயே ஒரு போராட்டம் அல்ல. மக்கள் போராட்டம் அல்லாமல் ஒருவரின் உண்ணாநிலையால் எந்தக் கோரிக்கையையும் சாதிக்க முடியாது. ஆனால் இது மக்கள் போராட்டத்துக்கான குவிமையமாக அமையும். என் உண்ணாநிலை அப்படிப்பட்டதுதான். என் போராட்டம் தமிழக மக்களையும் மாணவர்களையும் போராட்டக் களத்துக்குக் கொண்டுவருவதில் எந்த அளவுக்கு வெற்றிபெறுகிறதோ அந்த அளவுக்குத்தான் வெற்றிபெற இயலும்.

**மாணவர்கள் பற்றி நீங்களே சொன்னதால் கேட்கிறேன். மார்ச்சு மாதம் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகமெங்குமுள்ள கல்லூரி மாணவர்கள் போராட்டக் களத்தில் குதித்தார்கள். ஆனால் இப்போது அவர்களைக் காணோம் என்று சொல்லும் அளவுக்கு ஒடுங்கிவிட்டதாகத் தோன்றுகிறதே?**

ஒவ்வொரு போராட்டத்தின் வெற்றிக்கும் ஒரு அளவு உண்டு. மார்ச்சில் நடந்த மாணவர் போராட்டம் தமிழக மக்களிடையே ஈழப் போராட்டம் குறித்து ஒரு புதிய விழிப்பைத் தோற்றுவித்தது. அதனால்தான் பெரிய அரசியல் கட்சிகள் தமது நிலைப்பாட்டை மாற்றி உலகத் தமிழர்களின் கோரிக்கைகளான இனக்கொலை. போர்க்குற்றங்கள் குறித்து ஒரு தர்ச்சார்புள்ள பன்னாட்டு புலனாய்வு. ஈழத்தமிழ் மக்களை பாதுகாப்பதற்கான பன்னாட்டு பொறியம் (International Mechanism), பொதுவாக்கெடுப்பு ஆகியவற்றை மக்கள் கோரிக்கையாக மாற்ற மாணவர் போராட்டம் துணை செய்தது. தமிழக சட்டப்பேரவையில் இந்தக் கோரிக்கைகளை ஆதரித்து தீர்மானம் இயற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

**தங்கள் போராட்டத்துக்கு தமிழகத்தின் முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி ஆதரவு தெரிவித்துள்ளார். உண்ணாநிலையைக் கைவிடக் கோரியுள்ளார். அதற்குத் தங்களது பதில் என்ன?**

முன்னாள் முதல்வர் கலைஞர் என் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்திருப்பது நற்செய்தி. ஆனால் ஒரு கட்சித் தலைவரின் ஆதரவு என்பது வடிவம்தான். அவர்களுக்குப் பின் நிற்கிற மக்களின் ஆதரவு என்பதுதான் உள்ளடக்கம்.

உண்ணாநிலையைக் கைவிடக் கோரி என் உயிரின் மீது அக்கறை கொண்டு அவர் விடுத்துள்ள வேண்டுகோளுக்கு நன்றி. அதேபோது இப்போராட்டத்தின் கோரிக்கைகள் தான் என் உயிர். என் கோரிக்கைகளை வெற்றிபெறச் செய்வதன் மூலம் என் உயிரைக் காக்க முற்படட்டும் என்பது அவருக்கும் மற்றவர்களுக்கும் நான் முன்வைக்கும் வேண்டுகோள்.

**அண்மையில் இலங்கையில் நடைபெற்று முடிந்துள்ள வடக்கு மாகாணத் தேர்தல்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வெற்றி ஈழத் தமிழர்களுக்கு ஏதேனும் நலன் பயக்குமா?**

எவ்வித நன்மையும் விளையாது. மாகாண சபைக்கு சட்டமியற்றும் அதிகாரம் இல்லை. மாகாண அரசுக்கு அடிப்படையில் எவ்வித அதிகாரமும் இல்லை. இதை அந்நாட்டின் உச்சநீதிமன்றமும் ராஜபக்சேவும் வெளிப்படையாக அறிவித்துவிட்டார்கள். ஒரு விரிவடைந்த பஞ்சாயத்து தோற்று விக்கப்பட்டுள்ளது. அதற்கு மேல் ஒன்றுமில்லை.

**அப்போது ஈழத் தமிழர் பிரச்சினைக்கு தாங்கள் முன்வைக்கும் மாற்று அல்லது தீர்வுதான் என்ன?**

ஒன்றுபட்ட இலங்கையில் ஒன்றும் நடக்காது. ராஜபக்சே முன்னிலையில் முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கும் சி.வி. விக்னேஸ்வரன் முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி. அவர் இலங்கையின் அரசமைப்புச் சட்டத்தை மதிக்காதவராக இருக்க முடியாது. அச்சட்டங்களின் இரண்டாவது விதி (Article 2) இலங்கை ஒற்றையாட்சி அரசு என்பதைத் திட்டவட்டமாகச் சொல்கிறது.

ஒற்றையாட்சி அமைப்புக்குள் தன்னாட்சியோ வேறு அதிகாரமோ எப்படிக் கிடைக்கும்? ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு என்று பேசுபவர்கள் ஏமாற்றுப் பேர்வழிகள் அல்லது ஏமாளிகள்.

# சிறிலங்கா அரசு நல்லிணக்கச் செயற்பாட்டை முன்னெடுக்கப்போவதில்லை

## அரசியல் ஆய்வாளர் சி.அ.யோதிலிங்கத்துடன் ஒரு நேர்காணல்



நேர்கண்டவர் :- நந்தன்

***பொதுநலவாய அமைப்பின் மாநாடு தொடர்பான அமர்க்களம் பற்றி ?***

பொதுநலவாய அமைப்பின் மாநாடு இலங்கையில் நடாத்தப்படும் என தீர்மானம் எடுத்த காலம் தொடக்கமே ஒரே அமர்க்களமாக இருந்தது. மாநாட்டு தினம் கிட்டக்கிட்ட இது அதிகரித்துக் கொண்டே வந்தது. இந்த அளவிற்கு இவ் அமைப்பின் மாநாடு வரலாற்றில் ஒரு போதும் அமர்களப்படவில்லை. இவ்வாறு இடம் பெறுவதற்கு சர்வதேச அளவில் இவ் அமைப்பு முக்கியமான ஒன்றுமல்ல. பிரித்தானியா தனது காலனித்துவ நாடுகளுக்கு சுதந்திரம் கொடுத்தபின்னரும் அந் நாடுகள் மீது தனது செல்வாக்கின் தொடர்ச்சியை பேணவேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பே இதுவாகும்.

காலப்போக்கில் மனிதஉரிமை விழுமியங்களை கொள்கையாக ஏற்றுக்கொண்டதினால் தான் இன்று நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. மேற்குலக நாடுகள் ஏதோ மனித உரிமைகளில் அக்கறைப் பட்டு அதனை வரித்துக்கொண்டதாகவும் கூறமுடியாது. முதலாளித்துவ பொருளாதரத்துடன் தனிநபர் உரிமைகள் பின்னிப்பிணைந்தமையாக இருந்தமையினாலேயே இதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டி ஏற்பட்டது. சமூக உரிமைகள் அல்லது குழு உரிமைகள் குறித்து இன்று அவை மௌனம் சாதித்துவருகின்றன என்பது வேறுகதை.

மனித உரிமை விழுமியங்களை கொள்கைகளாக சேர்த்தமையினால் பல்வேறு காலங்களில் பல்வேறு நாடுகள் அமைப்பிலிருந்து நீக்கப்படும் நிலையும் தோன்றி இருந்தது. தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், பிஜித் தீவுகள் போன்றன நீக்கப்பட்டவையில் சிலவாகும்.

ஆனால் மேற்குலக நாடுகள் இலங்கை விடயத்தில் மட்டும் வேறு நலன்கள் இருந்ததினால் சற்று அடக்கி வாசிக்க முற்படுகின்றன. அந்தவேறு நலன் என்பது இலங்கை மீதான சீனாவின் செல்வாக்கினை அகற்றுவது தான். இந்த அகற்றலுக்கு எதிர் மறையான அணுகுமுறையை விடுத்து நேர்மறையான அணுகு முறையினையே பின்பற்ற முயற்சிக் கின்றன. இது ஒருவகையில் அடித்து திருத்துவதை விடுத்து சலுகை கொடுத்து திருத்துவது போன்றது.அடித்து திருத்த முற்பட்டால் முழுமையாக சீனா பக்கம் இலங்கை சாய்ந்து விடும் என்ற அச்சமே இதற்கு காரணமாகும். இலங்கையும் சில நெகிழ்ச்சிகளை காட்டி வருவதால் இந்த நேர்மறை அணு குமுறையினையே தொடர்ச்சியாக பின்பற்றமுயல்கின்றன.

உண்மையில் தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், பிஜித் தீவுகள் மேற்கொண்ட குற்றங்களோடு ஒப்பிடும் போது இலங்கையின் குற்றங்கள் எந்த வகையிலும் குறைவானது அல்ல. எனினும் மேற்குலக நாடுகளினது சொந்த நலன்கள் இவற்றின் செயற்பாடுகளை கட்டிப்போட்டுள்ளன.

தற்போது நடைபெறுவதெல்லாம் சர்வதேச மனித உரிமை விழுமியங்களுக்கும் மேற்குலக நாடுகளின் சொந்த நலன்களுக்கும் இடையேயான ஓர் போர் தான். இந்தப்போரில் சர்வதேச மனித உரிமை விழுமியங்கள் தோற்றுப்போய்விட்டது என்றே கூறவேண்டும்.

***மேற்குலகம், இந்தியா தொடர்பாக இலங்கை அரசு சில நெகிழ்ச்சிகளை காட்டியதும் நேர்மறையான அணுகுமுறைக்கு காரணம் என கூறியிருக்கிறீர்கள் இதனை சற்று விரிவாக கூற முடியுமா?***

இலங்கை தொடர்பான புவி அரசியல் காரணமாக இலங்கை மீது அக்கறை உள்ள தரப்புக்கள் மூன்று தான். இந்தியா, அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம், சீனா என்பனவே அவ் மூன்றுமாகும். இலங்கை மீதான செல்வாக்கு தொடர்பாக இம் மூன்று தரப்புக்கும் இடையே பலத்த போட்டி இடம்பெறுகின்றது. இவற்றில் மேற்குலகத்திற்கும் இந்தியாவிற்கும் இடையில் போட்டி காணப்பட்டாலும் அது பெரிய போட்டியாக இருக்கவில்லை. இந்தியா இப் பிராந்தியத்தில் தன்னை தவிர வேறு எவரும் செல்வாக்கு செலுத்துவதை விரும்புவதில்லை. அதுவும் இலங்கை அதன் வாசல் படியில் இருப்பதனால் இலங்கை மீது ஏனைய சக்திகள் செல்வாக்கு செலுத்துவதை அறவே விரும்புவதில்லை. இலங்கை இந்திய ஒப்பந்தம் கூட அதற்காகத்தான் கொண்டு வரப்பட்டது.

ஆனாலும் அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் பொது எதிரியாக சீனா இருப்பதினால் இரண்டும் பொது எதிரிக்கு எதிராக ஐக்கியப்பட்டுள்ளன. இந்தியா பெரிய நாடாக இருப்பதினாலும், அதிக சனத் தொகையை கொண்டதாக இருப்பதினாலும், பிராந்திய விடயத் தில் இந்தியாவுடன் சற்று அனுசரித்துப் போகவே அமெரிக்கா விரும்புகின்றது. அதனால் இலங்கை தொடர்பான பனிப்போர். இந்திய - அமெரிக்க கூட்டிற்கும் சீனாவிற்கும் இடையே தான் இடம் பெறுகின்றது.

இலங்கை சீனாபக்கம் அதிகம் சரிந்திருந்தாலும் இந்திய - அமெரிக்க கூட்டினை முழுமையாக புறக்கணிக்கவில்லை. இது தான் மென்மைத் தன்மை வாய்ந்த நேர்மறை அணுகு முறைக்கு காரணம். இலங்கை சீனாவிற்கு அனைத்து விடயங்களிலும் நாட்டை திறந்து விட்டாலும் இந்திய - அமெரிக்க கூட்டிற்கும் குறிப்பாக இந்தியாவிற்கும் சில சலுகைகளை வழங்கி வருகின்றது. வடமாகாணசபை தேர்தலை நடாத்தியமை, சம்பூர் அனல் நிலையத்தை வழங்கியமை, வட பகுதி புகையிரதப்பாதையை அமைக்க அனுமதி வழங்கியமை,எரிபொருள் நிலையங்களை அமைக்க அனுமதி வழங்கியமை போன்றன இவற்றுள் சிலவாகும். தற்போது இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தக உறவுகளும் மேம்பாடு அடைந்துள்ளன.

> **உண்மையில் பந்து இப்போது இலங்கை வசம் இல்லை. அது இந்தியாவிடமே உள்ளது. பந்தினை மிக இலாவகமாக இந்தியா பக்கம் இலங்கை எறிந்து விட்டது.**

இவற்றில் மிக முக்கிய சலுகை வடமாகாணசபை தேர்தலை நடாத்தியமை தான். இந்தியாவின் முக்கிய இலக்கு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை பாதுகாப்பதே. இலங்கை மீது தொடர்ச்சியாக நீண்ட காலத்திற்கு செல்வாக்கு செலுத்த இது மிக மிக அவசியம். இவ் ஒப்பந்தத்தினை பாதுகாக்கவேண்டுமாயின் 13 ஆவது திருத்தத்தினை பாதுகாக்கவேண்டும். இதற்கு வடமாகாணசபை தேர்தல் நடைபெறவேண்டும்.

இலங்கை வடமாகாணசபை தேர்தலை நடாத்திவிட்டது. இனி இந்தியாதான் அதற்கு நன்றிக் கடன் செலுத்தவேண்டும். உண்மையில் பந்து இப்போது இலங்கை வசம் இல்லை. அது இந்தியாவிடமே உள்ளது. பந்தினை மிக இலாவகமாக இந்தியா பக்கம் இலங்கை எறிந்துவிட்டது.

அமெரிக்காவை திருப்திப்படுத்துவதை விட இந்தியாவை திருப்திப்படுத்துவதில் தான் இலங்கை கவனமாக இருக்கின்றது. இந்தியா, அமெரிக்காவை சமாளிக்கும் என்பது இலங்கைக்கு நன்றாகவே தெரியும்.

***இந்தியாவின் வெளிநாட்டு விவகாரங்களுக்கு பொறுப்பாகவுள்ள" சவுத் புளொக்" தீவிரமாக வற்புறுத்திய போதும் பிரதமர் மன்மோகன்சிங் பொது நலவாய மாநாட்டில் கலந்து கொள்வதை தவிர்த்திருக்கின்றார். இதற்கு என்ன காரணம் என நீங்கள் நினைக்கின்றீர்கள்.***

தமிழ்நாடா? கொழும்பா? என்ற போரில் தமிழ்நாடு வென்று விட்டமை தான் இதற்கு காரணம். வெளிநாட்டுக் கொள்கைக்கா? கட்சி நலனுக்கா? முக்கியத்துவம் கொடுப்பது என்ற விடயத்தில் கட்சி நலனுக்கு முக்கியத்துவம் கொடுப்பது என்று மன்மோகன்சிங் தீர்மானித்துவிட்டார். அடுத்த வருடம் தேர்தல் இடம்பெற இருப்பதால் மன்மோகன்சிங்கினால் இந்த முடிவைத் தவிர வேறு முடிவை எடுத்திருக்க முடியாது. மன்மோகன்சிங் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தால் கட்சிக்குள் உடைவு ஏற்படுவதோடு காங்கிரஸ் கட்சி தலைமையிலான கூட்டணிக்குள்ளும் உடைவு ஏற்பட்டிருக்கும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் தேர்தலில் வெல்லக் கூடியவர்கள் எனக் கருதப்படுபவர்கள் வாசன், சிதம்பரம், ஜெயந்தி நடராஜன் என்போர். தான். இம் மூவரும் மாநாட்டில் பிரதமர் கலந்து கொள்வதற்கு கடும் எதிர்ப்பினை தெரிவித்திருந் தனர். இவ் எதிர்ப்பையும் மீறிச் சென்றிருந்தால் வாசன் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறி மீளவும் தமிழ் மாநிலகாங்கிரசை அமைப்பதற்கு வாய்ப்புக்கள் இருந்தன. இவர் வெளியேறினால் சிதம்பரம்,ஜெயந்தி நடாராஜன் ஆகியோர் கூட அவருடன் வெளியேறுவதற்கு முயலலாம். தமிழ்நாட்டில் மூப்பனாரின் செல்வாக்கே

(12ஆம் பக்கம் பார்க்க)

# என் தமிழ்தேசத்தில் அழுகுரல் ஓயாதோ?

கரிகாலன்

மனித உரிமைகள் மண்ணுக்குள் புதைக்கப்பட்டு நீதித்துறையின் சுயாதீனம் கேள்விக் குறியாக் கப்பட்டுள்ள ஸ்ரீலங்காவில் சர்வ தேசநாடுகளின் தலையீடுகள் தேவை என்பதையும், அப்பாவித்தனமாக கொன்று குவிக்கப்பட்ட தமிழ்மக்களின் உயிரிழப்புகளுக்கு மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான இந்த அரசு பதில் கூறியாக வேண்டும் என்றகோரிக்கை வலுப் பெற்றுவரும் நிலையில் சர்வதேசத்தின் முன் மீண்டும் ஒருமுறை உறவுகளை மீட்கும் போராட்டத்தை காணாமல் போனவர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் நடத்தியிருந்தமையும், அதை சர்வதேசத்தின் கண்ணில் படவிடாது இராஜபக்ஷ அரசினை பாதுகாக்க முற்பட்ட சம்ந்தன் தலைமை மக்களை எதிர்கொள்ளப் பயந்து தப்பித்து ஓடியமையும் நடந்துமுடிந்த சம்பவமாக பதியப்பட்டுவிட்டது.

ஆயுதப்போராட்டம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டுவிட்டதாக அரசு 2009 ஆம் ஆண்டு மே மாதம் அறிவித்திருந்தது. இருப்பினும் இன்னும் வடக்கில் ஆயுதம் ஏந்தாத போராட்டம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. வறுமையும், உறவுகளை இழந்து தவிக்கும் உறவினர்களின் துன்பமும் தீராத் துன்பமாக மாறிவருகின்றது. இறுதியுத்தத்தின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் போனவர்களின் எண்ணிக்கை இன்றுவரை உறுதிப்படுத்தப்பட முடியாதநிலையில் உள்ளது. அச்சுறுத்தல்கள் காரணமாகவும், ஆதரவற்றநிலைகாரணமாகவும் பலநூற்றுக்கணக்கான காணாமல் போனவர்களின் உறவினர்கள் தமது உறவினர்களைத் வெளிப்படையாகத்தேடும் பணியைதொடர அஞ்சுகின்றனர்.

இந்தியா இலங்கை உட்பட இந்த உலகத்தின் அரைவாசிக்கும் சற்றுக் குறைவானளவு நாடுகளைகைப்பற்றி நூற்றாண்டிற்கு மேலாக தன்வசம் வைத்திருந்த இங்கிலாந்து நாட்டின் பிரதமர் டேவிட் கமரூன் இலங்கைவரலாற்றில் சுமார் 40 வருடங்களுக்குபின்பு மிகவும் முக்கியமான காலகட்டத்தில் இலங்கையின் வடபகுதிக்குகடந்த 15 ஆம் திகதி வருகைதந்திருந்தார். அவரது கவனத்தை ஈர்த்து தமது உறவினர்களை மீட்டெடுக்க வேண்டும் என்ற நோக்கிலேயே மேற்படி போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். கொழும்பில் நடைபெற்ற காமன் வெல்த் மாநாடிற்கு வருகை தந்த இங்கிலாந்துப் பிரதமர் ஸ்ரீலங்கா அரசிற்கு சிம்மசொப்பன மாக விளங்கியதோடு சனல் - 4 தொலைக் காட்சி உள்ளிட்ட முக்கிய சர்வதேச ஊடகங்களையும் தன்னுடன் அழைத்துவந்து சிங்களத் தலைவர்களை கதிகலங்க வைத்துவிட்டார்.



போரில் வெற்றிபெற்ற மமதையில் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் தமிழர்களை ஒருபொருட்டாக கருதவில்லை என்பதை நேரில் அறிந்திருப்பார் பிரதமர் டேவிட் கமரூன். அவர் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்ககாலம் எடுத்தாலும் சனல்-4 தொலைக்காட்சி நிருபர்களின் மூலம் ஸ்ரீலங்காஅரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க எப்பொழுதோஆரம்பித்துவிட்டது மேற்குலகு. பிரதமர் டேவிட் கமரூனின் வருகையை முன்னிட்டு நூலகத்திற்குஅருகில் நடைபெற்றகாணாமல் போனவர்களின் உறவினர்களின் கவனயீர்ப்புபோராட்டம் சனல்-4 தொலைக்காட்சி உட்பட வந்திருந்த அனைத்து சர்வதேச ஊகங்களினதும் கவனத்தை ஈர்த்திருந்ததுமட்டுமன்றி அந்த ஊடகவியலாளர்கள் அந்தநிகழ்வை உலகிற்குவெளிப்படுத்தியவிதம் சர்வதேசத்தையும் கண்கலங்கவைத் திருந்தது.

ஆனாலும் ஐயோ எங்களுடைய பிள்ளைகளை மீட்டுத்தாருங்கள் என்று கதறும் உறவுகளின் கண்ணீர்க்கதைகளை அவர்களுடன் கூட நின்று டேவிட்கமரனுக்கு தெரியப்படுத்தியிருக்கவேண்டிய மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் மா்விட்டபுரத்தில் சர்வதேச ஊடகங்களின் கண்களிலோஅன்றி பிரதமரின் கண்களிலோபடாதவகையில் ஒழிந்து கொண்டனர்.

அதன் மூலம் ராஜபக்சே அரசை சர்வதேச நெருக்கடி ஒன்றிலிருந்துகாப்பாற்ற அவர்கள் முயன்றிருந்தாலும் அவர்களையும் மீறி காணாமல் போனஉறவுகள் நடாத்திய போராட்டம் ராஜபக்சேஅரசின் கொடூரமுகத்தை சர்வதேசஅரங்கில் அம்பலப்படுத்தியுள்ளது. கூட்டமைப்பினரூடாக ராஜபக்சே சாதிக்கநினைத்ததை தவிடு பொடியாக்கியுள்ளது.

தாயகத்தில் எமது உறவுகள் சிறீலங்காஅரசினால் கொடுமைப் படுத்தப்படுகின்றார்கள் என்றுபுலம்பெயர் தமிழர்கள் வெளிநாடுகளில் இருந்து கூறுவதும் யாழ்ப்பாணம் உள்ளிட்டதமிழர் தாயகத்தில் நடப்பதும் ஒன்றுதான் என்பதனை வெறும் 400 பேர் நடாத்திய போராட்டம் உலகுக்கு வெளிப் படுத்தியுள்ளது.

இந்தப் போராட்டமும் அதற்கு சர்வதேச ஊடகங்கள் கொடுத்த முக்கியத்துவமும் காணாமல் போயுள்ளவர்கள் தொடர்பில் இலங்கைஅரசு பதில் சொல்லவேண்டியநிலையை உருவாக்கும் என்றநம்பிக்கையை ஓரளவுக்கேனும் ஏற்படுத்தியுள்ளது.

---

## சிறிலங்கா...

(11ஆம் பக்கம் தொடர்ச்சி)

காங்கிரஸ் கட்சியினை கோமா நிலையிலாவது வைத்திருக் கின்றது. வாசன் வெளியேறினால் கோமா நிலையும் இல்லாமல் போகும். இதன் பின்னர் தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சியினை அடக்கம் செய்வதே எஞ்சியிருக்கும்.

இலங்கையின் இனப்படுகொலைக்கு காங்கிரசுடன் தி.மு.கவிற்கும் பங்கிருக்கின்றது என தமிழகமக்கள் கருதுவதனால் மன்மோகன்சிங் மாநாட்டில் கலந்து கொள்வது தி.மு.கவையும் வெகுவாக பாதிக்கும். இது காங்கிரஸ் கூட்டணியிலிருந்து தி.மு.காவை வெளியேறச் செய்யும். இக் கூட்டணிக்கு பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே அந்தோணி பொறுப்பாக இருப்பதனால் அவரும் மன்மோகன்சிங் மாநாட்டில் கலந்து கொள்வதை கடுமையாக எதிர்த்து நிற்கின்றார்.

வாசன் காங்கிரஸ் கட்சியிலிருந்தும், தி.மு.க காங்கிரஸ் கூட்டணியிலிருந்தும், வெளியேறினால் எதிர் காலத்தில் தி.மு.கவும், தமிழ்மாநிலகாங்கிரசும் கூட்டணி அமைப்பதற்கு வாய்ப்புக்கள் இருக்கும் .வாசன் எப்போதும் முதல் சந்தர்ப்பத்தை ஜெயலலிதாவிற்கே கொடுக்கப்பாப்பார். ஜெயலலிதா "நாற்பதும் நமதே" என்ற கனவில் இருப்பதனால் வாசனுடன் கூட்டுச் சேர்வதற்கு வாய்ப்புக்கள் குறைவு.இதனால் கருணாநிதி - வாசன் கூட்டிற்கே அதிக சந்தர்ப்பம் இருக்கின்றது. இவ்வாறு நிகழ்வுகள் மாற்றம் காண்பதை மன்மோகன்சிங் ஒரு போதும் விரும்பப்போவதில்லை .

இது விடயத்தில் ஜெயலலிதாவையும், சனல் 4யும் தான் அதிகம் பாராட்டவேண்டும். ஜெயலலிதா மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என சட்ட சபையில் ஏக மனதாக தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றார். இந்த ஏகமன தீர்மானத்தினால் மத்தியஅரசாங்கம் ஒரு கணம் ஆடியே போய்விட்டது. இத் தீர்மானம் தமிழகத்தின் பொதுக் கருத்தாக இருந்தமையே இதற்கு காரணமாகும். இதுதான் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் குத்துக்கரணத்தையும் தடுத்து நிறுத்தியது. விக்னேஸ்வரன் கடிதம் தோல்வியில் முடிவடைந்ததற்கும் இதுவே காரணமாகும்.

மற்றையது பொருத்தமான நேரத்தில் சனல்4 இசைப்பிரியா கொலை செய்யப்பட்ட காணொளியை வெளியிட்டமையாகும். இந்தக் காணொளி என்றுமில்லாதவாறு தமிழக மக்களின் கோபத்தை கிளறிவிட்டது . தமிழ் நாட்டில் தமிழ் உணர்வாளர்கள் நடாத்திய தொடர்ச்சியான போராட்டமும் இதனை ஊக்கப்படுத்தியிருந்தது. இவ் இரண்டும் சேர்ந்து மன்மோகன்சிங்கின் நிகழ்ச்சி நிரலையே குழப்பிவிட்டது.

**இனி என்ன நடக்கப் போகின்றது.**

இலங்கையில் பொதுநலவாயமாநாடு நடாத்தப்படுவது தொடர்பாக பெரிதும் நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டவை பிரிட்டனும் இந்தியாவும் தான்.பல்வேறு தரப்புக்களின் எதிர்ப்பையும் மீறி பிரிட்டன் மாநாட்டில் கலந்து கொண்டது. அது தொடக்கிய அமைப்பு என்பதால் அதனால் கலந்து கொள்ளாமல் இருக்கமுடியாது.

இந்தியாவின் நிலை இவ்வாறானது அல்ல. மத்திய அரசு மட்டத்தில் தமிழ் நாட்டின் முக்கியத்துவம் காரணமாக தமிழ்நாட்டினை இலகுவாக புறக்கணித்துவிடமுடியாது.

பிரிட்டன் வாக்குறுதி அளித்ததை போலவே மாநாட்டில் மனித உரிமை விவகாரத்தினை கிளப்பப்பார்க்கும். யாழ்ப்பாணத்திற்கும் பிரித்தானிய பிரதமர் பயணம் செய்வார். விக்னேஸ்வரனையும் சந்திப்பார். வடமாகாண சபைக்கும் முக்கியத்துவம் கொடுக்கப் பார்ப்பார். வடமாகாணசபைக்கு அதிகாரங்கள் இல்லாவிட்டாலும் அதிகாரம் உள்ளது போன்ற போலித் தோற்றத்தை கொடுக்கவே இந்தியாவும் மேற்குலகும் விரும்புகின்றன. இன்னோர் அதிகாரமையம் என்ற தோற்றம் அதற்கு வலிந்து கொடுக்கப்படுகின்றது. விக்னேஸ்வரனும் கொழும்பில் அவரை சந்திப்பதைவிட யாழ்ப்பாணத்தில் சந்திப்பதிலேயே அதிக அக்கறை காட்டுவார். எனினும் மன்மோகன்சிங் கலந்து கொள்ளாமை மாநாட்டின் கனதியை நிச்சயம் குறைக்கவே பார்க்கும்.

ஒரு விடயத்தில் மட்டும் தமிழ் அரசியலுக்கு இம் மாநாடு சாதகமான நிலையினை ஏற்படுத்தியிருக்கின்றது. மீண்டும் ஒரு தடவை சர்வதேச மட்டத்தில் தமிழர் விவகாரம் பேசுபொருளாக்கப்பட்டமையே அதுவாகும்.

இலங்கைஅரசாங்கத்தை பொறுத்தவரை நல்லிணக்கச் செயற்பாட்டை ஒருபோதும் முன்னெடுக்கப்போவதில்லை. அதே போல சீனாவின் செல்வாக்கினை இலங்கையில் இருந்து அகற்றவும் போவதில்லை. இந்த இரண்டும் அதன் இருப்பிற்கு அவசியம். வேண்டுமானால் இந்தியாவிற்கும் மேற்குலகத்திற்கும் மேலும் சில சலுகைகளை வழங்கி எதிர்ப்பை குறைக்கப்பார்க்கலாம். எனினும் தமிழர் விவகாரமும் புவிசார் அரசியல் போட்டியும் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.இந்திய மேற்குலக கூட்டிற்கு சலுகைகள் வழங்குதை இலங்கை நிறுத்தினால் தான் தமிழர் பக்கம் இச் சக்திகள் சாய முற்படும். தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்கின்ற தமிழ் மக்களின் அடிப்படைகோரிக்கைகளையும் அங்கீகரிக்க முயற்சிக்கும்.

அந்த நாள் எப்போது வரும் என துல்லியமாக கூற முடியாது.ஆனால் நிலமைகள் அதை நோக்கி நகர்கின்றது என்பது மட்டும் உண்மை.

# அதிகாரமிக்க நீதியினுள் சிக்குண்டு அல்லலுறும் வவுனியா பிள்ளைகள்

- டிரன் குமார பங்ககங்கம ஆராச்சி
தமிழில் - நட்டாசா ராஜ்குமார்

நாம் இருப்பது வவுனியா நகர மத்தியிலாகும். மனிதர்கள் மிகவும் அவசரமாக தங்கள் வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். கடுங்காற்றினால் மேலெழுந்த தூசு படலங்கள் நம் வாயினுள் புகுந்தன. அத்துடன் மணல் துணிக்கைகளும் வாயினுள் கடிபட்டன.

"பிக்கு நேற்றுதான் கொழும்பிற்கு சென்று திரும்பினார். ஒரு பிரச்சினையும் இல்லை நன்றாக தான் இருக்கின்றார்".

இவ்வாறு குறிப்பிடுவதற்கு காரணம் கடந்த காலங்களில் வவுனியா எடஹெறாகஸ்கட விகாரையினால் நடாத்தப்படுகின்ற சிறுவர் காப்பகத்தில் நிகழ்ந்த சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பிலானதாகும். சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக குற்றஞ்சாட்டபட்டவர் வட மாகாண பிரதான உப ஒழுங்கமைப்பாளர் எடஹெறாகஸ்கட கல்யானிதிஸ்ஸ தேரரின் மீதாகும். எடஹெறாகஸ்கட விகாரை வவுனியாவில் மிகவும் பிரபல்யமான சமயஸ்தலமாகும்.

"எமக்குள் எழுந்த சந்தேகம் யாதெனில் ஏன் பிக்குவை இன்னும் கைதுசெய்யவில்லை என்பதுடன் இப்பிக்குவிற்கு எங்கிருந்து இவ்வளவு பலம் கிடைத்தது என்பது பற்றியேயாகும்" என வவுனியாவிலுள்ள வியாபாரியான கபில கமகே அவர்கள் தெரிவித்தார்.

இச்சந்தேகம் வவுனியா நகரில் வாழ்கின்ற பல மக்கள் மத்தியில் நிலவுகின்ற இச்சந்தேகத்தை ஏற்படுத்தியது யார்? போரின் பின்னர் இப்பகுதியில் பல விகாரைகள் நிர்மாணிக்கப்பட்டன. துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டது ஓர் தமிழ் சிறுவனே. இதனை மேற்கொண்டவர் ஓர் பௌத்த பிக்கு ஆகையால் இது மிகவும் சூட்சுமமான முறையில் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஓர் செயல் என எடஹெறாகஸ்கட வாழ் தமிழ் மக்கள் கருதுகின்றார்கள். போரின் பின்னர் சிங்கள மக்களினால் தமிழர்கள் ஆட்கொள்ளப்பட்டுவிட்டார்கள் என தமிழ் மக்கள் எண்ணுவது இன்று தேசிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

வவுனியாவிலிருந்து மஹாமடுவ வீதியால் 5-6 கி.மீ செல்லும் பொழுது எடஹெறாகஸ்கட விகாரையுள்ளது. அங்கே சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர். இவ்விகாரையினால் சிறுவர் பாராமரிப்பு நிலையமொன்று பிரதான விகாராதிபதியின் விருப்பிற்கமைய கொண்டு நடாத்தப்படுகின்றது. பெற்றோரால் கட்டுப்பாட்டுடன் வளர்க்க இயலாத ஆண் பிள்ளைகளே இங்கே பராமரிக்கப்படுகின்றனர். 2011 ம் ஆண்டு வைகாசி மாதம் முத்துசாமி சதானந்தா குமாரி தன்னுடைய மகனான ரோஹண குமாரவை இச்சிறுவர் பாதுகாப்பு நிலையத்தில் ஒப்படைத்தாள்.

## வீரச்செயல்

இவ் முத்துச்சாமி சதானந்தா குமாரி "எனக்கு கணவன் இல்லை. நாங்கள் தல்சுமடு கிராமத்தில் மிகவும் கஷ்டமான சீவியத்தையே நடாத்திவருகின்றோம். எனக்கு வருமானம் இல்லை. மகனை பெரியவனாக்குவது மிகவும் கடினம். பிக்குவின் சிறுவர் நிலையம் பற்றி ஒருவர் கூறினார். 2011 வைகாசி மாதம் மகனை சிறுவர் நிலையத்தில் ஒப்படைத்தேன். ஆரம்பத்தில் மாதம் ஒரு முறை மகனை பார்க்க நான் செல்வேன். பின்னர் அது நின்றுவிட்டது. நான் செல்லும் ஒவ்வொரு முறையும் ஏதேனுமொரு காரணங்களைக் கூறி மகனை காண்பிக்க மறுத்துவிடுவார்கள். நான் சந்தேகம் கொண்டேன். மகன் தொடர்பில் அச்சமடைந்தேன். நான் மகனை திரும்பக்கேட்டேன் பிக்கு தரமறுத்துவிட்டார். ஆகையால் நான் சிறுவர் பாதுகாப்பு நிலையம். பொலிஸ் மற்றும் பிரதேச செயலகத்திடம் முறைப்பாடு செய்தேன். ஆனாலும் பயன் ஏதும் கிட்டவில்லை. நான் தினமும் விகாரைக்கு சென்றேன் அங்கே பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் என்னை விரட்டிவிட்டார்கள். பின்னர் நான் மகன் படிக்கின்ற விகாரையின் அருகிலுள்ள பாடசாலைக்கு சென்றேன். ஒருவாறு மகனையும் சந்தித்தேன். அப்போது மகன் என்னிடம் " அம்மா என்னால் இங்கிருக்க முடியாது என்னை வீட்டிற்கு அழைத்துச் செல்லுங்கள்" என்றான்.

நான் மடுகந்த பெரிய பிக்குவை சந்தித்து என் பிரச்சினையை விவரித்தேன். பிக்கு என்னிடம் மாவட்ட ஆட்சியாளரிடம் சென்று முறையிடுமாறு கூறினார். நானும் அவ்வாறே செய்தேன். நான் பொலிஸ் உயர் அதிகாரிக்கும் ஜனாதிபதிக்கும் கடிதம் எழுதினேன். 2012.12.03ம் நாள் மகனை என்னிடம் ஒப்படைத்தார்கள். அன்று பிக்கு என்மீது கடுமையான வார்த்தைகளை உமிழ்ந்தார். நாம் வீடு திரும்பினோம்.

இரு நாட்களின் பின்னர் என் மகன் செயற்பாடுகளில் மாறுதல்களை அவதானித்தேன். மகன் சிறுநீர் கழிக்கும் பொழுது பயப்படுகின்றான். கைகளால் மூடியவாறு விசித்திரமான முறையில் செயற்பட்டான். நான் கேட்டவுடன் பயந்தான். நான் அவனை அடித்தே உண்மையினை வரவழைத்தேன். தாய் என்ற முறையில் மகனிற்கு நேர்ந்தவற்றை என்னால் விபரிக்க இயலவில்லை. என் மகன் இரவில் படுக்கையில் சிறுநீர் கழித்தமையினால் அவனுடைய பால் உறுப்பை பிளேட்டினால் வெட்டியுள்ளார்கள். இதன் காரணமாக இன்றும் சிறுநீர் கழிக்கும் பொழுது அச்சமடைகின்றான். நாங்கள் ஏழைகள். என் மகனிற்கு நேர்ந்த கொடுமையினை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. நான் எல்லோரிடமும் முறையிட்டேன். பிக்குவிற்கு எதிராக நடவடிக்கையெடுக்க ஒருவரேனும் முன்வரவில்லை. இறுதியாக நான் வவுனியா அகதிகள் தொடர்பிலான ஐ.நா சபை அதிகாரிகளிடம் பண உதவி கேட்டேன். அங்கிருந்த அதிகாரிகள் மகனை வைத்தியச்சாலையில் அனுமதிக்குமாறு என்னிடம் கூறினார்கள். என் மகன் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளான் என வைத்தியர்கள் கூறினார்கள்.

எடஹெறாகஸ்கட விகாரையினால் கொண்டு நடாத்தப்படுகின்ற சிறுவர் நிலையம் தொடர்பாக வெளி உலகம் அறிந்ததன் பின்னர் பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு பிரிவு தலையிட்டு இன்னல்களிற்கு முகம் கொடுத்த பிள்ளைகள் மற்றும் சிறுவர் நிலையத்தை நடாத்துகின்ற பிக்குவிடமிருந்து வாக்கு மூலங்களை பெற்றுக்கொண்டது. பிக்குவை கைதுசெய்யவில்லை.

அதன் பின்னர் மகனை கொழும்பிலுள்ள சட்டவைத்திய அதிகாரியிடம் காட்டினர். அவரது அறிக்கையின் படி மகன் பாலியல் ரீதியிலான துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளான் என குறிப்பிடப்பட்டிருந்தது.

அதிகளவு சாட்சிகள் பிக்குவிற்கெதிராக காணப்பட்ட போதும் பிக்கு இன்றும் சுதந்திரமான முறையில் வாழ்க்கை நடாத்துகின்றார். இச்சம்பவத்தின் முக்கியத்துவத்தினை அறிந்த சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரி கள் கடந்த 15ம் திகதி வவுனியா நீதிமன்றத்தின் கட்டளைக்கிணங்க சிறுவர் நிலையத்திலிருந்த 21 சிறுவர்களையும் கொழும்பு தலைமையகத்திற்கு கொண்டு சென்றனர். அங்கே சிறுவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்கு மூலங்களின் அடிப்படையில் இன்னும் பல சிறுவர்கள் இப்பிக்குவின் பாலியல் துன்புறுத்தல்களிற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்பது தெரியவந்தது.



## பிக்குவின் பயணம்

வவுனியாவிலுள்ள பலர் இவ் விடயம் தொடர்பில் அரசாங்கத்திற்கெதிரான கருத்துக்களையே முன்வைக்கின்றனர். ஏனெனில் இவ்வாறான சிறுவர் துஷ்பிரயோகங்களிற்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகளை எடுக்க தவறியமையே ஆகும்.

1985ம் ஆண்டு காலப்பகுதியில் எடஹெறாகஸ்கட விகாரை ஓர் சிறிய விகாரையாகும். அங்கிருந்த பிரதான பிக்குவின் மறைவினை அடுத்து அவரின் துணையாளரான கல்யானிதிஸ்ஸ பிக்கு பிரதான பிக்குவாக பொறுப்பேற்றார். யுத்த காலப்பகுதியில் இரவினை கழிப்பது மிகவும் சிக்கலாகன காரணியாகும். இதனால் கிராமவாசிகள் அனைவரும் இரவினை விகாரையில் கழிப்பதற்கு தீர்மானித்தார்கள். இதன் அடிப்படையில் கிராமவாசிகள் அனைவரும் எடஹெறாகஸ்கட விகாரையிலே கூடினார்கள். இராணுவத்தினர் மற்றும் சிவில் பாதுகாப்பு படையினர் மக்களிற்கு பாதுகாப்பு வழங்கினர். யுத்தம் நிறைவடையும் வரை இந்நிலையே தொடர்ந்தது. ஆரம்பகாலத்தில் ஒரு ஏக்கரிற்கு மட்டுப்பட்டிருந்த இவ்விகாரை தற்பொழுது 8 ஏக்கர் வரை விரிவடைந்துள்ளது. இவ்வனைத்து நிலபரப்புகளும் பலவந்தமான முறையில் உரிமையாக்கப்பட்டுள்ளன என கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர். உயர் இராணுவ அதிகாரிகள் பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் இப்பிக்குவின் நெருங்கிய நண்பர்களாவர். நாட்டின் உயர் பீடம் முதல் பிரதேச அரசியல்வாதிகள் வரை இவ்விகாரையுடன் நெருங்கிய தொடர்புகளை பேணுகின்றனர். இப்பிக்குவின் நவீன காரியாலயத்திற்கு விஜயம் செய்த பொழுது இப்பிரமுகர்களுடன் பிக்கு எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் வரிசையாக தொங்கவிடப்பட்டிருந்தன. அவற்றுள் டென்சில் கொப்பேகடுவ முதல் ஜகத்ஜயசூரிய வரை எதிர்க்கட்சி தலைவர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருடனான புகைப்படங்களும் உள்ளடங்குகின்றன.

இப்பிக்கு ஓர் கல்விமானல்ல. பிரதான பிக்குவாக இவர் தேர்வுச்செய்யப்படும் பொழுது அதற்கெதிராக நாங்கள் நகரில் ஆர்ப்பாட்டம் செய்தோம். அது பத்திரிகைகளில் வெளியாகவில்லை. தேசியம் எனக் கூறிக்கொள்ளும் எத்தலை பத்திரிகைகள் இச்சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றி எழுதுகின்றன? இன்றுவரை 5 புதிய விகாரைகள் இப்பிக்குவினால் கிராமத்தினுள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இக்கிராமத்தின் உரிமையாளராக இப்பிக்கு செயற்படுகின்றார். இவ்விகாரையிலிருந்து 30 - 40 மைல்கள் தொலைவிலேயே கிராமங்கள் உள்ளன. நாட்களின் அடிப்படையில் கிராமவாசிகள் விகாரையிற்கு தினமும் தானம் கொண்டுசெல்ல வேண்டும். விகாரையின் அருகே கற்கள் உடைக்கும் இடமொன்று உள்ளது. அங்குள்ள டிப்பர்கள் விகாரையினை கடந்துச்செல்லும் பொழுது வரியினை செலுத்த வேண்டும். எதிர்ப்பு தெரிவித்தால் இராணுவ பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு படையினரின் தாக்குதல்களிற்கு உள்ளாக நேரிடுமென கபில தெரிவித்தார்.

"நான் ஓர் சிவில் பாதுகாப்பு படை வீரன் நான் விகாரை வேலைகளில் ஈடுபட்டேன். நாங்கள் பிக்குவின் கழிவறை முதல் அவருடைய உறவினர்களின் வயல்கள் வரை வேலைசெய்ய வேண்டும்" என கிராமவாசியொருவர் கூறினார்.

## ஆசிரியையின் கதை

நான் விகாரையின் அருகிலுள்ள பாடசாலையில் ஆசிரியராக பணிபுரிய நியமிக்கப்பட்டிருந்தேன். பிக்குவின் விருப்பங்களிற்கமையவே இப்பாடசாலை நடாத்தப்படுகின்றது. தினமும் காலையில் ஆசிரியர்கள் பிக்குவை வணங்கிவிட்டே வரவேண்டும். நான் அவற்றை செய்யவில்லை. அதுமட்டுமன்றி இவ் ஏழை சிறார்களிற்கு உலக உணவு திட்டத்தினால் வழங்கப்படுகின்ற அரிசி. பருப்பு எண்ணெய் மற்றும் பேணியில் அடைக்கப்பட்ட மீன்கள் ஆகியன ஒரு போதும் பிள்ளைகளிற்கு வழங்கப்படவில்லை. பிக்குவின் சகோதரர் ஒருவர் டீமோ பட்டாவில் வந்து அவ்வனைத்து உணவு பொருட்களையும் விகாரையின் அருகேயுள்ள அவரின் கடைக்கு கொண்டுசெல்வார். நான் அதனை எதிர்த்தேன். என்னை பிக்கு அழைத்தார். என்னை இவற்றில் தலையிடவேண்டாம் எனக்கூறி என் மீது கடுமையான வார்த்தைகளை பிரயோகித்ததுடன் வலய கல்விப்பணிப்பாளருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு எனக்கு விரைவாக இடம்மாறுதல் வழங்கப்பட வேண்டுமென ஆணையிட்டார். என்னையும் இடம்மாற்றினார்கள். சிறுவர் இல்லத்திலுள்ள சிறுவர்கள் அனைவரும் இப்பாடசாலையிலே கல்விபயின்றார்கள். அவர்கள் தினமும் ஒரே காற்சட்டையினையே அணிவார்கள். சிலர் இரவில் படுக்கையில் சிறுநீர் கழித்துவிடுவார்கள். காலையில் அக்காற்சட்டையுடனேயே பாடசாலை வருவார்கள்.

அத்துர்நாற்றம் காரணமாக ஆசிரியரொருவர் வகுப்பில் வாந்தியெடுத்தார். வருடத்தில் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் இப்பிள்ளைகள் பாடசாலை வரமாட்டார்கள். என்னவென்று ஆராய்ந்த பொழுது அனைவரும் பிக்குவின் வயலில் வேலைக்கு

(19ஆம் பக்கம் பார்க்க)

# முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்

# தமிழர்களின் வரலாற்று சின்னம்

■ சுபன்

தமிழ்நாட்டில் வயலும் வயல்சார்ந்த இடமாக காணப்படும் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் இடம்தான் தஞ்சாவூர். சோழர் ஆட்சிக்காலத்தில் தலைநகரமாக விளங்கியதும் இந்த தஞ்சாவூர்தான். தஞ்சாவூரில் உலகவரலாற்று புகழ்மிக்க இராஜராஜ சோழனால் கட்டப்பட்ட தஞ்சை பெருங்கோயில் தஞ்சாவூரின் வரலாற்றினை எடுத்து சொல்கின்றது.அத்துடன் அல்லாமல் தமிழுக்கு என்று முதன்முதல் அமைக்கப்பட்ட பல்கலைக்கழகமும் தமிழ்நாட்டில் தஞ்சாவூரில்தான் காணப்படுகின்றது.

தமிழ்நாட்டின் கலை பண்பாட்டினை வளர்ப்பதற்காக தென்னக பண்பாட்டு மையமும் தஞ்சாவூரில்தான் அமையப்பெற்றுள்ளது. அத்துடன் மெல்லிசைக்கருவிகளான வீணை. மிருதங்கம். தபேலா. தம்பூரா போன்ற கருவிகள் இங்குதான் செய்யப்படுகின்றது. இவ்வாறு தமிழர்களின் வரலாற்று சிறப்பு மிக்க தொன்மைகளும் பண்பாடுகளும் கொண்ட தங்சாவூரில் அமையப்பெற்றதுதான் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம். இந்த நினைவுமுற்றம் தஞ்சாவூரில் அமைப்பதற்கான காரணங்கள் பல உண்டு. ஆனால் தமிழர்களின் வரலாற்று சின்னமாக இன்றும் காணப்படும் தஞ்சாவூர் ஈழத்தமிழர்களின் வரலாற்று சின்னத்தினையும் தன்னகத்தே கொண்டுள்ளது என்பது இந்தஊரில் வாழ்பவர்கள் பிறந்தவர்களை பெருமைகொள்ள வைக்கின்றது.

இப்படிப்பட்ட இடத்தில் அமைக்கப்பட முள்ளிவாய்க்கால் முற்றம் என்பது தமிழர்களின் வரலாற்று சிறப்பு மிக்க முற்றமாகும். இது ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்ல தமிழ்நாட்டு தமிழர்களின் வீரம். போர் உயிர்கொடைதியாகிகளின் வரலாற்றினை பறைசாற்றி நிற்கின்றது

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக அமைக்கப்பட்டு இறுதிக்கட்ட பணிகள் முடிவடைந்த நிலையில் நவம்பர் 6ஆம் நாள் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

தஞ்சை நகர்பகுதியில் அதாவது தஞ்சைமையத்தில் இருந்து சுமார் 3கிலோமீற்றர் தூரத்தில் உள்ள விளார் சாலையில் திருச்சி. நாகபட்டினம் நெடுஞ்சாலைக்கு அருகில் விளார் தஞ்சாவூர் வீதியில் மக்களை கவரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

முன்பக்கத்தில் பூங்காவும். அதனை சார்ந்து நீர்த்தடாகமும் அமைக்கப்பட்டுள்ளது. அதன்சுற்று மதிலில் "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற உலகத்தமிழர் இலச்சினைகள் பொறிக்கப்பட்டு மின்விளக்குகள். நீர் விசிறிகள். பச்சைபுற்கள். பூக்கன்றுகள். பெரிய சிறிய பச்சை மரங்கள் என ஒரு பூங்காவிற்குள்ள அனைத்தும் வளர்ந்து பச்சைபசேலென காட்சியளிக்கின்றது.

உள்ளே செல்வதற்கு முன்னர் ஈழத்தமிழரின் வரலாற்றினையும். அவர்களின் வாழ்வியலினையும் சித்தரிக்கும் சிறபக்கல்லு மதில்போல காட்சிதருகின்றது. அந்த சுவரில் உள்ள பேசும் சிற்பங்கள் இடமிருந்து வலமாக பார்க்கும் போது தமிழர்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இயற்கை எழில்மிக்க வாழ்இடத்தில் குருவிகள் கூடுகட்டி சந்தோசமக வாழ்வதையும். பறையடிக்கும் ஒரு மனிதன் தமிழரின் பண்பாட்டினையும். குருவிகூட்டங்களில் வாழ்வு தமிழரின் குடும்ப ஒற்றுமையான வாழ்வியலையும் எடுத்துதியம்புகின்றது.

அதன் பின்னர் தமிழரின் தொடக்க காலத்தில் நிகழ்ந்த சிங்களவர்களின் அடக்குமுறையினை காட்டும் விதமாக சிறையில் குட்டிமணி. தங்கத்துரை கைதுசெய்யப்பட்டு அவர்களின் கண்கள் படையினரின் காலால் மிதிக்கப்படும் காட்சி கருங்கல்லில் சிலையாய் வரையப்பட்டுள்ளது. அதனடுத்தபகுதி தமிழர்களின் வரலாற்று பொக்கிசமான யாழ்நூலகம் 1981 ஆம் ஆண்டு சிங்கள காடையனர்களினால் எரிக்கப்பட்ட வரலாற்றினை அவ்வாறே சொல்லிநிற்கின்றது. பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் என்று யாழ் நூலகம் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கீழ் சரஸ்வதி அமர்ந்திருப்பதும் சுற்றிவர தீ பற்றி எரிவதுமான காட்சி செதுக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் தமிழர்கள் எவ்வாறு சித்திரவதை செய்யப்பட்டுள்ளார்கள் தலைகீழாக கட்டி தொங்கவிடப்பட்டு சித்திரவதை செய்யப்படும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.

சமாதான புறாக்கள் மேலே பறக்கின்றன. தமிழ்மேல் குண்டுகளை போட்டபடி இவ்வாறான ஒரு சிற்பம் காட்டிநிற்கின்றது. அதன்பின்னர் தமிழர்களின் இடம்பெயர்வு வாழ்ந்த இடம். இழந்து அகதியாக ஊர் ஊராக அலையும் தமிழனின் காட்சி தெரிகின்றது.

இவ்வாறு வளாகத்தினுள் சென்றால் வலது பக்கத்தில் தாயக விடுதலைக்காக தீக்குளித்த தமிழக ஈகிகைளின் சிலைகள் பொறிக்கப்பட்டுள்ளது.




தீக்குளித்த ஈகிகளின் விபரம்-

**02.03.2009 அன்று தமிழ்நாடு வாணியம் பாடி சீனிவாசன்.**
**08.02.2009 அன்று சென்னையினை சேர்ந்த அமரேசன்**
**22.03.2009 அன்று சிவகாசியினை சேர்ந்த மாரிமுத்து**
**02.03.2009 அன்று கொத்தமங்கலத்தினைசேர்ந்த பாலசுந்தரம்.**
**05.03.2009 அன்று சென்னையினை சேர்ந்த ஸ்ரீதர் என்று அழைக்கப்படும் எழில்வளவன்.**
**17.03.2009 அன்று அன்னவல்லியினை சேர்ந்த ஆனந்த்.**
**15.12.1995 அன்று பெரம்பலூரினை சேர்ந்த அப்துல் ரவூப்.**
**02.02.2009 அன்று மலேசியாவினை சேர்ந்த ஸ்டீபன் செகதீசன்.**
**18.02.2009 அன்று கடலூரினை சேர்நச்த தமிழ்வேந்தன்.**
**23.04.2009 அன்று திருப்பூரினை சேர்ந்த சுப்பிரமணி**
**29.01.2009 அன்று சென்னையினை சேர்ந்த முத்துக்குமார்.**
**02.02.2009 அன்று பள்ளப்பட்டியினை சேர்ந்த இரவி.**
**17.03.2009 அன்று காட்டுநாகலேரியினை சேர்ந்த இராசசேகர்.**
**17.04.2009 அன்று சென்னையினை சேர்ந்த கரூர் சிவானந்தம்.**
**25.02.2009 அன்று சிவகாசியினை சேர்ந்த கோகுலக்கிருட்டிணன்.**
**07.02.2009 அன்று சீர்காழியினை சேர்ந்த இரவிச்சந்திரன்.**
**07.02.2009 அன்று மலேசியாவினை சேர்ந்த இராசா.**
**18.04.2009 அன்று சீகம்பட்டியினை சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி.**
**12.202009 அன்று ஜெனீவாவினை சேர்ந்த முருகதாசன்.**
**22.02.2009 அன்று சென்னையினை சேர்ந்த சிவப்பிரகாசம்**

ஈகிகளின் உருவம் கற்சிலையாக பொறிக்கப்பட்ட நீண்ட சிலை ஒருபுறம், மறுபுறத்தில் தமிழினத்தின்மீது சிங்கள அரச படையினர் மேற்கொண்ட இனஅழிப்பின் கொடூரங்கள் சிற்பங்களாக வரையப்பட்டுள்ளது.

கொத்துக்குண்டுகள் தமிழர் வாழ் இடங்களில் மேல் விழுவதும மாடுகள். சிறுவர்கள். பெரியவர்கள் அதில் உயிரிழப்பதும் அடுத்து கைகள். கண்கள் கட்டப்பட்ட நிலையில் அம்மணமாக கிடக்கும் தமிழர்களின் உடலங்கள் சிங்கள அரசின் இனப்படுகொலையின் உண்மை சாட்சியாக பேசுகின்றது.

பனைமரங்கள் படையினரின் குண்டடிபட்டு கிடக்கின்ற காட்சியும். மனித பிணங்கள் கட்டுக்கட்டாக போட்டப்பட்டுள்ள காட்சியினையும் பேசும் சிற்பங்கள் மக்கள் பார்வையில் கண்ணில் கண்ணீரினை சிந்த வைத்தது...

முள்ளிவாய்க்கால் மண்ணில் பிணங்கள் கொத்துக்கொத்தாக கிடப்பதனையும் அதனை நாய்கள் தின்னுவதையும் காட்சிபடுத்துவதோடு அகதியாக கையில் பாத்திரத்துடன் கஞ்சிக்காக காத்திருக்கும் நிலையில் இடப்பெயர்வு தமிழனுக்கு தொடர்ந்தவண்ணம் உள்ளதையும் காட்டிநிற்கின்றது..

இவை அனைத்தினையும் தாங்கி இடதுபுறத்தில் அமைந்துள்ள சிற்பம் பார்ப்பவர்கள் கண்ணை கவரும் ஈர்க்கும். ஈகவைக்கும்., தமிழர்களின் வரலாற்றினை தெரியாதவர்களை புரியவைக்கும் குறிப்பாக இவ்வாறும் நடந்ததா என்று கூட ஏங்கும் அளவிற்கு அந்த பேசும் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளது.

இவை இரண்டிற்கும் நடுவில் ஒரு மேடை அதில்தான் ஓரே கல்லில் செதுக்கப்பட்ட தமிழ்ப்பாவை கையில் தீபத்தினை ஏந்தியவாறு நிற்கின்றாள். இதற்கு கீழ் அறையில் மின்விளக்குகள் பொருத்தப்பட்ட நிலையில் பார்வதி அம்மாளின் உடலின் சாம்பல் வைக்கப்பட்டுள்ளது. முள்ளிவாய்க்கால் தமிழரின்அழிவு என்பதை இலட்சியையாக காட்டி வடிவமைக்கப்பட்டுள்ளது...

இவற்றுக்கு பின்னால்தான் மாவீரர் மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழக தமிழர்களின் வரலாற்று சுவடுகள். தாயக தமிழர்களின் வரலாற்று சுவடுகள் இனப்படுகொலையின் பேசப்படாத வரலாறுகள் நடுவில் தாங்கியவாறு மண்டபம் அமையப்பெற்றுள்ளது.

இந்தியா ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இருந்து விடுதலை பெற்ற 1947.08.15 ஆம் நாள் வரையிலான இந்தியாவில் தமிழக விடுதலையும் தமிழக தமிழர்களின் வரலாறும் எத்தனையோ தமிழ்நாட்டவர்கள் அறிந்துகொள்ளமுடியாத தகவல்களும் ஒளிப்படங்களும் அங்கு வைக்கப்பட்டுள்ளதானது.

தமிழ்நாட்டிலும். தாயகத்திலும் காலூன்ற ஆங்கிலேய வல்லாதிக்கம் முயன்ற காலத்தில் அதை எதிர்த்து துணிவுடன் போராடி மாண்ட மறைந்த மாவீரர்கள்.அதைதொடர்ந்து தாயக விடுதலை போரின் களத்தில் புகழை நிலைநிறுத்தி மண்ணில்வீழ்ந்த மாவீரர்கள். தமிழ்நாட்டில் மொழிகாக்கும் போரில் உயிர்த்தியாகம் செய்த மானமறவர்கள் மற்றும் ஈழத்தமிழருக்காக தீக்குளித்து உயிர்தியாகம் செய்த தீரர்கள இந்திய துணைக்கண்ட விடுதலை போராட்ட வீரர்களின வரலாறுகள் ஒளிப்படங்கள் ஆகியவற்றை தாங்கி அவர்களின் நினைவை போற்றும் வகையில் இந்த முற்றம் எழுப்பப்பட்டுள்ளது

இப்படிப்பட்ட தமிழ்நாட்டு தமிழர்களின் வரலாற்றினை எடுத்துசொல்லும் முள்ளிவாய்க்கால் முற்றம் மறுபுறம் ஈழத்தமிழர்களின் அவலத்தினையும். அவர்களின் வரலாற்றினையும் சிலைகற்களாகவும். ஒளிப்படங்களாகவும் ஆவணம் செய்துள்ளது.

தாயகத்தில் கார்த்திகை மாதம் என்றால் அது மாவீரர்களின் மாதம் அப்படிப்பட்ட நாளில் தான் இந்தமுள்ளிவாய்க்கால் முற்றம் திறப்பு நிகழ்வு நடைபெற்றது. தஞ்சையில் விளார் சாலையில் ஆங்காங்கே கட்டப்பட்ட ஒலிபெருக்கில் அந்த மூன்று நாட்களும் மாவீரர் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டவண்ணம் இருந்தன. அணையா சுடராக பாலச்சந்திரன் சாள்ஸசின் நினைவு சிலை முன் சுடர் எரிந்துகொண்டே இருந்தது. இரவு நேரத்தில் கண்ணை கவரும் ஒளியமைப்பு செய்யப்பட்ட இந்த சிற்பங்கள். மாவீரர் மண்டபங்கள். பூங்காவின் மரங்கள் எல்லாம் தாயகத்தில் மாவீரர் துயிலும் இல்லத்தில் நிற்கும் உணர்வினை கொண்டுவந்தது. இப்படிப்பட்ட உணர்வு மிக்க பேசும் சிற்பங்கள் பார்ப்பவர் கண்ணில் நீர்வடியும் சிலைகள்.தமிழர்களின் வரலாறு இப்படிய என வியப்புடன் அறியவைக்கும் ஒளிப்பட ஆதாரங்கள் ஈழத்தமிழர்களின் மனங்களில் உறையவைக்கும் உணர்வுகளுக்கு அப்பால் தமிழ்நாட்டு தமிழர்கள் அதனை பார்த்துவிட்டு உணரவைக்கும் அளவிற்கு வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இவற்றுக்கு அப்பால் உலகத்தின் பார்வையினை திருப்பி அனைத்து தமிழ்மக்களின் மனங்களிலும் பதிந்த பாலச்சந்திரன் எவ்வாறு சுடப்பட்டு கிடந்தானே எவ்வாறு படையினரால் பிடிக்கப்பட்டு வாயில் பிஸ்கற்றினை வைத்து சாப்பிட்டுக்கொண்டிருந்தானோ அதேபோல் ஒரு பாரிய கல்லில் இந்த சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது.

பாலச்சந்திரன் எவ்வாறு படையினரால் கைதுசெய்யப்பட்டு பச்சை மண்மூட்டை அடுக்கிய இடத்தில் வைத்து பிஸ்கட்டினை சாப்பிட்டுக்கொண்டிருக்கும் காட்சியினை மிகவும் நாசுக்காக சிற்பிகள் அதனை செதுக்கியுள்ளார்கள். அத்துடன் பாலச்சந்திரனின் நெஞ்சில் நான்கு குண்டுகள் பாய்ந்தபடி இவ்வாறு கீழ்விழுந்து கிடந்தானோ அதேபோல் அவன் நெஞ்சில் துளையிடப்பட்டுள்ள காட்சியும் சிலையாக காணப்படுகின்றது. அண்ணனும். தம்பியும் ஒரேகல்லில் சிற்பி செதுக்கியுள்ளார். இவர்களில் சாள்ஸ் எவ்வாறு போர்த்தளபதி என்ற வீரத்துடன் நிற்கின்ற சிற்பம் இறந்து கிடக்கின்ற காட்சி இந்த சிலைக்கு முன்னால் அணையா விளக்கு எரிந்துகொண்டே இருக்கின்றது. இது பார்ப்பவர்கள் அனைவரையும் ஈர்க்கும் வகையில். இரங்கும் வகையில் சிற்பிகள் சிறப்புற செதுக்கியுள்ளார்கள்.

# இறைமை - SOVEREIGNTY

க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான அரசியல் விஞ்ஞானம்

கே.எஸ்.இளங்கோ
B.A.PGDE(MERIT), DIP.IN.POLITICAL

சென்ற இதழ் தொடர்ச்சி...

* பிரிக்கப்படாத. வரையறுக்கப்படாத அதிகாரமே இறைமை
* முழுநிறைவான எல்லையற்ற அதிகாரமே இறைமை
* ஓர் அரசு தான் விரும்பியதை செய்வதற்கான அதிகாரமே இறைமை
* இறைமை ஓர் இடத்தில் தெளிவாக ஸ்தாபிக்கப்பட்டிருத்தல்.

ஜோண் ஒஸ்டின் 18ம் நூற்றாண்டு காலத்தில் முன்வைத்த இறைமைக் கோட்பாடு தற்கால சூழலில் பொருத்தமற்றதாகி செயலிழந்துவிட்டது. எனவே இறைமை கோட்பாடு வலுவிழந்துவிட்டது. காரணம் அக்கால சூழலுக்கும் தற்கால சூழலுக்குமிடையில் பாரிய வேறுபாடு காணப்படுகின்றமையாகும். அவ்வகையில் இறைமைக் கோட்பாட்டிற்கு எதிரான நிலமை தோன்றியுள்ளது .அவையாவன

1. "டைசி" என்னும் அறிஞர் இறைமையினை சட்ட இறைமை. அரசியல் இறைமை என இரண்டாகப் பார்க்கிறார். அதேவேளை "கமில்ரன்" என்பவர் சமஸ்டி நாடுகளின் மத்திய அரசு இறைமை. மானிலஅரசு இறைமை இருப்பதாக கூறியுன்னார்..

2. இன்று சனத்தொகை அதிகளவில் பெருகியுள்ளதால் பல நாடுகளில் பொருளாதாரப் பிரச்சனைகள் தோன்றியுள்ளன. இந்நிலையில் ஒரு நாடு இன்னுமொரு நாட்டில் தங்கி வாழ வேண்டிய நிலமையுள்ளது. தங்கிவாழ்கின்ற நாடு உதவியளிக்கும் நாட்டிற்கு கட்டுப்படுவதால் அதன் இறைமை வலுவிழக்கிறது.

ஜோண் ஒஸ்டினின் இறைமைக் கோட்பாடானது நவீன அரசுகளில் பழமையடைந்துவிட்டது. அதாவது அரசின் முழுநிறைவான அதிகாரம். பிரிக்கப்படாத அதிகாரம். விரும்புவதைசெய்யும் அதிகாரம் இறைமை என்ற ஜோன்ஒஸ்டினின் வாதம் அரசுகளால் பின்பற்ற முடியாத நிலை தோன்றியிருப்பதே இதற்கான காரணம் ஆகும். எனவேதான் ஒஸ்டினின் இறைமைக்கோட்பாடு சரிவரக் கடைப்பிடிக்கப்படின்

* அரசினுள் மனிதனுக்கு சுதந்திரம் இருக்காது என்றும்
* அரசுக்கு வெளியே சர்வதேச கூட்டுறவு வளராது என்றும் கூறப்படுகின்றது.

ஜோண்ஒஸ்டின் விளக்கிய இறைமைக் கோட்பாட்டினை நோக்கும் போது அவற்றில் இருவிடயங்கள் மட்டுமே எஞ்சியிருப்பதை காணலாம்.

கட்டளையிடுதல். அடிபணிதல் என்பவையே அவையாகும். எனவேதான் கரோல்ட் ஜே.லஸ்கிகுறிப்பிடுகையில் ஜோண் ஒஸ்டினின் இறைமைக் கோட்பாட்டை தற்கால அரசுகள் கைவிட்டுவிடுவதே அவை நிலைத்திருப்பதற்கு பொருத்தமான வழியாகும் எனக் கூறியிருந்தார். எனவே தான் ஜோண் ஒஸ்டினின் இறைமைக்கோட்பாடு நவீன அரசகளின் செயலிழந்துவிட்டது எனவும் இக்கோட்பாட்டின் அடிப்படையில் இன்றைய அரசுகளையும். அரசாங்கத்தையும் விளக்கிக்கொள்ள முடியாது என்று கூறப்படுகின்றது.

## நவீன அரசுகளில் இறைமைக்கோட்பாடு செயலிழந்தமைக்கான காரணங்கள்

### 01. சூழ் நிலை வேறுபாடு

ஜோன்ஒஸ்டின் இறைமைக்கோட்பாடு முன்வைக்கப்பட்ட தேசிய அரசுகள் என்ற சூழலிலிருந்து இன்றைய நவீன அரசுகளின் சமூக, பொருளாதார. அரசியற் சூழல் முற்றிலும் வேறுபட்டதாகும். இதனால் இறைமைக்கோட்பாடு தற்கால ஜனநாயக முறையில் அமைந்த ஆட்சிகளின் சூழ்நிலைக்கு பொருத்தமற்றதாய் மாறி காலத்தால் பழமையடைந்துள்ளது எனலாம். உலகின் பெரும்பான்மை நாடுகளில் மக்களால் மக்களுக்காக மக்கள் செய்யும் ஆட்சி நிலவுகின்றது. இத்தகைய ஜனநாயக ஆட்சியிலே இறைமையானது ஆட்சியமைக்கும் அரசாங்கத்தின் முப்பெரும் துறைகளான சட்டவாக்கத்துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை என்பவற்றிடம் கையளிக்கப்பட்ட போதிலும் இவை ஒவ்வொன்றினதும் சர்வாதிகாரத் தன்மையைத் தடுக்கும் முகமாக சமநிலைத் தலையீடுகள் காணப்படுகின்றன. நவீனகால இறைமையானது மக்களது குரலையும். அவர்களது ஜனநாயக உரிமையையும் முன்நிலைப்படுத்தி செயற்படுவதாக அமைகிறது. மேலும் இவ் இறைமையானது நீதிக்கு கட்டுப்படுவதோடு பெரும்பான்மை மக்களின் விருப்பங்களையும் பூர்த்தி செய்வதாக அமைகின்றது. அதாவது இறைமையானது ஒரு வரம்பிற்குட்பட்டதாக அமைகின்றது. சமஸ்ரி நாடுகளிலே இறைமையானது மத்திய. மாநில அரசுகளிடையே பிரிக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்ட மக்களாட்சிக்கு மதிப்பளிக்கும் தன்மை பேணப்பட்டுள்ளது. நவீனகாலத்தில் இறைமையாளன் மக்களின் வாக்கெடுப்புக்கள் மூலம் தெரிவு செய்யப்படுவதால் அவன் மக்களின் பிரதிநிதியாக தொழிற்படுகிறான். இவ் இறைமையாளன் மக்களுக்கு முரணாக நடக்கின்ற போது அவனை பதவி இறக்கம் செய்கின்ற அதிகாரம் மக்களிற்கு உண்டு. இத்தகைய சூழ்நிலை வேறுபாடுகளால் இறைமை பிரிக்கமுடியாதது. எல்லையற்றது. இறைமையாளன் வேறு எவருக்கும் அடி பணிய வேண்டியதில்லை என்னும் கருத்துக்கள் வலுவிழந்துள்ளன.

### 02. நாடுகள் ஒன்றில் ஒன்று தங்கியிருத்தல்

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இடம் பெற்ற தேவைகளின் அதிகரிப்பு சனத்தொகை அதிகரிப்பு வளப்பற்றாக்குறை காரணமாக பொருளாதார பிரச்சினைகள் அதிகரித்து சர்வதேச வர்த்தகம் ஏற்றுமதி. இறக்குமதி என்பன முக்கியத்துவம் பெற்றுள்ளது. இன் நிலையில் நாடுகள் தமது தேவைகளை பூரத்தி செய்வதற்காக ஒன்றை ஒன்று நம்பி தங்கி வாழ வேண்டிய நிலை எழுந்துள்ளது. இதுவே இறைமை செயலிழக்கவும் காரணமாக அமைந்துள்ளது.

### 03. நாடுகள் சர்வதேச சட்டங்களிற்கு அடிபணிதல்

அரசுகளின் சர்வதேச செயற்பாட்டை ஒழுங்குபடுத்தும் விதிகளே சர்வதேச சட்டங்களாகும். நாடுகளிற்கு இடையிலான நலன்களைப் பேண இவற்றிற்கு அடிபணிதல் அவசியமாகும். இவ்வகையில் தூதுவர் காரியாலய சட்டம். விமான போக்குவரத்துச் சட்டம். கடல் எல்லை சட்டம் போன்றவற்றை குறிப்பிடலாம். எனவே அரசுகள் இச்சட்டங்களிற்கு அடிபணியும் நிலை இறைமை செயலிழக்ககாரணமாகும்.

### 04. மதக் கோட்பாடுகள்

இன்றும் மனித வாழ்க்கையை ஒழுங்கமைப்பதில் மதம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. சமயக்கோட்பாடுகளும் மத குருமார்கள் அவற்றிற்கு அளித்த விளக்கங்களும் சமயச் சட்டங்களாகவே விளங்குகின்றன. அரச இறைமை அதிகாரத்தை கொண்டிருப்பினும் மதக் கோட்பாடுகளுக்கு எதிராக சட்டம் இயற்றமுடியாத நிலையே காணப்படுகின்றது. எனவேதான் அரசின் இறைமை செயலிழக்க மதக்கோட்பாடுகளும் மற்றொரு காரணமாகும். உதாரணமாக இஸ்லாமிய நாடுகளை எடுத்து நோக்கும் போது இங்குள்ள இறைமை யாளர்கள் மதக்கோட்பாடுகளுக்கு உட்பட்டே சட்டங்களை இயற்றுகின்றனர். இங்கு வாழுகின்ற மக்களில் பெரும்பாலானோர் ஒரே மதத்தை பின் பற்றுபவர்களாகவும் ஒரே இனத்தவர்களாக இருப்பதுமே இதற்கு காரணம். இங்கு இறைமையானது ஒரு வரம்பிற்கு உட்படுத் தப்படுகின்றது. ஜோன் ஒஸ்ரின் வரம்பற்ற இறைமை செயற்பாட்டின் மூலம் செல்லுபடியற்றதாகி விடுகின்றது.

### 05. அரசுகளுக்கிடையிலான ஒப்பந்தங்கள் / உடன்படிக்கைகள்

நாடுகள் தமக்கிடையில் செய்துகொள்ளும் ஒப்பந்தங்களும் இறைமை செயலிழக்க மற்றொரு காரணமாகும். ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட நிபந்தனைகளை குறித்த அரசுகள் ஏற்று செயற்படுத்த வேண்டிய நிலை இறைமையினை செயலிழக்கச் செய்கிறது எனலாம். உதாரணமாக

1987இல் யூலை. 29 இலங்கை - இந்திய உடன்படிக்கை (ஜெ.ஆர்.ஜெயவர்த்தன - ராஜீவ்காந்தி)

### 06. அரசுகள் சர்வதேச உறவின் அவசியத்தை உணர்ந்திருத்தல்

இன்று உலகில் பரவலாக வலுப்பெற்றிருக்கும் சமூகப்பொருளாதார அரசியற் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவும். தகவல் தொழிற்நுட்பம். கணணிமயமாக்கம். உலகமயமாதல் போன்ற திறன்களையும். வாய்ப்புக்களையும்பெற்றுக்கொள்ளவும்வேண்டுமானால் அரசுகள் ஒன்றோடு ஒன்று இணைந்து செயலாற்றுதல் அவசியமாகும். இதனால் சர்வதேச உறவின் அவசியம் அரசுகளால் பெரிதும் உணரப்பட்டுள்ளது என்று கூறிக் கொள்ளலாம். இன் நிலையில் அரசுகள் பிற நாடுகளுடன். அரசுகளுடன் ஒத்துழைத்து செயலாற்ற தாமாக முன்வரும் நிலையும் இறைமை வலுவிழக்க மற்றொரு காரணமாகும்.

### 07. அரசுகள் சர்வதேச முகவர்கள் அமைப்புக்களில் இணைந்திருத்தல்

இரண்டாம் உலகப் போரின் பின்னர் சர்வதேச சமாதானம். பாதுகாப்பு. ஒத்துழைப்பு. அபிவிருத்தி போன்ற நோக்கங்களின் அடிப்படையில் நிறுவப்பட்ட தாபனங்களே சர்வதேச முகவர்கள் அமைப்புக்கள் ஆகும். உதாரணமாக ஐ.நா ஸ்தாபனம் (U.N.O ). உலக வங்கி (W.B) போன்றவற்றை குறிப்பிடலாம். உலகின் இறைமை படைத்த 191 நாடுகள் முகவர் அமைப்புக்களில் உரிமைபெற்றுள்ளன. இன் நாடுகள் இம் முகவர் நிறுவனங்களின் சட்டதிட்டங்கள். நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவதன் மூலமே தமது சர்வதேச நலன்களை பேணிக் கொள்ள முடியும் எனவே அரசுகள் இச்சர்வதேச நிறுவனங்களில் இணைந்திருக்கும் நிலை இறைமை செயலிழக்க மற்றொரு காரணமாகும்.

### 08. உலக நாடுகள் மூன்று அணிகளாக பிளவுண்டு செயற்படுதல்

இரண்டாம் உலகப்போரின் பின்னர் ஐரோப்பிய நாடுகளில் பிராந்திய பாதுகாப்பு நலன் கருதி இரு பாதுகாப்பு அணிகள் நிறுவப்பட்டன. அமெரிக்கா தலைமையிலான "நேட்டோ" அணி. சோவியத் யூனியன் தலைமையிலான "வார்சோ" அணி என்பனவே அவ்விரு அணிகள் ஆகும். யுத்தம் ஒன்று ஏற்பட்ட போது குறித்த அணி சார்ந்த நாடுகளிற்கு உறுப்பு நாடுகள் உதவவேண்டும் என்பதே இவ்விரு அணிகளினது சித்தாந்தமாகும். இவ்விரு அணிகளிலும் இணைந்துகொள்ள விரும்புவதாக மூன்றாம் உலக நாடுகள் (ஆசிய. ஆபிரிக்கா. இலத்தீன் அமெரிக்க) இணைந்து ஏற்படுத்திக் கொண்ட அமைப்பே "கூட்டுச்சேரா" நாடுகளின் அணியாகும். யுத்தம் ஒன்று ஏற்படும்போது எந்த ஒரு அணியையும் சேராது நடுநிலை வகிப்பதே கூட்டுச்சேரா அணியின் கொள்கையாகும். எனவே மூன்று அணிகளிலும் இணைந்துள்ள நாடுகள் தத்தமது கொள்கைக்கு ஏற்ப செயற்படும் நிலை இறைமை செயலிழக்க மற்றுமொரு காரணமாகும்.

(தொடரும்)



# மீதமிருக்கும் நேரம்

## திரை விமர்சனம்

ஜமுனா ராஜேந்திரன்

எலியா சுலைமானின் காட்சிரூபம் தரும் அனுபவத்தை எழுத்தில் விளக்குவது சாத்தியமில்லை. கண்களுக்கு மட்டும் துளைகள் விட்டு மூகமூடியணிந்து காட்டிக் கொடுப்பவன். போராளி பவுத் சுலைமானை துப்பாக்கி செய்பவன் என இஸ்ரேலிய படைத்தளபதிக்குக் காட்டிக் கொடுக்கிறான். அடர்ந்த மரங்கள் நிறைந்த வெளிக்கு பவுத் சுலைமான் கொண்டு செல்லப்படுகிறான். அவனது கண்களைக் கட்டக் காவலன் முயல்கிறான். காவலன் குள்ளம். கண்கள் அவனுக்கு எட்டவில்லை. மரத்தின் அருகிலிருக்கும் கருங்கல்லை எடுத்து வந்து அதன்மேல் நின்று கண்களைக் கட்டிவிட்டுச் செல்கிறான். சுற்றிலும் கண்கள் கட்டப்பட்ட நிலையில் தலைகள் குனிந்த நிலையில் சிதறிக் கிடக்கும் பாலஸ்தீன மனிதர்கள். கண்கள் கட்டப்பட்ட நிலையில் நிற்கும் பவுத் சுலைமான் அசையும் மரங்களிலிருந்து வரும் ஆக்கிரமிக்கப்பட்ட அவனது சொந்த நிலத்தின் காற்றின் மணத்தை முழுமையாக இதயத்தை முழுமையாக விரித்து உள்ளே இழுக்கிறான். இலைகளின் அசைவை உணர்கிறான்...

படைத்தளபதி நெற்றியின் பக்கவாட்டில் துப்பாக்கி முனையை அழுத்திச் சொல்கிறான்: 'ஒன்று முதல் பத்து எண்ணிக் கொண்டு வா. பத்து வருவதற்குள் தயாரித்த துப்பாக்கிகளை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய் என்று சொல்லிவிடு' என்கிறான். பவுத் சுலைமான் எண்ணைத் துவங்குகிறார். 1. 2. 3. 4, 5 என்கிறார். கொஞ்சம் இடைவெளி விடுகிறார். தொடர்ந்து 'பத்து' எனத் தெளிவாக அழுத்தமாகச் சொல்கிறார். பவுத் சுலைமானின் முகத்தில் ஓங்கிக் குத்திவிட்டு கோபத்துடன் அருகிலிருக்கும் ராணுவத்தினருக்குக் கையசைத்துவிட்டுச் செல்கிறான் ராணுவத் தளபதி. இரண்டு ராணுவச் சிப்பாய்கள் பவத்தைக் கீழே தள்ளி உதைக்கத் துவங்குகிறார்கள். அடித்து முடித்து பவுத்தின் அசைவற்ற உடலை அருகிலிருக்கும் பள்ளத்தாக்கில் தூக்கி எறிந்துவிட்டுச் செல்கிறார்கள்.

பவுத் சுலைமான் பாலஸ்தீன இயக்குனர் எலியா சுலைமானின் தந்தை.

இருப்பு என்பது நிலமும் நினைவுகளும் சார்ந்தது. பாலஸ்தீன மனிதனின் இருப்பு. தாய்வீடு. நாடு திரும்புதல் போன்றவற்றுக்கு என்னதான் அர்த்தம்? 'பாலஸ்தீனத்தைத் எனது மொழிக்குள் கொண்டு திரிகிறேன்' என்றான் மஹ்முத் தர்வீஸ். 'கடைசி வானத்தின் பின் எங்கே செல்வது?' என்றான் எட்வர்ட் சைத். மீதமிருக்கும் நேரம் மரண பயத்திற்கும் அபத்தச் சிரிப்பிற்கும் விட்டுவைக்கப்பட்டிருக்கிறதாக அச்சம் தெரிவிக்கிறான் பாலஸ்தீன சினிமாக் கலைஞன் எலியா சுலைமான்.

1960 ஆம் ஆண்டு பாலஸ்தீனத்தில் பிறந்த எலியா சுலைமான் தனது வாலிப வயதில் இஸ்ரேலியக் கொடியை எரித்தார் என்பதன் பின்னான நெருக்கடியின் பின் இங்கிலாந்துக்கும். பாரிசுக்கும் பிற்பாடு நியூயார்க் நகருக்கும் இடையில் பத்தாண்டுகள் அலைந்து திரிகிறார். இந்த அலைதல் வசதியான. படித்த மத்தியதரவர்க்கக் கனவானின் அலைதல் அல்ல. பாலஸ்தீன அரசியல் அகதியொருவனின் அலைதல். 1982 முதல் 1993 வரை நியூயார்க் நகரில் அடையாளமற்ற மனிதனாக வாழ்ந்த சுலைமானுக்கு அங்கு ஏற்பட்ட அனுபவமே அவரை ஒரு திரைக்கலைஞனாக உருவாக்கியது. பாலஸ்தீன மக்களின் இழப்பையும் கையறுநிலையையும் துயரையும். அது இடையற்றுத் தொடர்வதையும் ஒரு மரண தருணமாக அவர் அனுபவம் கொண்டார்.

இஸ்லாமியரதும். கிறித்தவர்களதும். யூதர்களதும் கூட்டுநிலமாக முன்னொருபோது இருந்த பாலஸ்தீனம் எனும் நிலப்பரப்பு. அமெரிக்க மேற்கத்திய காலனியவாதிகளின் ஆசியுடன் இஸ்ரேல் எனும் ஏக யூதநாடாக இப்போது யூதர்களால் நிரந்தரமாகக் திருடப்பட்டுவிட்டது என்பதனையும். பாசிச காலகட்டத்தில் இட்லரால் யூதமக்களுக்கு நேர்ந்த துயரை இப்போது அவர்கள் பாலஸ்தீன மக்களின் மீது சுமத்தியிருக்கிறார்கள் என்பதையும். இதனை தமது ஆதிக்க நோக்கங்களுக்கு அமெரிக்க மேற்கத்திய அரசுகளும். குறிப்பாக அதனது ஊடகங்களும் பயன்படுத்துகின்றன என்பதையும் அவர் புரிந்து கொண்டார்.

இரண்டாம் உலகப் போர். பாலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலியக் கொலைவெறியாட்டம். பாசிசகாலகட்ட யூதப்படு கொலைகள் என்பதை சமகால அமெரிக்க. யூத ஆதிக்கத் திரை அழகியலாக முன்வைக்கும் ஸ்டீபன் ஸ்பீல்பர்க். யூத ஆதிக்க நிலைபாட்டில் இருந்துகொண்டு சமத்துவமும் ஜனநாயகமும் போதிக்கும் அமோஸ் கித்தாய் போன்றவர்களின் பிரச்சாரத் திரைமொழிக்கு மாற்றாக பாலஸ்தீன மக்களின் பாடுகளை ஒத்ததாக இனம் கண்டு. உலகின் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களதும் விமோசன அழகியலாக திரைக்கலையை மாற்றிய கலைஞன் எலியா சுலைமான்.

ஸ்டீபன் ஸ்பீல்பர்க்கின் ஷின்டலர்ஸ் லிஸ்ட். சேவிங் பிரைவேட் ரயான். மியூனிக் போன்ற கடந்த காலத்தை மகோன்னதப்படுத்துவதன் மூலம் நிகழ்கால அமெரிக்க யூத ஆதிக்க அரசியலைப் புனிதப்படுத்தும் திரைப்படங்களுடன். எலியா சுலைமானின் தி குரோனிக்கல் ஆப் எ டிஸ்ஸப்பியரன்ஸ்(1999). டிவைன் இன்டவென்சன் (2002). மற்றும் த டைம் தட் ரிமைன்ஸ் (2009) போன்ற படங்களை ஒருவர் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என நினைக்கிறேன். எலியா சுலைமானின் இந்த மூன்று திரைப்படங்களும் அவரது சுயவாழ்வு அனுபவங்களும். அவரது தாய் தந்தையரின் டைரிக்குறிப்புகள் மற்றும் கடிதங்களின் அடிப்படையில் அவரது பெற்றோரின் நண்பர்களின் அனுபவங்களின் அடிப்படையில் அமைந்த படங்கள்.

சுலைமானின் படங்கள் பிற பாலஸ்தீனத் திரைப்படங்களில் இருந்து முற்றிலும் வேறான அனுபவங்களைத் தருவது. பாலஸ்தீன தேசியம் அல்லது விடுதலை பற்றிய சைத். தர்வீஷ் போன்றவர்களின் பார்வையை ஒத்தது சுலைமானின் பார்வை. 'ஒடுக்குமுறைக்கு எதிராக பாலஸ்தீனக் கொடியை உயர்த்தும் நான். பாலஸ்தீனம் ஒரு அரசாக ஆகிய பின்னால் அரசுகளுக்கே உரிய ஒடுக்குமுறையின் தன்மையைக் கொஞ்சமாகவேனும் அது கொண்டிருக்குமானால் அந்தக் கொடியைக் கீழே இறக்க நான் போராடுவேன்' என்கிறார். 'பாலஸ்தீன நிலத்தின் விடுதலைக்காகப் போராடும் நான் பாலஸ்தீனம் விடுதலை பெற்றவுடன் அங்கிருந்து நீங்கவிரும்பும் நாடோடி' என்கிறார் தர்வீஷ்.

இந்த விடுதலைத் தேட்டமும் அலைவும் கலைஞனது இயல்பு மட்டுமல்ல. உலகமயமாதல் உலகில் நிலத்தையும் ஜீவாதாரங்களையும் கார்ப்பரேட்டுகளிடம் இழக்கும். சதா இடம்பெயரும் அனைத்து மனிதர்களுக்கும் உரியது என்கிறார். எலியா சுலைமான். இந்த வகையில்தான் குறிப்பான பாலஸ்தீன இருப்பற்ற அலைவு பற்றி தான் எடுக்கும் படங்கள் உலகில் எங்கிருக்கும் மனிதனோடும் பிரபஞ்சமயமான உறவைக் கொண்டிருக்கிறது என்கிறார் எலியா சுலைமான். எலியா சுலைமான் இப்போது இஸ்ரேலிய நிலம் எனக் கோரப்படும் நாசரத் நகரத்தில் பிறந்தவர். இஸ்ரேலிய அரபு நகரம் என்று இன்றும் சொல்லப்படும் நகரம் நாசரத். 69 சதவீத இஸ்லாமியர். 29 சதவீத கிறித்தவர். வெறும் 2 சதவீத இஸ்ரேலியர் வாழும் நகராக அது 1948 ஆம் ஆண்டுகளில் இருந்தது.

இன்று மேற்குக்கரைப் பாலஸ்தீனத்தின் தலைநகராக இருப்பது ரமல்லா நகரம். யாசர் அரபாத்தின் பதா விடுதலை அமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள நகரம். பல்கலைக் கழகங்களும். நாடகத் திரைப்பட அரங்குகளும். திறந்தவெளித் தேநீர்க் கடைகளும். இரவு விடுதிகளும் நிறைந்த நகரம். ஹமாசின் கட்டுப்பாட்டிலிருக்கும் காஸா பிரதேசத்துடன் ஒப்பிட பெண்ணிலைவாதிகள் நிறைந்த நகரம் ரமல்லா. இஸ்ரேல் அரசு. ரமல்லா நகரம் இருக்கும் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரைப் பிரதேசத்தின் பகுதிகளையும் இணைத்துக் கொண்டு. 25 அடி உயரம் கொண்ட 445 மைல்கள் நீளம் கொண்ட மதில்சுவற்றை இஸ்ரேலுக்கும் மேற்குக் கரைப் பிரதேசத்திற்கும் இடையில் எழுப்பியிருக்கிறது. பெர்லின் சுவரின் உயரம் 11 அடிகள். நீளம் 92 மைல்கள். இதனைப் போன்ற நான்கு மடங்கு உயரமும் நீளமும் கொண்டது இஸ்ரேலின் மதிற்சுவர். இனஒதுக்கல் மதிற்சுவர் என இதனை சர்வதேசிய மன்னிப்புச் சபை குறிப்பிடுகிறது. 'பாலஸ்தீனப் பயங்கரவாதிகளிடமிருந்து தன்து மக்களைப் பாதுகாத்துக் கொள்ள இது தேவைப்படுகிறது' என்கிறது இஸ்ரேலிய அரசு.

தமது பாதுகாப்பை முன்வைத்து தமது அனைத்து நடவடிக்கைகளையும் நியாயப்படுத்தும் யூதவாதம் தோல்வியுற்ற ஒரு கருத்துநிலை என்கிறார் அரபு அறிஞரான ஹமித் தபாசி. கிட்லர் காலத்தில் யூத மக்களுக்கு நடந்தது மிகப்பெரும் கொடுமை எனும் தபாசி. இது போல் உலகில் எந்தவொரு இனக்குழுவுக்கும் அதற்கு முன்பாக இவ்வளவு பெரிய கொடுமை இழைக்கப்படவில்லை எனவும் சொல்கிறார். அதற்காக அவர்களை உலகெங்கும் இருந்து ஏன் பாலஸ்தீன நிலப்பரப்பிற்குள் குடியேற்றவேண்டும். பூர்வீகமாக அங்கிருக்கும் மக்களது நிலங்களைத் திருடிவிட்டு அங்கிருந்து அம்மக்களை வெளியேற்றி அகதிகளாக அலையச் செய்ய வேண்டும் என்கிறார் தபாசி. கிட்லர் யூதர்களுக்குச் செய்த கொடுமைக்கு பாலஸ்தீனர்களை ஏன் பழிவாங்க வேண்டும் என்கிறார் அவர். பாலஸ்தீன நிலம் பாரம்பரியமாக இஸ்லாமியர். கிறித்தவர். யூதர் என பல்லின மக்களுக்கு உரியது. அதனை ஏன் யூதர்களுக்கென ஆக்கவேண்டும் எனக் கேட்கிறார் தபாசி.

பாலஸ்தீன மக்களின் பிரச்சினை இதுதான்: அவர்களது நிலம் திருடப்பட்டது. அவர்களது பயிர்கள் மரங்கள். கனிகள். காற்றின் மணம். நீர்நிலைகள். மலைகள். அவர்களது மொழி. புதைகுழிகள். வழிபாட்டிடங்கள். நினைவுகள் என அனைத்தும் திருடப்பட்டுவிட்டது. எழுபது ஆண்டுகளாக அவர்கள் அலைந்து கொண்டேயிருக்கிறார்கள். அவர்களது உறவுகள். கிராமங்கள். வேலையிடங்கள். பாடசாலைகள். நூலகங்கள் என அனைத்தும் 25 அடி உயரச் சுவரினால் பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்நியர்களால் வன்முறையினால் திருடப்பட்ட தமது நிலத்தில் விலங்குகளால் பிணைக்கப்பட்ட அடிமை மனிதர்களாக பாலஸ்தீன மக்கள் இருக்கிறார்கள்.

தமது சொந்த நிலத்துக்கு அந்நியர்கள் பாலஸ்தீனர்கள். வாழ்தலும் மரணமும் சமநொடியில் அனுபவமாக இருக்கும் நிலை இது. இந்த நொடியுகம்போன்றது. மயான அமைதி கொண்டது. கனத்த மனநிலையில் உதடுகளின் இடையில் அபத்தப் புன்னகையை வரவழைப்பது. பாலஸ்தீன மக்களின் இந்தக் கூட்டு மனநிலை. கோபம். கையறுநிலை. மரணபயம். இடைவெளியில் உயிர்ப்புக்கான வேட்கையுடன் வெடிக்கும்

> 'ஒடுக்குமுறைக்கு எதிராக பாலஸ்தீனக் கொடியை உயர்த்தும் நான். பாலஸ்தீனம் ஒரு அரசாக ஆகிய பின்னால் அரசுகளுக்கே உரிய ஒடுக்குமுறையின் தன்மையைக் கொஞ்சமாகவேனும் அது கொண்டிருக்குமானால் அந்தக் கொடியைக் கீழே இறக்க நான் போராடுவேன்' என்கிறார்.

அபத்தக்கெக்கலி என்பதாகவே எலியா சுலைமானின் படங்கள் இருக்கின்றன.

நிரந்தரமான இடமற்றவனாக இருக்கும் பாலஸ்தீன மனிதன். நியூயார்க்கிலிருந்து இஸ்ரேலின் பகுதியாக இருக்கும் தனது பூர்வீக நிலமான நாசரேத்திற்குத் திரும்புவதும். நாசரேத்திலிருந்து

பாலஸ்தீனம் என இன்று அழைக்கப்படும் மேற்குக் கரைப் பிரதேசமான ரமல்லாவுக்குத் திரும்புவதும் குறித்ததுதான் எலியா சுலைமானின் மூன்று படங்கள். இந்தப் பிளவுபட்டிருக்கும் இரு நகரங்களும் ஒரு போது பிளவுபடாத பாலஸ்தீன நிலத்தின் ஒன்றிணைந்த நினைவுகள். நினைவுகளின் தகர்வும். ஒன்றிணைந்த நினைவுகளைத் தேடி இஸ்ரேலிய அரசின் ராணுவச் சாவடிகளையும் மதில்களையும் கடந்து செல்லுவதுமான எலியா சுலைமானின் வன்மையான யாத்திரையாகவே மூன்று படங்களும் உருவாகியிருக்கிறது. இந்த மூன்று படங்களிலும் மிக அதிகமான உலகக் கவனிப்பையும்

(17ஆம் பக்கம் பார்க்க)

## மீதமிருக்கும் நேரம்...

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

விவாதங்களையும் தூண்டிய படமாக இருப்பது 'த டைம் தட் ரிமைன்ஸ்'.

பாலஸ்தீன மக்களுக்கு முன்னிருப்பது இன்று முழு அழிவுக்கும் முன்பான மீதமிருக்கும் காலமோ எனத் தான் அஞ்சுவதாக எலியா சுலைமான் குறிப்பிடுகிறார். என்றாலும். எதேச்சாதிகார அரசுகளை வீழ்த்திய அரபுப் புரட்சி அந்தக் காலத்தை நகர்த்திச் செல்வதாக தனக்கு நம்பிக்கை வந்திருப்பதாகப் பிற்பாடான தனது நேர்காணல்களில் சொல்கிறார். த டைம் தட் ரிமைன்ஸ் படம் 1948 ஆம் ஆண்டு இஸ்ரேலிய ஆயுதப் படைகள் நாசரேத் நகரைக் கைப்பற்றும் சம்பவங்களுடன் துவங்குகிறது. படம் எந்தக் காலத்தைத் தனது கதைகூறு களமாகக் கொண்டிருக்கிறது என்பதனை எகிப்து அதிபர் நாசரின் மரணம் சொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் தொலைக் காட்சிச் செய்தி. இஸ்ரேலியக் காவலரின் கிழக்கு ஆசிய மருத்துவத் தாதியான மனைவி பாடும் டைடானிக் படப்பாடல் என்பதாகக் குறித்துச் செல்கிறது படம். டைட்டானிக் படம் 1997 ஆம் ஆண்டு வெளியானது. எலியா சுலைமானின் பெற்றோரின் வாழ்வு குறித்த இந்தப்படம் அவரது அன்னை மருத்துவமனையில் மரணப் படுக்கையில் இருக்கும் காட்சியுடன் முடிவு பெறுகிறது. தனதும். தனது பெற்றோருடையதும் ஐம்பதாண்டு வாழ்வு குறித்ததாக த டைம் தட் ரிமைன்ஸ் படத்தை உருவாக்கியிருக்கிறார் எலியா சுலைமான்.

இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை எதிர்த்து துப்பாக்கி ஏந்திப் போராடும் பவுத் சுலைமான். போராளிகளுக்கு துப்பாக்கி தயாரிக்கும் கடைசல் எந்திரத் தொழிலாளி சுலைமான். சித்திரவதை செய்யப்பட்டு உயிர் பிழைக்கும் இதய சத்திர கிசிச்சை செய்யப்பட்ட மத்தியதர வயது சுலைமான். நாசரேத் கடற்கரையில் நண்பருடன் இரவில் மீன்பிடிக்க. லெபனானிலிருந்து ஆயுதம் கடத்தியதாகக் கைது செய்யப்படும் சுலைமான் உடல்தளர்ந்த நிலையில் இன்னொரு தலைமுறை பாலஸ்தீன இளைஞர்கள் யுவதிகளின் இஸ்ரேலிய அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை வேடிக்கைபார்க்க மட்டுமே செய்யும் சுலைமான் சதா கெரசின் கேனுடன் தற்கொலை செய்துகொள்ள முனையும் அண்டை வீட்டு முதியவரைக் காப்பாற்றும் சுலைமான் என அவரது தந்தையின் வாலிப நாட்களும் அந்திம நாட்களும் பற்றியது த டைம் தட் ரிமைன்ஸ் படக்கதையின் ஒரு கண்ணி. தந்தையின் அனைத்து நகர்வுகளிலும் ஒன்றித்து இயங்கி அவரது மரணத்தின் பின் முழுமையாக மௌனியாகி உன்மத்த மனநிலையில் மரணிக்கும் சர்க்கரை வியாதி பாதித்த அன்னை கதையின் பிறிதொரு கண்ணி. பெற்றோரின் நினைவுகளான இந்த இரண்டு கதைத் தாரைகளையும் இணைத்தபடி கடந்த காலத்தினதும் நிகழ்காலத்தினதும் வாழ்வு மற்றும் அரசியலின் சாட்சியமாக வாழ்கிறார் எலியா சுலைமான்.

பள்ளிச் சிறுவனாக வாலிபனாக தந்தையின் மரணத்தின் பின்பான தனையனாக வயோதிபத் தாயைப் பராமரிக்கும் நரைத்த மத்தியதரவர்க்க மனிதனாக வாழ்ந்திருக்கிறார் எலியா சுலைமான். இன்னும் இரண்டு காட்சிகளைச் சொல்லவேண்டும். ஓர் இளைஞன் குப்பையைப் போடுவற்காக தெருவின் மறுமுனையிலிருக்கும் குப்பைத் தொட்டியை நோக்கிவருகிறான். அவனது வீட்டின் முன்பாக இஸ்ரேலிய டாங்கி நிற்கிறது. டாங்கியின் குழல் இளைஞனைக் குறிவைத்து முன்னும் பின்னும் நகர்கிறது. இளைஞன் அது குறித்துக் கண்டு கொள்வதே இல்லை. குப்பையைப் போட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்பும் முன்பு அவனது கைத்தொலைபேசி அடிக்கிறது. அது அவனது காதலியாகவோ நண்பனாகவோ இருக்கலாம். தொலைபேசிக்குப் பதில் சொல்லிக் கொண்டு தெருவில் ஒரு முனைக்கும் மறுமுனைக்கும் நடக்கிறான். அன்று இரவு ஒரு நடன விருந்து இருப்பதாகவும். பல புதிய பாடல்கள் வந்திருப்பாகவும் தொலைபேசியில் பதிலிறுக்கிறான் இளைஞன். இந்த உரையாடல் முழுவதிலும் டாங்கியின் குழல் இளைஞனைத் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. இந்தக் காட்சியின் அழகு அந்த இளைஞனின் கண்டுகொள்ளாத ஆன்மபலத்திலும் அலட்சியத்திலும் இருக்கிறது.

பிறிதொரு காட்சியில் இளைஞர்களும் யுவதிகளும் பாலஸ்தீனக் கொடியை ஏந்தியபடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ராணுவத்தினர் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறார்கள். அந்தவழியில் கறுப்புக் கண்ணாடி அணிந்த பெண் தள்ளுவண்டியில் தனது குழந்தையை வைத்துத் தள்ளிக் கொண்டு வருகிறாள். ராணுவத்தினன் அப்பெண்ணைப் பார்த்து 'சீக்கிரம் வீட்டுக்குப் போ' என்கிறான். தள்ளுவண்டியை சாவகாசமாக மெதுவாக நிறுத்தும் பெண் தனது கறுப்புக் கண்ணாடியை முன் தலைக்கு ஏற்றிவிட்டுவிட்டு 'என்னையா வீடு போகச் சொல்கிறாய் நீ? முதலில் நீ உன் வீட்டுக்குப்போ என்று சொல்லிவிட்டு குழந்தையுடனான தள்ளுவண்டியை நகர்த்தத் துவங்குகிறாள்.

கிரேக்கத்தின் தியோ ஆஞ்சல பெலொஸ் அமெரிக்காவின் பஸ்டர் கீட்டன் ஜப்பானின் ஓசு சீனாவின் சிகோ சியன் போன்றோர் தமது திரை ஆதர்சங்கள் என்கிறார் எலியா சுலைமான். ஓவியரும் கலை விமர்சகருமான ஜான் பெர்ஜர் தத்துவவாதிகளான பெனான் வால்ட்டர் பெஞ்ஜமின் கவிஞரான பிரைமோ லெவி போன்றோர் தனது அறிவாதர்ஷங்கள் என்கிறார் எலியா சுலைமான். கலை மனித விமோசனத்திற்கானது என்று கருதுகிற எவரும் ஆரத் தழுவிக் கொள்ளக்கூடிய திரைக் கலைஞன் எலியா சுலைமான்.

சம்பவங்களும் காட்சிகளும் கலைத்துப்போட்டபடி கிடக்கின்றன. அதிகமும் படத்தொகுப்புக்கு ஆட்படாத மிக நீள நீளமான காட்சிகள். மௌனம் மட்டுமே மொழியாகும் அதிநீண்ட காட்சிகள். அந்தந்தக் காலத்தில் குறித்த தலைமுறையினரை உன்னத மனநிலையில் வைத்திருந்த பாடகர்களின் குரல்கள் இசைத் தட்டுகள் திரும்பத் திரும்ப கொஞ்சமே மாறுதலுடன் நிகழும் நிகழ்வுகள் நடன அசைவுகள் போன்ற ஒத்திசைவும் லயமும் கொண்ட மனிதர்களின் நடவடிக்கைகள் ஒரு நொடிக்கும் மறுநொடிக்கும் இடையிலான காலம் ஓர் அடிக்கும் மறுஅடிக்கும் இடையிலான இடம் போன்றவற்றை இசைவாக்கும் திட்டமிட்டபடியிலான காமெராவின் நிலைத்த பார்வை என ஓர் இசைக்கோர்வை போன்றது எலியா சுலைமானின் திரைமொழி.

## அடுத்துவரும்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருவதாகவும் கூட்டமைப்பினர் வெளிப்படையாக கூறுகின்றனர். அவர்கள் கூறுவதுபோன்று சர்வதேச ஆதரவு அவர்களுக்கு இருப்பது உண்மையாயின். தெரிவு குழுவுக்குள் செல்வதில் உள்ள ஆபத்துக்கள் தொடர்பாகவும். அதற்குள் செல்ல முடியாது என்பதற்கான நியாயங்களையும் சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்தி சர்வதேச ஆதரவை திரட்டுவதில் எவ்வித தடையும் இருக்க முடியாது. அவ்வாறு செய்யாமல் ஒருபுறத்தில் தம்மை சர்வதேச சமூகம் அங்கீகரித்துள்ளதாகவும். தமது கருத்துக்களையே சர்வதேசம் கருத்தில் கொள்கின்றது என்றும் கூறிக்கொண்டு மறுபுறுத்தில் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கின்றது என்று கூறி தெரிவுக் குழுவுக்குள் செல்ல முற்படுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

### ஐ.நா.மனித உரிமைகள் கூட்டத்தொடர்

அடுத்த முக்கிய விடயமாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பத்தொன்பதாவது கூட்டத்தொடர் அமைகின்றது. அத் தொடரின் கடந்த அமர்வில் சிறீலங்கா தொடர்பாக சர்வதேச சமூகத்தினால் ஆக்க பூர்வமான ஓர் நிலைப்பாடு எடுக்கப்படாமல் போனமைக்கு காரணம். சிறீலங்கா அரசு நியமித்திருந்த கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவர இருந்தமையாகும்.

தற்போது அந்த அறிக்கை வெளிவந்துள்ளது மட்டுமல்ல அந்த அறிக்கை சர்வதேச சமூகம் எதிர்பார்த்தது போன்று போர் காலத்தில் இடம்பெற்ற குற்றங்கள் பற்றி பொறுப்பு கூறுவது தொடர்பாக எந்தவொரு பொறிமுறையையும் உள்ளடக்கி இருக்கவில்லை என்பது அனைவருக்கும் தெரிந்ததே. . அது தொடர்பாக சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் அனைத்தும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை கடுமையான விமர்சனத்திற்கு உட்படுத்தி. சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை ஒன்று நடாத்த வேண்டும் என்ற நிலைப் பாட்டையும் முன்வைத்துள்ளனர். தமிழ் தேசிய கூட்டமைப்பு கூட நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை வெளிவந்ததும் அதனை நிராகரித்ததுடன். ஒரு பக்கச் சார்பற்ற விசாரணை அவசியம் என்பதனையும் வலியுறுத்தியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு செய்ய கூடிய பொருத்தமான செயற்பாடு தனது செல்வாக்கை பயன்படுத்தி ஐ.நா மனித உரிமை பேரவை அமர்வுகளில் கலந்து கொண்டு. தமிழ் தேசத்தின் நியாயபூர்வமான எதிர்பார்ப்பை. அதாவது தமிழ் தேசத்திற்கு எதிராக நடைபெற்ற மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இன அழிப்புத் தொடர்பாக ஓர் சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணையை வலியுறுத்த வேண்டும். எதிர்வரும் காலங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பு இந்த விடயம் தொடர்பாக எவ்வாறு செயற்படப் போகின்றது என்பது வெளிப்படும். ஆனாலும் அண்மைக் காலமாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் மிக முக்கிய தலைவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள் ஆராயப்பட வேண்டியது அவசியமாகின்றது.

கைது செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் பல ஆயிரக்கணக்கானோர் எங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி எதுவுமே தெரியாத குழப்பகரமான நிலையில். அவர்கள் படுகொலை செய்யப்படுகின்றனர் என்ற தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. மேலும் தடுப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் மீண்டும் கடத்தப்படுவதும். அச்சுறுத்தப்படுவதும். சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதும். விசாரணை என்ற பெயரில் முகாம்களுக்கு அழைக்கப்பட்டு உளரீதியான சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதும் தொடர்ந்து கொண்டிருக்கின்ற நிலையிலும். ஐ.நா. மனிதஉரிமை பேரவை கூட்டத்தொடர் ஆரம்ப மாகவுள்ள நிலையிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் முன் னாள் போராளிகள் அரசாங்கத்தி னால் சிறந்த முறையில் "புனர் வாழ்வு" அளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும் கூறி அரசுக்கு பாராட்டு தெரிவித்து 15-02-2012 திகதிய டெய்லிமிரர் ஒன்லைன் இணையத்திற்கு கருத்து கூறியுள்ளார். இது மட்டுமல்லாமல் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கடந்த 14-02-2012 அன்று பிபிசி சிங்கள சேவைக்கு வழங்கியுள்ள செவ்வியில் "தமிழ் தேசிய கூட்டமைப்பு எல்.எல்.ஆர்.சி ன் ஆலோசனைகளை நடைமுறை படுத்துவதற்கான ஓர் உள் நாட்டு பொறிமுறையை ஆதரிக்கின்றது" அத்துடன். "இது தோல்வியில் முடிந்தால் மட்டுமே சர்வதேச விசாரணை ஒன்றை நாம் கோரவேண்டும்" என்றும் கூறியுள்ளார்.

மேற்கு நாடுகள் அமெரிக்காவின் தலைமையில் மனித உரிமை கூட்டத் தொடரில் சிறீலங்காவுக்கு எதிரான தீர்மானம் ஒன்றினை நிறைவேற்ற இருப்பதான செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கும் பின்னணியில், தமிழ் தேசிய கூட்டமைப்பின் முக்கிய தலைவர்களது இக்கருத்துக்களானது, தமிழ் இனத்திற்கு பெரும் அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் வழங்குவதாக உள்ளது. அது மட்டுமல்ல சர்வதேச சமூகம் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் சிறிலங்கா அரசிற்கு எதிராக எடுக்க கூடிய தீர்மானங்களில் இருந்து சிறீலங்கா அரசாங்கத்தை பாதுகாத்து தமிழ் மக்களுக்கு மீள முடியாத பாதிப்பையும் ஏற்படுத்துவதாக அமையப்போகின்றது. இது சிறீலங்கா அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு துணைபோவதாகவும் அமைந்துள்ளது.

இந்த பின்னணியில் தமிழ் தேசத்தின் எதிர்காலத்தினை பாதுகாப்பதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பு இப்பாதையில் செல்வதனை தடுத்து நிறுத்துவதற்காக தமிழ் மக்கள் காத்திரமான அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும்.

## சுமந்திரன்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுமந்திரன் உரையாற்றும் போது தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு மக்கள் ஆணை கொடுத்துள்ளனர் இந்த ஆணையை எவரும் திரிபுபடுத்தக்கூடாது. புலம் பெயர் மக்கள் வடமாகாணசபை தேர்தலில் மக்கள் அளித்த வாக்குகளை அரசுக்கெதிரான வாக்குகள் என கூறப்பாரக்கின்றார்கள். இது தவறானதாகும். கூட்டமைப்பின் கொள்கைகளுக்காகவே மக்கள் வாக்களித்துள்ளனர்.கொள்கையை விளங்கித்தான் மக்கள் வாக்களித்திருக்கின்றனர்.நாம் தனி நாட்டு கோரிக்கைக்கு எதிரானவர்கள். பிறிக்கப்பட முடியாத ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரங்களை பகிர்ந்து கொள்ளும் அரசியல் தீர்வினை முன்வைத்தோம். மக்கள் அதனை விளங்கித்தான் எமக்கு வாக்களித்திருக்கின்றனர்.

எங்களுடைய அரசியல் நிலைப்பாட்டிற்கு நீங்கள் எவரும் கைதட்டமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். (சபையினர் கைதட்டல்) ஆனால் ஒரு போதும் எமது அரசியல் நிலைப்பாட்டினை நாம்கைவிடப் போவதில்லை என்றார்.

சுமந்திரன் தனது உரையை முடித்தவுடன் வெளியேறிவிட்டார் அதனைத் தொடர்ந்து மாவை உரையாற்றினார்.

மாவையின் உரை சுமந்திரனின் உரைக்கு மாறாக இருந்தது. மக்கள் தாயகம். தேசியம். சுயநிர்ணயம் என்ற அடிப்படையிலேயே வாக்களித்ததாக குறிப்பிட்டார். இவ் வாக்குகள் அரசுக்கு எதிரான வாக்குகள் என்றும் குறிப்பிட்டார். "தமிழீழம்" என்ற சொல் பயன் படுத்தபடவில்லை என்பதை தவிர ஏனைய வகைகளில் தீவிரமான உரையாக இருந்தது.

உரை முடிந்த பின் பார்வையாளர்களில் சிலர் சுமந்திரனின் உரைக்கும் உங்களின் உரைக்கும் முரண்பாடு உள்ளதே என மாவையை கேட்டனர். சுமந்திரன் எனது உரைக்கு மாறாக பேசினாரா? என அவர்களையே மாவை திருப்பிக்கேட்டார்.இறுதியாக அனந்தி பேசினார் அவரை யார் என அறிமுகப் படுத்திய போது மக்கள் எழுந்து நின்று கைதட்டினர். மக்கள் இலட்சியத்திற்காகவே வாக்களித்தனர் என அவர் குறிப்பிட்டார்.

கஜேந்திரகுமார் காலையிலே பேசியதையே மீண்டும் பேசியிருந்தார்.

மொத்தத்தில் கஜேந்திரகுமார். குருபரன். அனந்தி ஆகியோரின் உரைகளுக்கு பார்வையாளர் மத்தியில் இருந்து பலத்த வரவேற்பு கிடைத்தது.

இனி வரும் காலங்களில் புலம் பெயர் மக்கள் ஒழுங்கு செய்யும் நிகழ்வுகளில் கூட்டமைப்பினர் கலந்து கொள்வதாயின் கஜேந்திரகுமார் கலந்து கொள்ளக் கூடாது என நிபந்தனை விதித்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

# என் தாயுமானவளுக்கு

நெற்றிப் பொட்டில் முகிழ்த்தெழுந்து
வேர்கொண்டகன்று
நீண்டு வளர்ந்து
கிளைவிரித்து உயர்ந்துயன்று
தலை முழுதும் சுழன்று பரவும்
வலி
நீயில்லா வலி.

சிந்தனைகளின் அழுத்தலில் - கேள்விகளின்
குடைதலில்
தலைக்குள் குருதி
தறிகெட்டு தரை தகர்த்து குமுறிப் பாய
நரம்புகள் பின்னிப்பிணைந்து
இறுகித் தெறித்து
வெடித்துச் சிதறக் கூடும்

நானும் சிதையக்கூடும்
சீக்கிரம் வந்துவிடு..
........................
அடிக்கடி
நீ அருகிலிருப்பதாய் தோன்றுவதெல்லாம்
பொய்பொய்யென
பிரமைதானென
உணர்ந்துணர்ந்து உள்குறுகும்போது
கண்முன்னே மயிர்பிடுங்கும் வேதனையில்
மனசு மருகுகின்றது.
சீக்கிரம் வந்துவிடு.
................
நெஞ்சம் நெகிழ்ந்து நெகிழ்ந்து
நெக்குருகி- உடல் நடுங்கி
நீயில்லா ஏக்கம் நிரம்பி
வழிய நிற்கிறேன்.

சீக்கிரம் வந்துவிடு.
......................
ஒற்றைக் குயிலின் அழுகையின் நீட்சியில்
எழுகிறது என் சோகம்
பொழியும் மழையின் ஒவ்வொரு துளியிலும்
வழிகிறது என் கண்ணீர்
தனிமை தனிமை தனிமை
தனிமை தலைவிரித்தாடுகிறது

சீக்கிரம் வந்துவிடு
.......................
விரக்தி மிகுந்த வெறுமையும்
வெறுமை நிறைந்த விரக்தியும்
விரவி நிற்கும் -
கையறு நிலையில்
மெய்யது தவிக்க
எற்றுண்டு கிடக்கிறேன்
கணங்களின் கரையோரம்...

சீக்கிரம் வந்துவிடு
.............
தாங்கவொண்ணாத்
துயரமாயிருக்கினறது
உன் பிரிவு...

சீக்கிரம் வந்துவிடு.
................................

- தமிழினி

# நரித்தனத் துரோகிகள்

நாய் முயலை கட்டிக் கொஞ்சினால்
பூனை எலியைக் கட்டிக் கொஞ்சினால்
பல்லி ஈசலைக் கட்டிக் கொஞ்சினால்
கீரி பாம்பினை கட்டிக்கொஞ்சினால்

இப்படி எதிரியும் எதிரியும்
ஒருவருக்கொருவர் கொஞ்சினால்
அன்பனாய் கட்டிக் கொஞ்சலாம்...!
ஆனாலும்,
துரோகிகளை நாம் எப்போதும்
மன்னிக்கமாட்டோம்
மன்றாடி கால் தூசி துடைத்து
பிழைப்போர் கொட்டங்கள்
அடங்கும் தூரம்
வெகுதொலைவில் இல்லை!

புலி சிங்கத்தை
அசிங்கமாய் பார்க்கும்
பொறுத்திருந்து பாயும்
அந்தப்பாய்தலில்
சிங்கம் சிதையும்
நரித்தனத் துரோகிகளும் எரிவர்
தமிழ் தேசம் மலரும்..!

- சமரபாகு சீனா உதயகுமார்

# மண் காட்டிக் கொடுத்தது!

அந்தக் கொலைகாரர்கள்
இந்த உடல்களை
எங்கே புதைத்தார்கள்
என்று எவருக்கும் தெரியாது

ஆனால் சிந்தப்பட்ட குருதியை
மீளப்பெற
மக்களின்
மீளெழுகைக் காலத்தில்
அவர்கள் உயிர்த்தெழுவார்கள்
நகரத்து மையத்தில்
அந்தக் குற்றம் நிகழ்ந்தது

அந்த மக்களின்
தூயகுருதியை
முட்பற்றைகள் மறைக்கவில்லை
பம்பாவின் மண்ணாலும்
அது உறிஞ்சப்படவில்லை

எவரும் இந்தக் குற்றத்தை
மறைக்கவில்லை
நகரத்து மையத்தில்
அந்தக்குற்றம் நடந்தது.

-பப்லோ நெரூடா (சிலி)
தமிழில் வின்சென்ற் புலோறன்ஸ் - குருநகர்

## கமரூனின்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவாகவும். பிரித்தானியாவிற்கு எதிராகவும் கோசங்களை எழுப்பியவாறும். சுலோகங்கள் ஏந்தியவாறும் சுமார் 35 பேர் நின்றிருந்தனர். கமரூனின் கவனத்தை ஈர்க்கக்கூடியவகையிலேயே அவர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர். சுலோகங்களும் கணணியில் வடிவமைக்கப்பட்டு நேர்த்தியாகவே இருந்தன. பொலீசார் அவர்களை அப்புறப்படுத்துவதற்கு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

பொதுநூலகத்திற்கு கமரூன் வந்ததை அறிந்தமக்கள் அதனை நோக்கிஓடினர். நூலகத்திற்கு செல்லும்பாதையில் தந்தை செல்வா நினைவுத்தூபி அருகே பொலீசார் அவர்களை வழிமறித்தனர். இங்குதான் மக்களுக்கும், பொலிசாருக்குமிடையே வாக்குவாதங்களும், தள்ளுமுள்ளுகளும் இடம்பெற்றன. பொலீசார் தமது வாகனங்களை குறுக்கே நிறுத்தியது மல்லாமல் கைகோர்த்து வரிசையில் நின்றுவழிமறித்தனர். மக்கள் முன்னேற முயல்வதும், பொலீசார் தள்ளுவதுமாக நிலைமைகள் இருந்தன. மீறி முன்னேற முற்பட்டவர்களை பொலீசார் தாக்கவும் தயங்கவில்லை. ஒருகட்டத்தில் மக்களின் முயற்சி அதிகரிக்கவே பொலீசார் வாகனத்தில் இருந்த பொல்லுகளை கையில் எடுத்தனர். பொலீசார் மக்களைத் தாக்கினர். கத்தோலிக்க மதகுரு ஒருவர் கீழேவிழும் அளவிற்கு தாக்குதல் நடந்தது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரனுக்கும் வயிற்றில் குத்துவிழுந்தது. எனினும் மக்கள் தடுப்பை உடைத்துக்கொண்டு நூலக வாசலைநோக்கிஓடினர்.

இந்நேரத்தில் கமரூனின் வாகனம் நூலகத்திலிருந்து வெளியேறுவதை கண்டனர். அவரது வாகனத்தை நோக்கி ஓடினர். அனந்தி அவரது வாகனத்தை நெருங்கினார். ஆனால் அவரது வாகனம் கடந்து சென்றுவிட்டது.

இரண்டாவதாகவந்த வாகனத்திலிருந்தவரிடம் வெளிநாட்டவர் எனக்கருதி அனந்தி தனது மகஜரை அந்த வாகன கண்ணாடியூடாக அவரது கையில் திணித்தார். அப்போதுதான் அந்த வாகனத்திலிருப்பவர் சுமந்திரன் என தெரிந்துகொண்டார். ஏளனச் சிரிப்புடன் மகஜரை கையில் பெற்றுக்கொண்ட சுமந்திரன் தனது வாகனத்தை நிறுத்தாமலே சென்றுவிட்டார்.

இந்த அமளியை கண்ட விக்கினேஸ்வரனின் வாகனம் பின்நகர்த்தப்பட்டு மணிக்கூட்டு வீதியால் சென்றுவிட்டது. தொடர்ந்து வெளிநாட்டு ஊடகவியலாளர்களது வாகனம் வந்தது. மக்கள் அதனை சூழ்ந்து நின்று காணமல்போனவர்களின் புகைப்படங்களையும் ஏந்தியபடிகதறி அழுதனர். அந்த ஊடகவியலாளர்கள மக்களுடன் கலந்துரையாடி அவர்களது சோகக் கதைகளை ஆவணப்படுத்தியதுடன். மக்கள் கொடுத்த கடிதங்களையும் பிரதமரிடம் கொடுப்பதற்காகப் பெற்றுக்கொண்டனர்.

கடைசியாக ஒருவாகனம் வந்தது. வெளிநாட்டுப் பிரமுகர் எனநினைத்துமக்கள் அதைநோக்கியும் ஓடினர். வாகனத்தை வழிமறித்தனர். வாகனத்தின் கண்ணாடியைத் தூக்கிப் பார்த்தபோது அதிலிருந்தவர் சம்பந்தன். அவரை இறங்கி மக்களுடன் பேசுமாறு கத்தோலிக்க மதகுருவேண்டினார். சம்பந்தன் மறுத்துவிட்டார். மக்களின் கோபம் அதிகரித்தது. அவர்கள் தங்கள் கைகளினால் வாகனத்தைத் தாக்கினர். துரோகி, பொறுக்கி எனகேட்கக்கூடாதவசனங்கள் மக்களது வாயிலிருந்துவந்தன. பொலீசார் வாகனத்தை சூழநின்ற மக்களை அகற்றி நூலகத்தின் பின்பக்கத்தால் செல்வதற்கு வழிசெய்தனர். மக்கள் சம்பந்தன் அல்லது முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோரில் யாராவதுவந்து தங்களை சந்திக்கும்வரை வீதியைவிட்டு அகலமாட்டோம் என நூலகேற் வாசலில் அமந்தனர். எனினும் இறுதிவரை அவர்கள் யாரும்வராதநிலையில் மக்கள் ஆத்திரத்துடன் கூட்டமைப்பினரைத் திட்டித்தீர்த்தவாறு அவ்விடத்தைவிட்டுச் சென்றனர்.

உண்மையில் இலங்கை அரசிற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட அன்றய போராட்டம் அரசைக் காப்பாற்ற முயன்ற தமிழ் தேசியக் கூட்டமைபின் தலைவருக்கும். விக்னேஸ்வரனுக்கும் எதிரான போராட்டமாக முடிவடைந்தது.

காணாமல் போனவர்களது அரசுக்கு எதிரான போராட்டத்தை கலைந்துபோகச் செய்வதற்கும். டேவிட் கமரூனதும். சர்வதேச ஊடகங்களினதும் கண்களில்படாது மூடிமறைப்பதற்கும் உளவுத்துறையும் பொலீசாரும் பகீரதப் பிரயத்தனத்தை மேற்கொண்டிருந்தனர். அவர்களது குழப்ப முயற்சியை முறியடிக்க போராட்ட ஏற்பாட்டாளர்களுடன் கஜேந்திரகுமார். கஜேந்திரன். மணிவண்ணன் ஆகியோர் உடனிருந்து போராட்டத்தை வலுப்படுத்த உதவினர். இப்போராட்டத்தின் போது பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனை மட்டுமே அங்கு காணமுடிந்தது. ஏனைய அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் மாவிட்டபுரத்தில் ஒழிந்திருந்தனர்.

பொதுநூலக நிகழ்வைத்தொடர்ந்து கமரூன் உதயன் பத்திரிகைக் காரியாலத்திற்குச் சென்று. அதன் முன்னைய அழிவுகளைப் பார்வையிட்ட பின்னர் சுன்னாகத்தில் இடம்பெயர்ந்தமக்கள் தங்கியிருந்த சபாபதிப்பிள்ளை முகாமிற்குச் சென்றார். இதன்போதும் கே.கே.எஸ் பிரதான வீதியிலிருந்து முகாமிற்குத் திரும்பும் ஒழுங்கையின் மூலையில் அரசுக்கு ஆதரவானவர்கள் கமரூனுக்கு எதிராக சுலோகங்களைத் தாங்கியபடி நின்றனர். முகாமில் இருந்த மக்களுக்கு முன்கூட்டியே கமரூன் அங்கு வருவார் என்பது தெரிவிக்கப்படவில்லை. அங்கு தமது அவலங்களை தெளிவாக வெளிப்படுத்தக் கூடிய ஆட்கள் இருக்கவில்லை. ஏனெனில் முகாமிலிருந்தவர்களில் பெரும்பான்மையானோர் மாவிட்டபுரத்திற்கு கமரூன் வருவார் என்று நம்பிக்கை கொடுக்கப்பட்டு அங்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

இதன் பின்னர் கமரூன் கொழும்பிற்குத் திரும்பிவிட்டார். ஆனால் சுமார் இரண்டாயிரம் வரையான மக்கள் கமரூன் மாவிட்டபுரத்திற்கு வருவாரெனகாத்து நின்றனர். கடைசிநேரத்தில் கமரூன் வரமாட்டார் என மாவிட்டபுரத்தில் காத்திருந்த மக்களுக்கு மாவை அறிவித்தபோது மக்கள் ஏமாற்றம் அடைந்தனர். குளிர்பானத்தையும் அருந்தாமல் பலர் கோபத்துடன் வெளியேறினர்.

பொதுநூலகத்தில் கூட்டமைப்பினருக்கும், கமரூனுக்கும் இடையேதான் சந்திப்பு இடம்பெற்றது. கூட்டமைப்பின் சார்பில் மும்மூர்த்திகளான சம்பந்தன், விக்கினேஸ்வரன், சுமந்திரன் என்போரே கலந்துகொண்டனர். கூட்டமைப்பின் ஏனைய தலைவர்கள் எவரும் சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை. முதலமைச்சருடனான சந்திப்பு என்றே இந்நிகழ்வுபற்றிக் கூறப்பட்டது. இதில் சுமந்திரனுக்கு எப்படி விசேடசலுகைகள் கிடைத்ததோதெரியாது. இச்சந்திப்பில் முதலமைச்சர் ஒற்றையாட்சிக்குட்பட்ட மாகாணசபை பற்றிமட்டுமே பேசியுள்ளார்.

காணாமல்போனோர்விவகாரம், சிறையில் உள்ள கைதிகளின் விடுதலைவிவகாரம், விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் போன்ற வர்கள் மீது பயங்கரவாத தடுப்பு பிரிவினராலும். இராணுவ உளவுத் துறையினராலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் விசாரணைகள் மற்றும் உளச் சித்திரவதைகள் விவகாரம், காணிப் பறிப்பு, சிங்களக்குடியேற்றம், பௌத்த மயமாக்கல் போன்ற கட்டமைப்பு சார் இனஅழிப்பு விவகாரம். அரசியல் தீர்வு விவகாரம் என்பனபற்றி வாயே திறக்கவில்லை.

கமரூன் நாடுதிரும்பியதும், பொதுமக்கள் சபையில் தன்னுடையபயணம் பற்றி உரை யாற்றினார். அதில் உதயன் பத்திரிகைக் காரியாலயம் தாக்கப்பட்டமை பற்றியும், சபாபதிப்பிள்ளைமுகாமில் இடம் பெயர்ந்தவர்கள் எதிர்நோக்கும் நெருக்கடி பற்றியும் கூறியிருக்கின்றார். இவை மனித உரிமை மீறல் விவகாரங்களே. அவர் கட்டமைப்புசார் இனஅழிப்புப்பற்றியோ அதனைத் தடுப்பதற்கு சாத்தியமான அரசியல் தீர்வு பற்றியோ எதுவும் பேசவில்லை. இவ்வாறு அவர் பேசாமல் போனமைக்குக் காரணம் அவரைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் இவ்விடயங்கள் பற்றி எதுவும் கூறாது விவகாரங்களை மூடிமறைத்தமையே.

வரலாறு இடைக்கிடைதான் சந்தர்ப்பங்களை உருவாக்கித்தரும். அதனைசரியாகப் பயன்படுத்தத்தாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை தான் மக்களைப் பொறுத்தவரை மிகப்பெரும் துரோகிகள்.

## அதிகாரமிக்க...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமர்த்தப்பட்டிருந்தார்கள். வயது வந்த ஆண்பிள்ளைகளிற்கு உள்ளாடைகள் இல்லை. ஆசிரியை ஒருவர் வாங்கிக்கொடுத்தமையினால் பிக்குவின் கடுங்கோபத்திற்கு ஆளாகினார். என்னை தவிர ஏனைய அனைவரும் பிக்குவிற்கு பயம்.

அஷோகா ஜராங்கனி தற்பொழுது அப்பாடசாலையில் இல்லை. அவர் கெபதிகொல்லாவ பகுதியில் ஆசியராக பணிபுரிகின்றார்.

போகவஸ்த முக்கள் பிக்குவினால் முன்னெடுக்கபடுகின்ற அராஜகங்கள் தொடர்பில் மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களிற்கு அறிவித்த பொழுதிலும் இதுவரை உரிய பதில் கிடைக்கவில்லை. ஏனைய விகாரைகளிலுள்ள விகாராதிபதிகளிற்கு அறிவித்த பொழுதிலும் அவர்களும் இப்பிக்குவிற்கு சார்பாகவே செயற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

**பிள்ளைகளின் உரிமைகள் மறுக்கப்படல்**

இச்சிறுவர் இல்லத்தில் தமிழ்ச் சிறுவர்கள் மாத்திரமே சேர்க்கப்பட்டுள்ளனர். ஒரு சில சிறுவர்கள் தமிழ் மொழியில் தரம் 5 புலைமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோராவர். விகாரையின் முன்பாக இருந்த பாடசாலையில் சிங்கள மொழி மூலமாகவே கல்வி நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தனர். இச்சிறுவர்கள் அனைவரையும் அதிகாரிகள் பெற்றோரிடம் ஒப்படைத்ததுடன் அப்பகுதியிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் தங்கள் கல்வி நடவடிக்கைகளை தொடர இயலாது பல இன்னல்களிற்கு மத்தியில் மீண்டும் இப்பாடசாலைக்கே வந்துள்ளனர். இன்று பல சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் சிறுவர்களை பெற்றோரிடம் ஒப்படைக்கும் செயற்பாட்டை அதிகாரிகள் நிறுத்தியுள்ளனர். எவ்வித சுகபோகங்களையும் அனுபவிக்காத இப்பிள்ளைகளை காட்டி இவ்விகாரை பல இலாபங்களை பெற்றுள்ளது.

இச்செய்தி இன்று வவுனியா முழுவதிலும் காட்டுத்தீ போன்று பரவியுள்ளது. தமிழ் மக்கள் இதுதொடர்பில் அதிருப்தியுற்றுள்ளார்கள். தம்முள் ஒருவரிற்கே இது நேர்ந்துள்ளதென கவலையடைந்துள்ளார்கள். அரசாங்கம் இப்பிக்குவிற்கு ஆதரவளிக்கின்றது எனும் கருத்தும் அப்பகுதி மக்களிடையே நிலை கொண்டுள்ளது.

நன்றி - ராவய (3.11.2013)

## கல்வயல்...

*(9ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*செய்திகளை பிரசுரிச்சு அநியாயத்தை செய்தது எத்தினைபேருக்கு தெரியும்.*

*வலிகாமம் வடக்கு இடம்பெயர்ந்த சனம் மட்டுமல்ல அனைத்து இடம்பெயர்ந்த மக்களும் தெளிவாக முடிவெடுக்கவேண்டியகாலம் இது. இந்த மாவை கொம்பனி போராட்டம் நடாத்திறது மக்களது பிரச்சினைகளை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்வதற்கல்ல மாறாக உண்மையில் மக்களது பிரச்சினைகளை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லக் கூடியவர்களது கைகளுக்கு இந்தப் இந்த மக்கள் சென்றுவிடக்கூடாதென்பதும், மக்களுக்காக தாம் போராடுவதாகக் காட்டி அடுத்த எலக்சனில வாக்குகளை பெறுவதும் மட்டுமேயாகும்.*

*வலி வடக்கு மக்களின் மீள்குடியமர்வு விடயத்தில் உண்மையான அக்கறை கொண்டிருக்கக் கூடிய சஜீவன் போன்றவர்களை ஒரங்கட்டி தங்கட கைப்பொம்மைகளை முக்கியபொறுப்புக்களுக்கு கொண்டுவருவதற்காக வலி வடக்கு இடம் பெயர்ந்த மக்களுக்கா புதிய அமைப்புக்களும் உருவாக்கிற சதிவேலைகள் நடந்திருக்குது.*

*காணாமல் போன தங்கட உறவுகளை தேடித்தேடி வருடக்கணக்காக அலைஞ்சு பலவீனப்பட்டுப்போனஅந்த தாய்மாரால, பொது சனநூலகத்திற்கு முன்னால நடத்தின ஒரு போராட்டத்தால உலகையே உலுக்க முடிஞ்சுது. ஆனால் அவ்வளவு துடிப்புமிக்கஇளம் சமூகத்திலிருந்து வலிவடக்கு இடம் பெயர்ந்த மக்களால் ஒன்றுமே செய்யமுடியாமல் போய்விட்டதே*

*அதுக்குள்ள சுமந்திரன் சொல்லுறார் காணாமல் போனோர் தங்களுடைய கோரிக்கை மகஜரை தன்னிடம் தந்தால் கமரூனிடம் ஒப்படைத்திருப்பாராம். சந்திப்பு முடிஞ்சு கமருனின்ர வாகனத்திற்குப் பின்னால் அவர் வரும்போது அவற்ர வாகனத்திற்குப் பக்கத்தில ஓடிப்போன அனந்தி எழிலனை சுமந்திரன் ஏளனமாக பார்த்து சிரித்தபோதும் அதனைப் பொருட்படுத்தாது அவர் அந்த மகஜரை சுமந்திரன்ரை கையில கொடுத்ததை உலக ஊடகங்கள் படம்பிடிச்சது அவருக்குத் தெரியாது. அந்த மகஜரை அவர் பிரதரிடம் கொடுக்காது மடக்கிவிட்டார் போலுள்ளது.*

*பொதுநூலக வாசலில வைச்சு சம்மந்தருக்கு சனம் கொடுத்த அர்ச்சனை தமிழின தலைவர் சம்மந்தனில் இராசதந்திரமெண்டு பக்கம் பக்கமாக எழுதி கொழும்பில வியாபாரம் செய்யிறவைக்கு கேட்டிருந்தால் நாண்டு கொண்டு செத்திருப்பாங்கள் சனம் என்ன மனோ நிலையில இருக்கு தெண்டு உலகுக்கு அங்க வைச்சு தெரிஞ்சிருக்கோணும்.*

*உண்மையில் கமரூனை சந்திச்சு கதைக்கேக்கை காணாமல் போன ஆட்கள் பற்றியோ வலிவடக்கு நில ஆக்கிரமிப்பு பற்றியோ ஏதும் பேசவேயில்லையாம். மொழி பெயர்ப்பாளர் தூதுவர் என்று ஆள் அணியளோட கமரூன் வந்து நிக்க சுமந்திரனோ பிலாக்காய்பபால் மாதிரி ஒட்டிக்கொண்டு திரிஞ்சவராம்*

*என்ன யாரேனும் இனப்படுகொலை அது இதெண்டு பேசி மகிந்தருக்கு கவலை தான் காரணமாம் அதிலையும் சனல் 4 காரர் பிரதமரை பேட்டிக் காணேயுக்கையும் இவர் ஒட்டிக் கொண்டு நிற்க கழுத்தப்பிடிச்சு தள்ளாத குறையாக வெளியில விட்டவங்களாம்.*

*ஒன்றமே இல்லாத மாகாணசபையைக் காட்டி சனத்தை ஏமாத்தி அரசியல் நடத்தலாமெண்ட உவையின்ர கனவு பொய்க்கதொடங்கியிட்டுது பாருங்கோ. ஒரு சாதாரண பியோனைகூட மாத்தி தங்களோடை பணியாற்ற வக்கில்லாமல் அறளை பேர்ந்ததுகள் மாதிரி புலம்பத் தொடங்கிவிட்டாங்கள் விரைவில் ஒப்பாரியை வடிவாகக்கேட்கலாம் நாங்கள் தெளிவா இருக்கோணும் எங்களுக்கு என்னதேவை எதுக்கு சண்டைபிடிச்சனாங்கள் தியாகங்கள் செய்தனாங்கள் அதுக்கு முதலில போவம் சரியோ...*





யாழில் காணமல் போனவர்களது உறவுகளின் போராட்டம்



சம்பந்தனின் வாகனத்தை வழிமறித்த காணாமல் போனோரின் உறவுகள்



வலி வடக்கு மக்களின் மாவிட்டபுரப் போராட்டம்




முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் தஞ்சாவூர்



முள்ளிவாய்க்கால் நினைவுக்கல் மொரிசீயஸ்




கிழக்கு மாகாணத்தில் மாவட்ட மட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் முதல் நிலை பெற்ற மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வின்போது...

இவ்விதழ் இல.13, 3ஆம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம் [illegible] இல் 01.12.2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.